பக்கங்கள்: இருபத்தெட்டு +2

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 02 புதன்கிழமை (19.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 327



09

தீபாவளியன்று உச்சிதனை முகர்ந்தால்



14

ஈழம் சிறையிலிருந்து வெளியேறினேன்



21

பலவீனமானவர் மன்மோகன்சிங்



25

மண்டியிட்டது இலங்கை

# இலங்கையின் மனித உரிமை மீறல்கள்; பதிலளிக்காவிடின் அழுத்தம் அதிகரிக்கும்

## மீண்டும் எச்சரிக்கிறது அமெரிக்கா

கொழும்பு, ஒக்ரோபர் 19

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசு உடனடியாக பிரதிபலிப்பை வெளிப்படுத்த வேண்டுமென்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறையின் பிரதிப் பேச்சாளர் மார்க் ரோனர், சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு உரிய பதிலை இலங்கை வழங்கத் தவறும் பட்சத்தில் சர்வதேச அழுத்தங்கள் மேலும்அதிகரிக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை அரசால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க மற்றும் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை இலங்கை மீதான குற்றச்சாட்டுகளுக்குச் சரியான பதிலாக இருக்குமா என்பது குறித்து அமெரிக்காவால் இப்போதைக்குக் கருத்து எதனையும் கூறமுடியாது. அந்த அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரே எதனையும் கூறமுடியும்.

குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டியது இலங்கை அரசின் பொறுப்பு. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசின் விசாரணைகள் வெளிப்படையானது என்பதை நிரூபிக்கவேண்டிய தேவை உள்ளது.

இலங்கை அரசு அந்தப் பொறுப்புகளை நிறை வேற்றத் தவறினால், சுதந்திரமான பொறிமுறை குறித்த அழுத்தங்களைச் சந்திக்க நேரிடும்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த உள்நாட்டுக்குள்ளேயே இதைச் செய்யவேண்டியது முக்கியமானது. இலங்கை அதனைத் தானாகவே செய்துகொள்ளும்

பக் 04

## வாசுதேவவிடம் சி.ஐ.டியினர் இன்று விசாரணை

கொழும்பு, ஒக்.19

பாரத லக்ஷ்மனின் கொலைச் சம்பவம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் இன்று விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்கத்துக்கான அமைச்சில் இன்று காலை இந்த விசாரணை இடம்பெறும் எனத் தெரிய வருகிறது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த விசாரணை இடம்பெறுகிறது என்றும், இதன்போது முக்கியமான சில விடயங்கள் தொடர்பாக சி.ஐ.டியினர் அமைச்சரிடம் கேள்வி எழுப்புவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்

பக் 04

# பாதுகாப்புச் செலவு இந்த ஆண்டை விடவும் ஆயிரத்து 321 கோடி ரூபாவால் அதிகரிப்பு

## 'பட்ஜெட்' நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் நேற்று சபையில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக்.19

2012ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மொத்த செலவினமாக ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 428 கோடியே 44 லட்சத்து 71 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்கென 23 ஆயிரத்து 4 கோடியே 30 இலட்சம் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை 2011ஆம் ஆண்டை விட ஆயிரத்து 321 கோடியே 11 இலட்சம் ரூபா மேலதிகமாகும்.

இந்தநிலையில் 2011 ஆம் ஆண்டை விடவும் 2012 ஆம் ஆண்டுக்கு வரவு செலவுத் திட்டத்தில் 15 ஆயிரத்து 176 கோடியே 67 லட்சத்து 5 ஆயிரம் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றில் பிரதமர் டி.எம்.ஜயரத்னவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒதுக்கப்பட்ட நிதிகளின் விவரம் வருமாறு:-

பக் 27

### பாரத கொலையில் பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர்

## சுயாதீனமாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாவிடின் பதவி விலக வேண்டும்

### ஆசிய மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஒக்.19

பாரத லக்ஷ்மன், பிரேமசந்திர உட்பட 4 பேரின் கொலை தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள துமிந்த சில்வாவுக்கு எதிராக, அரசியல் அழுத்தங்கள் காரணமாகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட முடியாது இருக்குமாயின், அதற்கு எதிர்ப்புத்தெரிவித்து பொலிஸ் மா அதிபரும், சட்டமா

பக் 26

# இலங்கைக்கு வர இருந்த ஆபத்தை முறியடித்தோம்

### நாடாளுமன்றில் பீரிஸ் பெருமிதம்

கொழும்பு, ஒக்.19

2011 ஆம் ஆண்டு ஐ.நா. மாநாட்டின் போது இலங்கைக்கு எதிராகக் கொண்டுவர முயற்சித்த பிரேரணையைத் தடுத்து நிறுத்தியமை இலங்கை அரசுக்குக் கிடைத்த வெற்றி என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

''தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தத்தில் தோல்வியுற்ற போதிலும் சர்வதேச ரீதியில் அவர்களது கட்டமைப்பு பலமாகவே உள்ளது.'' என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே பீரிஸ் இதனைத் தெரிவித் தார்.

2011 ஆம் ஆண்டு ஐ.நா. மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைக்

பக் 04

### சிங்களக் குடியேற்றம், காணிப்பதிவு விவகாரங்க்ள்

# கூட்டமைப்புக்கு விவாத அனுமதி எதிர்க்கின்றனர் அரச எம்.பிக்க்ள்

கொழும்பு, ஒக்.19

வடக்கு, கிழக்கில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் காணிப்பதிவு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடக்க தமிழ்க் கூட்டமைப்புக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தியுள்ளனர்.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை நடந்தபோது அதில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்திருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு எதிரான வகையில் செயற்பட்டு வருகிறது என்றும், அதற்குச் சிறந்த உதாரணமாக வவுனியாவில் நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் குறிப்பிடலாம் என்றும் அங்கு சுட்டிக்காட்டியுள்ள ஆளுங்கட்சி எம்.பிக்கள், அரசுக்கு சர்வதேச ரீதியில் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில்" செயற்படும் கூட்டமைப்புக்கு சர்ச்சைக்குரிய விடயங்களை நாடாளுமன்றத்தில் விவாதிக்க இடமளிக்க கூடாதென்றும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான நீண்ட வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற பின்னர் ஆளுங்கட்சிக் குழுக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட பிரதமர் டி.எம்.ஜயரட்ண, நாடாளுமன்றத்தில் விவாதமொன்றை கோருவதற்கான உரிமை தமிழ்க் கூட்டமைப்புக்கு உள்ளதென்றும், அரசு இதற்கு உரிய பதிலை வழங் கத் தயாராக வேண்டுமெனவும் கூறியிருக்கிறார்.

இதன்படி எதிர்வரும் வெள்

பக் 04

## பட்ஜெட் விவாதம் முடியும் வரையில் வெளிநாடு செல்லத் தடை

கொழும்பு, ஒக்.19

அரசின் வரவு - செலவுத் திட்ட விவாதம் நாடாளுமன்றத்தில் முடியும் வரை ஆளுங்கட்சி அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கான பயணத்தை மேற்கொள்ளக்கூடாதென அரசு பணித்திருக்கிறது.

வரவு - செலவுத் திட்ட விவாதம் நடைபெறும் நாள்களில் ஆளும் தரப்பினர் கொழும்பில் இருப்பதன் மூலம் அவசர வாக்கெடுப்புகள் போன்ற நிலைமைகளைச் சமாளிக்க

பக் 04

### கோடிக்கணக்கில் அள்ளிக் கொடுத்து

# இந்தியா 80 அதிவேகப் படகுகளை கொள்வனவு செய்கிறது இலங்கையிடம்

கொழும்பு, ஒக்.19

இலங்கையைச் சேர்ந்த 'சோலாஸ் மரைன்' என்ற நிறுவனத்திடமிருந்து சுமார் 300 கோடிக்கு (இந்திய ரூபா) 80 அதிவேகப் படகுகளை இந்தியக் கடற்படை கொள்வனவு செய்ய வுள்ளது.

மும்பாயில் கடல் மார்க்கமாக ஊடுருவி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதையடுத்து 'சாகர் ப்ரஹரி பால்' என்ற புதிய கடலோரக் கண்காணிப்புப் பிரிவை இந்தியக் கடற்படை உருவாக்கியிருந்தது. இந்த படைப்பிரிவுக்காகவே மேற்படி அதிவேகப் படகுகளைக் கொள்வனவு செய்ய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

அடுத்த மூன்று ஆண்டுகளில் 80 படகுகளை இந்த நிறுவனம் இந்தியக் கடற்படையிடம் வழங்கவுள்ளது. சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அடிப்படையில் கேள்வி மனுக்கள் கோரப்பட்டு கடந்த ஜூன் மாதம் 'சோலாஸ் மரைன்' நிறுவனத்தை இந்தியக் கடற்படை தேர்வு செய்திருந்தது.

மணிக்கு 45 முதல் 50 கடல் மைல் வரையி

பக் 04

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் தெளிவான வானிலையும் பிற மாவட்டங்களில் இடியுடன் கூடிய மின்னல் நிலவும் சாத்தியம்.

# கொழும்பு மாநகர முதல்வருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை

## நாடாளுமன்றில் ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 19

கொழும்பு மாநகர சபை முதல்வராக ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவாகிப் பதவியேற்ற போதிலும், அவருக்கான அதிகாரங்கள் இதுவரை அளிக்கப்படவில்லை. அது குறித்தான வர்த்தகமானி அறிவித்தலும் விடுக்கப்படவில்லை. கொழும்பு மாநகர சபையின் விசேட ஆணையாளர் மூலமே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று சபையில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐ.தே.க. வும், ஜே.வி.பியும் பெற்ற முடிவுகள் குறித்து உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் பிரதி அமைச்சர் இந்திக்க பண்டாரவிடம் கேள்வி எழுப்பியிருந்தார் ரவி கருணாநாயக்க. இதற்குப் பிரதியமைச்சர் பதிலளித்தார். இருந்தபோதிலும் ரவி கருணாநாயக்க சில விடயங்களைச் சபையில் கூறினார். அவர் கூறியதாவது;

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஏ.ஜே.எம். முஸம்மில் வெற்றிபெற்று மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இருந்த போதிலும் அவருக்கு இன்னும் உரிய அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை. அத்துடன் அதுகுறித்த வர்த்தகமானியும் இன்றுவரை வெளியிடப்படவில்லை.

இவ்வாறான நிலையில் கொழும்பு மாநகரசபை நடவடிக்கைகள் விசேட ஆணையாளர் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன. நாங்கள் மக்கள் வழங்கியுள்ள ஆணையை மதிக்கிறோம் கொழும்பு மாநகர சபையை ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் வழங்கியுள்ளார்கள்.

இதேவேளை, பண்டாரவளை நகரசபை இளம் தலைவர் சமிந்தவுக்கு பல்வேறு தடைகள் இடப்பட்டு வருகின்றன. அந்த நகர சபையில் முன்னாள் தலைவர் மேற்கொண்ட மோசடி, ஊழல்களை மூடிமறைக்கவே இவ்வாறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏன் அரசு இவ்வாறான அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொள்கிறது என்பது எமக்குத் தெரியவில்லை-என்றார்.

# பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கண்டனம்

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் பட்டப்பகல் வேளையில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளது. நீண்டகால இடைவெளிக்குப்பின் மூவின மாணவர்களும் இந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலானது அவர்கள் மத்தியில் பய உணர்வை ஏற்படுத்தி அவர்களின் சுமுகமான கல்வி நிலைக்குக் குந்தகம் ஏற்படும் வகையிலும், குழப்பம் ஏற்படும் நிலையிலும் அமைந்துள்ளது.

பல்கலைக் கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் நலிவுற்று வரும் இந்தச் சூழ்நிலையில் அதற்கு மேலும் பின்னடைவு ஏற்படுத்தாமல் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வைக் கண்டு நிர்வாகம் அவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும் வேண்டும் என்றும் ஊழியர் சங்கம் செய்திக் குறிப்பு ஒன்றில் கேட்டுக் கொண்டுள்ளது. (ஒ)

# நீதிமன்றில் பிள்ளையார்; அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்

யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினால் பிள்ளையார் சிலை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிள்ளையார்சிலையை உரிமை கோருபவர்கள் உரிய அடையாளங்களைக்காட்டிப் பெற்றுக் கொள்ள முடியும்-என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ஒ-14)

# கல்வி முதுகலைமாணி மாணவருக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை

## மாகாண கல்வியமைச்சின் செயலர் இணக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.19

கல்வி முதுகலை மாணி கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்குச் சம்பளத்துடனான விடுமுறை வழங்க வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி முதுகலை மாணி கற்கை நெறியினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகச் செயற்பாடுகள் நடைபெறாதிருந்த காலத்துக்காக மேலதிகமாக நடைபெறும் கற்கைக் காலங்களுக்கான சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை வழங்கப்படமாட்டாதென்றும் சம்பளமற்ற விடுமுறையில் கற்கை நெறியினை தொடரவேண்டும் என்றும் வடமாகாண கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அறிவித்திருந்தது.

இது தொடர்பாக அந்த ஆசிரியர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தனர். அதனை வடமாகாண கல்வி அமைச்சுச் செயலாளரிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எடுத்துரைத்த போது சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்க செயலாளர் இணங்கியுள்ளார். -என் றுள்ளது. (த)

# அனுமதியின்றி சாராயம் விற்ற மூவருக்கு ஆறு மாதச் சிறை

யாழ்ப்பாணம்,ஒக்.19

அரச சாராயத்தை அனுமதியின்றி விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மூவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 5 வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட 6 மாதச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

அரச சாராயத்தை அனுமதியின்றி விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த மூவரைப் பருத்தித்துறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மதியம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முன்னிலை செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் இவர்கள் மூவருக்கும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டணை விதித்து தீர்ப்பளித்தார். (து-319)

# வங்காலையில் சடலம் கரை ஒதுங்கியது

மன்னார் வங்காலைக் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலமொன்று கரையொதுங்கியுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இந்தச் சடலம் கரையொதுங்கியதை வங்காலை மீனவர்கள் கண்டனர். உடனடியாக அருகிலுள்ள கடற்படையினருக்கு மீனவர்களால் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது. கடற்படையினர் பொலிஸாருக்கு அறிவித்தனர். உடனடியாகச் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தைப் பொறுப்பேற்று மன்னார் வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

மேலும் இந்தச் சடலம் தலை, கை, கால்கள் என்பன இல்லாத நிலையிலேயே காணப்படுகின்றது. அத்துடன் மோசமாக உருக்குலைந்து எலும்புகளும் வெளியே தெரிகின்றன. (த-60)

# பொதுத் தகவல் தொழினுட்பப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.19

தரம் 12 இல் கல்வி பயிலும் அடுத்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொதுத் தகவல் தொழினுட்பப் பரீட்சை எதிர் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் நடைபெறும் இந்தப் பரீட்சை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டத்தில் அந்தந்தப் பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சை நடத்த அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்.வலயக் கல்வித் திணைக்கள திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரநாதன் தெரிவித்தார். (ஒ-4)

# 'மாற்றத்தின் நிழல்கள்' கலை நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க தகவல் கூடத்தினர் ''மாற்றத்தின் நிழல்கள்'' என்னும் கலை நிகழ்வினை இன்று புதன்கிழமை வழங்கவுள்ளனர்.

யாழ். சமூகத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கும் பதின்ம வயதுக் கர்ப்பம் தரித்தல், மதுப்பழக்கம், போதை வஸ்துகளின் பாவனை,வீட்டு வன்முறை, தொலைக் காட்சிகளின் தாக்கத்தால் யாழ். கலாசாரத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் போன்ற சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக படைப்பாற்றலினூடாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் இந்த விடயங்கள் தொடர்பில் மக்களை ஆழச் சிந்திக்க வைப்பது 'மாற்றத்தின் நிழல்கள்' கலை நிகழ்வின் முக்கிய நோக்கமாகும்.பிரபல கலைப் படைப்பாளரும், கல்வியியலாளரும், பொம்மலாட்டக் கலைஞருமான சுலோச்சனா திஸா நாயக்க இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளராவார்.

இந்தக் கலை நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அமெரிக்க தகவல் கூடத்தில் நடைபெறும். (க)

# நிகழ்வுகள்

**சிறுவர், முதியோர் தின விழா**

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தின விழா பிற்பகல் 2 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்வார்.(உ-313)

**மெய்வன்மைப் போட்டி**

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு பாடசாலைகளில் மெய்வன்மைப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகள் காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் கே.சண்முகலிங்கம் கலந்துகொள்வார். (உ-313)

**கௌரவிப்பு**

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் , வகுப்பாசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பகல் நேரத்தில் கல்லூரி மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் செ.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.(உ-313)

**செயலமர்வு**

தென்மராட்சி வலய பாடசாலைகளில் கடமையாற்றும் கட்டாயக்கல்வி வரவுக்குழு பொறுப்பாசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு தென்மராட்சி கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-313,207)

**விளையாட்டுப் போட்டி**

யாழ். ஆதீன தென்னிந்திய திருச்சபையின் ஏற்பாட்டில் வரணி பாலர் பகல் பராமரிப்பு நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.நிகழ்வில் பிரதம விருந்தினராக வரணி மகாவித்தியாலய அதிபர் மங்களேஸ்வரன் கலந்துகொள்வார். (உ-122)

**விளக்கக் கூட்டம்**

வித்தகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் மண்ணின் மகிமை காணிப்பதிவின் ஆரம்ப தகவல் விண்ணப்பப் படிவம் நிரப்புதல் தொடர்பான விளக்கக் கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தகபுரம் கிராமசேவகர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (உ-313)

# பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சீருடை அணிவதற்கு ஆளுங்கட்சியின் எம்.பிக்கள் கடுமையான எதிர்ப்பு

கொழும்பு, ஒக்.19

அரசியல் பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்குபவர்கள் சீருடை அணியவேண்டுமென்று அரசு எடுத்திருக்கும் தீர்மானத்தை ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்துள்ளதுடன், அரசு இதனை உடனடியாக வாபஸ் பெறவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

அரசியல் பிரமுகர்களுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் அதிகாரிகள் சிவிலுடையில் இருப்பதால் அவர்கள் இன்னாரென அடையாளம் காண்பதில் சிக்கல் இருப்பதை அறிந்த அரசு, முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புக்கடமையில் ஈடுபடும் பொலிஸார், சீருடையுடன் இருக்கவேண்டுமெனப் பணிப்புரை விடுத்திருந்தது. அண்மையில் இடம்பெற்ற முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னரே இந்தத் தீர்மானத்தை அரசு எடுத்திருந்தது.

அரசின் இந்தத் தீர்மானம் குறித்து ஆளுங்கட்சிக் குழுக் கூட்டத்தில் பல்வேறு கருத்துகளைக் கூறி அதிருப்தி வெளியிட்டுள்ள ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், இவ்வாறான ஏற்பாடுகள் நாகரிகமற்ற முறையில் இருப்பதைப் போலத் தாங்கள் உணர்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொலிஸ் சீருடை அணிந்த பொலிஸாருடன் இறங்கி வீதியில் செல்லும்போது ஏதோ அரசியல் பிரமுகர் ஒருவர் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படுவது போல் இருக்கிறது என இங்கு சுட்டிக்காட்டிய ஆளுங்கட்சி எம்.பிக்கள், சீருடையுடனான பொலிஸார் அல்லது பாதுகாப்பு அதிகாரிகள் அருகில் இருக்கும்போது பொது மக்கள் அரசியற் பிரமுகர்களிடம் நெருங்குவதற்கு அச்சப்படும் சூழ்நிலை உள்ளது எனவும் எடுத்துக்கூறியுள்ளனர்.

எவ்வாறாயினும் இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பிரதமர் ஜயரட்ன, அரசியல் பிரமுகர்களுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் பொலிஸார் சீருடையில் இருக்கவேண்டுமென்ற அரசின் தீர்மானத்தை உடனடியாக மாற்றமுடியாதெனத் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# 6 லட்சம் உல்லாசப் பயணிகள் 9 மாதங்களில் இலங்கை வருகை

## கடந்த வருடத்தை விடவும் 34 வீத அதிகரிப்பு

இந்த ஆண்டின் கடந்த ஒன்பது மாத காலத்துக்குள் ஐந்து லட்சத்து 98 ஆயிரத்து ஆறு வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று இலங்கை உல்லாசப் பயணத்துறை சபை தெரிவிக்கின்றது.

இந்த எண்ணிக்கையை கடந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 34.3 வீதமான வளர்ச்சியாகும்.

மேலும் 2010 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் வரையில் 4 லட்சத்து 45 ஆயிரத்து 228 வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

இந்த ஆண்டில் மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த பிரிட்டன், பெல்ஜியம், ஒஸ்ரியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, சுவீடன், ஸ்பானியா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தே கூடிய எண்ணிக்கையான உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். அந்த எண்ணிக்கை 2 லட்சத்து 26 ஆயிரத்து 990 ஆகும்.

மேலும் அந்த நாடுகளிலிருந்து கடந்த ஆண்டின் முதல் ஒன்பது மாத காலத்துள் இந்த நாட்டுக்கு வந்துள்ள உல்லாசப் பயணிகள் ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 99 பேர் மாத்திரமே என்று அதிகார சபையின் புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

(ஒ-22)



ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், அடையாள அணிவகுப்புக்காக நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றுக்கு அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

# பாரத லக்ஷ்மனுக்கு நீதிவேண்டி சர்வதேச ரீதியில் நடவடிக்கை

## அவரது உறவினர்கள் முன்னெடுப்பு

கொழும்பு, ஒக்.19

சுட்டுக்கொல்லப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மனுக்கு நீதி வேண்டி அவரது உறவினர்கள் சர்வதேச ரீதியிலான வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய பாரத லக்ஷ்மனின் சகோதரி சுவர்ணா குணவர்தன கூறியவை வருமாறு:-

''பாரதலக்ஷ்மனுக்கான கொலைச் சதியானது நீண்ட காலம் தீட்டப்பட்ட ஒன்றாகும். அவர் அநீதிக்கு எதிராகச் செயற்பட்டார். இதனால் அவர் சிலரின் எதிர்ப்பைச் சம்பாதித்தார். இதுதான் அவரது மரணத்திற்குக் காரணமாக அமைந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வளர்ச்சிக்காக பாரத மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் பலர் அவரது அர்ப்பணிப்பை இப்போது மறந்துவிட்டனர். அரசில் உள்ள சிலர் வெளியிடும் கருத்துகளின் ஊடாக பாரதவின் கொலையாளிகள் காப்பாற்றப்படுகின்றனர். குற்றவாளிகளுக்கு சாதகமாகவே அவர்களின் கருத்துகள் அமைகின்றன.

பாரதவுக்கு நீதி கிடைக்க வேண்டும். கொலையாளிகள் கைதுசெய்யப்படவேண்டும். பாரதவுக்கான நீதியை நிலைநாட்ட நாம் சர்வதேச ரீதியான செயற்பாட்டை ஆரம்பித்துள்ளோம்'' - என்றார்.

இதேவேளை, பாரத லக்ஷ்மனுக்குப் போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டது என்று நேற்று ஜனாதிபதி செயலகம் அறிவித்தது.

கூடுதலான பாதுகாப்புக் கேட்டு அவர் தரப்பில் கோரிக்கை எதுவும் வைக்கப்படாத நிலையிலேயே அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது என்று ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை, பாரத லக்ஷ்மனின் கொலை தொடர்பான விசாரணை இன்னும் ஒருசில தினங்களில் நிறைவுசெய்யப்படும் என்று பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் நேற்றுக் கூறினார்.

இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பாக எட்டுப்பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் சில துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஒ-சி)

# அணி வகுப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்.19

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலையுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் பொலிஸ் கான்ஸ்டபிளை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தும் திட்டத்தை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு பாதுகாப்பாளராகச் செயற்பட்ட அநுர துஷார மெல் எனப்படும், மிரிஹானை பொலிஸ் நிலைய "கான்ஸ்டபிள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பாக் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதால் அடையாள அணி வகுப்பை பிற்போடுமாறு இரகசிய பொலிஸார் நீதிமன்றிடம் கேட்டுக் கொண்டனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் சந்தேக நபரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றைய தினம் அவரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கைதுசெய்யப்பட்ட மேலும் 8 பேரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து தொடர்ந்தும் விசாரணை நடத்தப்படவுள்ளது என இரகசிய பொலிஸார் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.(ஒ-சி)

# பொலிஸாரின் நடவடிக்கைக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு

## மாகாணசபை அமைச்சர் லான்ஸா அதிரடி

கொழும்பு, ஒக்.19

நீதிமன்ற உத்தரவோ அல்லது முன்னறிவித்தலோ எதுவுமின்றி பொலிஸார் எனது வீட்டைச் சோதனையிட்டமைக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றைத் தாக்கல் செய்யவுள்ளேன்.

- இவ்வாறு மேல் மாகாணசபை அமைச்சர் நிமல் லான்ஸா தெரிவித்துள்ளார்.

தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள், போதைப் பொருள்கள் உட்பட சட்டவிரோதப் பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, மேல் மாகாணசபை அமைச்சர் லான்ஸாவின் வீடு உட்பட நீர்கொழும்பில் அமைந்துள்ள பிரபல வர்த்தகர்கள் ஆறு பேரின் வீடுகளில் நேற்றுமுன்தினம் தீவிர சோதனை நடத்தப்பட்டது.

இதுதொடர்பாக கேட்டபோதே மேல் மாகாணசபை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சட்டவிரோத ஆயுதங்களைக் கைப்பற்றவோ அல்லது போதைப் பொருள்களைக் கைப்பற்றவோ பொலிஸார் இந்தச் சோதனையை நடத்தவில்லை. வாகனப் பிரச்சினை காரணமாகவே இந்தச் சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. ஊடகங்களில் இந்தச் சம்பவம் தொடர்பாக வெளியாகியுள்ள செய்தியானது முற்றிலும் தவறானது.

நீதிமன்ற உத்தரவோ அல்லது முன்னறிவித்தலோ எதுவும் இன்றியே பொலிஸார் எனது வீட்டைச் சோதனையிட்டுள்ளனர். இதற்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றைத் தாக்கல் செய்யவுள்ளேன்.

குறித்த சம்பவமானது, எனது நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நான் தூய்மையானவன் என்பது மக்களுக்குத் தெரியும். அரசியலில் எனக்கு சேறு பூச நினைப்பவர்களின் சதி முயற்சியே இது.

நான் ஒருபோதும் சட்டவிரோதமான ஆயுதங்களைப் பாவித்ததில்லை. அதேபோல் போதைப்பொருள் வியாபாரத்துக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

குறித்த சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி என்னுடன் தொலைபேசியூடாகக் கலந்துரையாடினார். ஏன் இந்தத் திடீர் சோதனை என்பதைக் கண்டறிந்து விசாரணைகளை முன்வைக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார் - என்றார் அவர். (ஒ-சி)

# மாகாணசபை அமைச்சர் வீட்டில் திடீர் சோதனை; விளக்கமளிக்குமாறு ஜனாதிபதி உத்தரவு

மேல் மாகாணசபை அமைச்சர் நிமல் லான்ஸாவின் வீடு உட்பட நீர்கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர்களின் வீடுகளைப் பொலிஸார் முற்றுகையிட்டுத் திடீர் சோதனை நடத்தியமை தொடர்பாகத் தனக்கு உடனடியாக விளக்கமளிக்குமாறு கோரி பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கேள்வியுற்றதும் மேல் மாகாணசபை அமைச்சருடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்ட ஜனாதிபதி, தனது கவலையை வெளியிட்டார் எனத் தெரியவருகிறது.

தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள், போதைப் பொருள்கள் உட்பட சட்டவிரோதப் பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன எனக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே நீர்கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாணசபை அமைச்சரின் வீடு உட்பட பிரபல வர்த்தகர்கள் ஆறு பேரின் வீடுகளில் தீவிர சோதனை நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயரிடத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கமையவே சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேமச்சந்திரவின் கொலைச் சம்பவத்தையடுத்து, பாதாளக் குழுக்களை அழிக்கவும், சட்டவிரோத ஆயுதங்களைக் களையவும் அரசு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளது. இதன் ஓர் அங்கமாகவே இந்தத் திடீர் சோதனை நடத்தப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, மாகாணசபை அமைச்சரின் வீட்டில் சட்டவிரோதப் பொருள்கள் இருக்கின்றன என்று தவறான தகவல்களை வழங்கியதாகக் கருதப்படும் பிரதான எதிர்க்கட்சியின் இரு உறுப்பினர்களிடம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

# இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை நீடித்தது அமெரிக்கா

2010 ஆண்டு இறுதியில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை அமெரிக்கா நீடித்துள்ளது.

இந்த சலுகை 2013 ஆம் ஆண்டு இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என இலங்கையின் வர்த்தக திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த திணைக்களம் வர்த்தக அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இதற்கான உடன்படிக்கையில் மீண்டும் கையெழுத்திடுவார் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்தநிலையில் அவர் கையெழுத்திட்ட 15 நாள்களில் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நடைமுறைக்கு வரும் என்று இலங்கை வர்த்தக திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சுயநினைவுக்கு திரும்புகிறார் துமிந்த நீராகாரமும் உட்கொள்ள ஆரம்பித்தார்

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் படுகாயமடைந்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்றுவரும் துமிந்த சில்வா எம்.பி. நீராகாரத்தை உட்கொள்ள ஆரம்பித்துள்ளார் என ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துமிந்த சில்வாவுக்கு தற்போது படிப்படியாக சுயநினைவு திரும்புகின்றது என அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்ட நரம்பியல் வைத்திய நிபுணர் டொக்டர் மஹேஸி விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

வைத்தியர்கள் தொடர்ந்தும் அவரது உடல் நிலையைக் கண்காணித்து வருகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளிநாட்டு வைத்தியர்கள் இருவர் துமிந்த சில்வா எம்.பி.யின் உடல் நிலைமையை பரிசோதித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஒருவருக்கு வழங்க வேண்டிய அதிகபட்ச சிகிச்சைகளை உள்நாட்டு வைத்தியர்கள் அவருக்கு வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவருக்கு மீண்டும் ஒரு சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கான அவசியம் இல்லை எனவும் வெளிநாட்டு வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், துமிந்த சில்வாவின் தலையிலிருந்து அகற்றப்பட்டுள்ள மண்டையோட்டின் ஒரு பகுதியை மீண்டும் பொருத்துவற்காக சத்திர சிகிச்சை ஒன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது என டொக்டர் மஹேஸி விஜேரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**செல்வி சிறிரங்கன் பிரணவி**
*(யா/ வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலை, அல்வாய்)*



எமது செல்வப் புதல்வி எஸ். பிரணவி 2011 தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலையில் உயர் புள்ளி **161** பெற்று சித்தியடைந்தமையினால் பெரும் மகிழ்வடைகின்றோம். பிரணாக் குட்டியை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையாரின் அனுக்கிரகத்தோடு சாமணந்தறை ஆலடி ஐங்கரனின் அருள் பெற்று இன்னும் பல பெறுபேறுகளைப் பெற்று சிறப்படைய வேண்டுமென்று வாழ்த்துவதோடு கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"ஸ்ரீரங்கம்',
மெதடிஸ்த நகர்,
அல்வாய் வடமேற்கு.

பிரணாக் குட்டியை வாழ்த்துவோர்-
அப்பா, அம்மா, அக்கா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா குடும்பம், சித்தப்பாமார், அத்தைமார், அம்மம்மாகுடும்பம், மாமாமார், பெரியம்மாமார் (குடும்பம்).

**City & Guilds English**

3 மாத காலத்தில் நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடலாம்

ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே..

**சர்வதேச அங்கீகாரம் உள்ள ஆங்கிலக் கற்கை நெறி**

இக் கற்கை நெறியானது Preliminary (A1), Access(A2), Achiever (B1), Communicator (B2), Expert (C1), Mastery (C2)என்னும் 6 பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

City & Guilds நிறுவனத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட தகுதியும் அனுபவமும் நிறைந்த விரிவுரையாளர்களினால், குறைந்த செலவில் குறுகிய காலத்தில் சர்வதேச அங்கீகாரம் உள்ள ஆங்கில கற்கை நெறியின் விரிவுரைகளுக்கு பங்கு கொள்ளும் சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.....

காலம்: 3மாதம்

புதிய பிரிவு ஆரம்பம
22.10.2011 காலை 10.00 மணி

பயிற்சிக் கட்டணம்
ரூ.9500 மட்டுமே

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 Clock Tower Road,Jaffna
T.P : 021 222 2831 Fax : 021 222 6933
E-mall : lls @lls.edu.lk

**உடனடி வேலைவாய்ப்பு**

சர்வதேச GDM Management நிறுவனத்துக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

01. Team leader - 07
02. Supervisor - 05

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
(மேலதிக சலுகைகளும் தனியாக வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு:
0777968485, 0728012111
(ஆரியகுளச் சந்திக்கு அருகில்)

**கடை விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள கடைக் கட்டடம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0774744016

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித்தரப்படும்.
அழையுங்கள்:-0771329513
(Computer Repair)

## கூட்டமைப்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விவாதத்திற்கான நேரத்தை ஒதுக்க ஆளுங்கட்சிக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஒ-சி)

## பட்ஜெட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற பிரதம கொறடாவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில் மருத்துவ மற்றும் இதர அவசர தேவைகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய தேவையுள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்கள், ஜனாதிபதியிடம் அது குறித்து முறையிட்டு அனுமதியைப் பெறலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற நம்பிக்கை இன்னும் எமக்கு உள்ளது. அதை அவர்கள் செய்யாது போனால், நாங்கள் பலமுறை கூறியதுபோன்று, ஏனைய பல பொறிமுறைகளின் மீது கவனம் செலுத்துவதற்கான அனைத்துலக அழுத்தங்கள் அதிகரிக்கும் என்றும் அவர் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார். (ஒ-சி)

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லான வேகத்தைக் கொண்டுள்ள இந்த அதி வேகப்படகுகள் இந்திய கரை யோரப் பகுதிகளில் சந்தேகத்துக்கிடமாக செல்லும் படகுகளை கண்காணிக்க பெரிதும் உதவுமென்று இந்திய கடற்படை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-சி)

## வாசுதேவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது. முல்லேரியாவில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் எம்.பியுமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலையில் சூழ்ச்சியுள்ளது என அமைச்சர் வாசுதேவ அண்மையில் தெரிவித்துள்ளார் என்றும், அது தொடர்பாகவே சி.ஐ.டியினர் இன்று விசாரணைகளை மேற்கொள்கின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது. (ஒ-சி)

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவில் இருந்தவர்களின் எண்ணிக்கை, அந்த மாநாட்டுக்காக ஒரு நாட்டின் சார்பில் எத்தனைபேர் பங்கேற்க முடியும், இலங்கை குழு தங்கியிருந்த இடம், செலவிடப்பட்ட பணம் ஆகியன தொடர்பில் தயாசிறி கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்க முன்னர் அமைச்சர் பீரிஸ், ஐ.நா. மாநாட்டின்போது சாதிக்கப்பட்டது குறித்து சபையில் விளக்கமளித்தார். அவர் தெரிவித்ததாவது:-

ஐ.நா.வின் மாநாட்டின்போது இலங்கை பெரும் சவாலுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. எனினும் அதனை எமது ஆதரவு நாடுகளின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக எதிர்கொண்டோம். இலங்கையின் நற்பெயரைச் சீர்குலைக்க அந்த மாநாட்டின்போது வெளிநாடுகளால் முயற்சிக்கப்பட்டது.

இலங்கைக்கு எதிராகப் பிரேரணை ஒன்றை அந்த மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கும் அந்த நாடுகள் முயற்சி செய்தன. இருந்தபோதிலும் அந்த நாடுகளுக்கு இருந்த பலத்தை விடவும் இலங்கை சார்பாக இருந்த நாடுகளின் எண்ணிக்கை அதிகம் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

அதனால் பிரேரணையைக் கொண்டுவர முயற்சி மேற்கொண்ட நாட்டின் வெளிவிவகார அமைச்சர் என்னைச் சந்தித்து, திட்டத்தைக் கைவிடுவதாகக் கூறினார்.

அதுமாத்திரமன்றி, 25 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுத் தலைவர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேச்சு நடத்தியதன் விளைவாக அந்தப் பிரேரணை முயற்சி தோற்கடிக்கப்பட்டது. இது எமக்குக் கிடைத்த வெற்றி - என்றார் பீரிஸ். அதன் பின்னர் ஐ.தே.க. உறுப்பினரின் கேள்விக்குப் பதிலளித்த பீரிஸ்,

"ஐ.நா. மாநாட்டுக்கு இலங்கை சார்பாக ஜனாதிபதி உட்பட 30 பிரதிநிதிகள் செ[illegible]றனர். இதற்காக பல மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. இதற்கான முழுச் செலவையும் வெளிவிவகார அமைச்சே வழங்கி[illegible]து. இந்த மாநாட்டில் ஜனாதிபதி பங்குபற்றி இருந்தததினால் பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக பாதுகாப்பு அதிகாரிகளும் சென்றிருந்தனர். அதற்காக செலவிடப்பட்ட செலவு குறித்தோ அல்லது விவரங்கள் குறித்தோ தேசிய பாதுகாப்பு நலன் கருதி- தகவல் வெளியிட முடியாது - என்றார். (உ-சி)



**01வது பிறந்தநாள் வாழ்த்து**

சசிபன் வைஷ்னா தம்பதிகளின் செல்வப் புதல்வி
செல்வி **ச.சுஜர்ணிகா** அவர்கள்
இன்று 19.10.2011 புதன் கிழமை தனது 01வது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார்

இவரை அப்பா, அம்மா அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார் எல்லோரும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தவசிகுளம் கொடிகாமம்.

**விசேட கட்டணச்சலுகையில் கற்கை நெறிகள்**

DMI COMPUTER EDUCATION

- Diploma in Microsoft Office 2010
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip. in Video Production & Multimedia
- Dip in Computerized Accounting
- Dip.in Web Designing & Development

Tally | AutoCAD | Internet and E-mail

DIPLOMA IN HARDWARE ENGINEERING
Microprocessor, Various Mother Board Handing, All Type of Cards, HDD, FDD, Printers, Installation of- O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking

Spoken English
veta Experts in English Training
An ISO 9001:2000 Company
புதிய பிரிவுகள் ஆரம்பம்

UK Settlement Visa A1
City & Guilds Approved Centre
City & Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று ஆங்கிலப் பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே இலகுவான முறையிலேயே தோற்றமுடியும்.

**DMI COMPUTER EDUCATION**

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel. :021-227 0243

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஜனாதிபதியின் இலக்கை எட்டுவதற்கு அரசாங்கத்துக்கு இயல்பு உண்டா?

மக்களை ஒன்றிணைப்பதற்கும், அவர்களிடையே பிணைப்பை உண்டாக்குவதற்கும், மொழியைப் பயன்படுத்தும் கொள்கையை இலங்கை கடைப்பிடித்து வருகிறது. எமது நாட்டைப் பன்மொழிகள் கொண்ட நாடாகப் பரிணமிக்கச் செய்வதே எமது அரசாங்கத்தின் நோக்கம்.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

மொழிகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் உரையாற்றிய போதே, அரசின் புதிய கொள்கை, அதன் செயற்பாடு குறித்துக் கருத்து வெளிப்படுத்தினார் ஜனாதிபதி.

இலங்கையில் நாம் இன்று பேசுவது சமாதானத்தின் மொழி என்றும் அவர் பிரலாபித்தார்.

இனங்களுக்கு இடையேயான புரிந்துணர்வை மேம்படுத்த பன்மொழி அறிவே சிறந்த ஆயுதம். அரசாங்கம் அதன் தேவையை உணர்ந்து இளைஞர்கள் மற்றும் அரசாங்க ஊழியர் மத்தியில் மொழிகள் சம்பந்தமான அறிவை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளது-

நாம் எமது மக்களின் மொழி உரிமைகளைப் பாதுகாப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேவேளை, எமது சமூகங்களுக்கு இடையே ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகப் பயன்படுத்தி நாட்டை மும்மொழி நாடாக உருவாக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்-

இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களைத் தொடர்பு கொள்ள அவர்களுக்கு இடையே உள்ள இன மோதல்களை மறந்து, சிங்களம், தமிழ் ஆகிய பிரதான மொழிகளைக் கற்க வேண்டும் என்பதனை உறுதிசெய்வதே எமது முதன்மையான நோக்கமாக இருக்கிறது.- என்றும் ஜனாதிபதி தமது உரையில் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

ஜனாதிபதியின் உரை, தூரநோக்கும் நாட்டின் வருங்கால வளர்ச்சி கருதியதாகவும் அமைகிறது. ஆனால் தேசத்தின் இப்போதைய நடைமுறைப் போக்கு எதிர்த்திசை நோக்கி நகர்ந்துகொண்டிருப்பது ஜனாதிபதி கூறியிருப்பதெல்லாம் இயற்றக் கூடியனவா? அவற்றுக்கான இயல்பு இப்போது உண்டா என்ற பெரும் வினாக்களை எழுப்புகின்றன.

உலக நாடுகள் மிக வேகமாக முன்னேறி வருகின்றன. அந்த நீரோட்டத்தில் எந்தச் தேசம் இணைந்து கொள்வதானாலும் தனது நாட்டில் மொழிச் சண்டை, இனச் சண்டை பிடித்துக்கொண்டிருக்கக் கூடாது. ஆனால் இலங்கையில் இந்த இரு சண்டைகளும் இன்னும் ஓய்ந்து, தீர்ந்தபாடில்லை.

1987 ஆம் ஆண்டின் சட்டவிதியின் பிரகாரம் தமிழும் உத்தியோக மொழியாக்கப்பட்டது. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் அரச அலுவலகங்களில் இன்னமும் தமிழ் மொழிப் பிரயோகம் முழுமையானதாக வில்லை. இன்னமும் பல அரச அலுவலகங்களுக்கு விதிமுறைகள், மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் கூட சிங்களத்திலேயே வந்துசேர்கின்றன.

சிங்கள மக்கள் தமிழையும், தமிழ் மக்கள் சிங்களத்தையும் பேசவும், எழுதவும் கற்கும் வகையிலான திட்டங்கள் அரைகுறையாகவே, வெறும் பேச்சளவிலுமே உள்ளன. பெரும்பான்மையினருக்கு தமிழ் மொழி அறிவு அவசியம் அற்றது என்ற நிலைப்பாட்டை மாற்றுவதற்கான ஏற்பாடுகள், செயற்பாடுகள் மிகமிகக்குறைவு.

அது சரிவர நடைபெற்றால் மட்டுமே தமிழ்மக்கள் சிங்கள மொழியைக் கற்றுப் பேசவும், எழுதவும் வழிகாட்டியாக அமையும். அதன்மூலம் மட்டுமே இந்த நாட்டின் இனங்களுக்கு இடையே பரஸ்பரம் புரிந்துணர்வையும் நல்லுறவையும் முழு அளவில் உண்டாக்க முடியும்.

அவ்வாறு சிங்கள மக்கள் தமிழையும், தமிழ் மக்கள் சிங்களத்தையும், கற்பதற்கும் பேசுவதற்குமான ஏற்பாடுகள் ஓரவஞ்சகம் அற்ற நல்லுறவுக்கான உகந்த வழியாகும். அதனை மனதில் வைத்துக்கொண்டே, இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வை மேம்படுத்த, இளைஞர்கள் மற்றும் அரசாங்க ஊழியர் மத்தியில் மொழிகள் சம்பந்தமான அறிவை மேம்படுத்த ஜனாதிபதி விருப்பம் கொண்டுள்ளார் எனக்கொள்ளலாம்.

இந்த நாட்டின் பிரதான மொழிகள் இரண்டையும் பேசவும், எழுதவும் இரண்டு இன இளைஞர்களும் முன்வருவதற்குத் தேவையான வசதிகளும் ஏற்பாடுகளும் செய்யப்படுவது நாட்டின் ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும் முதன்மைத் தேவைகள். அவை உரிய முறையில் நடைமுறைக்கு வந்தால், இன்றைய இளைஞர்களும் மாணவர்களும் ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்வதில் அக்கறை கொள்வார்கள்.

பாடசாலைகளில் மும்மொழிகளையும் கற்பிக்க வகை செய்தால், ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்ற தேவையும் இருக்காது. உலகத் தொடர்பு மொழி, தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானத் துறை அறிவுகளைப் பெறுவதற்கான மொழியாக ஆங்கிலம் விளங்குவதால், அதனைக் கற்றுக்கொள்ளும் பொருட்டுப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஊக்குவிப்பார்கள், உந்து சக்தியாக விளங்குவார்கள்.

இலங்கையைப் பன்மொழிகள் கொண்ட நாடாகப் பரிணமிக்கச் செய்ய வேண்டுமானால், தேசிய கீதத்தைத் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மொழியில் இசைக்கச் செய்வது போன்ற திணிப்புக்கும், தமிழர் பிரதேசங்களின் மீதான ஆக்கிரமிப்புப் பாணியிலான சகலவிதமான நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அப்போது தான் இந்த நாடு பன்மொழிகள் கொண்ட நாடாகவும், அபிவிருத்தி நோக்கித் துரித நடைபோடும் தேசமாகவும் மாறும்.

அதற்கான நோக்கும் விருப்பமும் அரசுக்கு உண்டா என்பதனை வாய்ச் சொற்கள் நிரூபிக்கமாட்டா. செயலில்[illegible]ட வேண்டும். அது இப்போதைக்குச் சாத்தியமா என்பதற்குக் காலம்தான் பதில்சொல்ல வேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதற்கான எந்த ஏற்பாட்டிற்கும் தவழும் நிலைக்குத் தானும் வருவதற்கு மனமின்றி, பின்னோக்கி நடக்க முயல்வதை முதலில் நிறுத்தி, முன்னோக்கி நடந்த பின்னரே பன்மொழிகள் கொண்ட நாடாக்குவதற்கு அரசுக்கு காலடி எடுத்துவைக்க வாய்ப்பு வரும். அதற்கான இலக்குடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் இதயசுத்தி அரசுக்கு உண்டா? இல்லையேல் அவலை நினைத்து உரலை இடிப்பது போலாகிவிடும்.

# தமிழர் தாயக நில அபகரிப்பை நிறுத்துக இல்லையேல் சர்வதேசத்தை நாடுவோம்

### கூட்டமைப்பினர் தெரிவிப்பு

''தமிழர் தாயக பிரதேசங்களில் திட்டமிட்டு அரங்கேற்றப்படும் நில அபகரிப்பு மற்றும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் என்பன ஜனாதிபதிக்குத் தெரியாமல் இடம் பெறுபவை அல்ல. இவ்வாறான நடவடிக்கைகளை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் போராட்டங்கள் இன்னும் அதிகரிக்கும் என்பது மாத்திரமல்ல சர்வதேசத்தின் மட்டத்திலும் அழுத்தங்களைக் கொண்டுவர நாம் நடவடிக்கை மேற்கொள்ளுவோம்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த உண்ணாவிரதப்போராட்டம் வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு ,கிழக்கு மக்கள் அரசுக்கு ஆதரவு வழங்கவில்லை எனவே இலங்கை அரசு தனது இஷ்டத்திற்கு ஏற்ப குடியேற்றங்களை ஏற்படுத்தவோ நிலங்களை சுவீகரிக்கவோ தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரவோ நாம் அனுமதிக்க முடியாது. அவ்வாறு இடம் பெற்றால் இப்படியான போராட்டங்கள் மேலும் மேலும் அதிகரித்து இலங்கையில் அநாவசியமான ஸ்திரமற்ற நிலையை உருவாக்கும். அது ஒட்டுமொத்த இலங்கைக்கும் நல்லதொரு நிலையாக இருக்காது

எல்லை மீள் நிர்ணய செயற்பாடுகளை தற்போதைக்கு நாம் ஏற்றுக்கொள்வதாக இல்லை என அரசிற்கு தெளிவாக சொல்லியிருக்கிறோம். இது தொடர்பில் முல்லைத்தீவில் இடம்பெற்ற கூட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றனர். அதுபோல் வவுனியாவிலும் தமிழ் மக்களுக்கு விரோதமான முறையில் எல்லை நிர்ணயம் ஏற்படுத்தப்படுமாக இருந்தால் அதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளாது - என்றார் அவர்.

**ஈ.சரவணபவன்.எம்.பி.**

உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தக் காணிப்பதிவு நடவடிக்கையில் ஏதோ உள்நோக்கம் இருக்கின்றது. இதே மாதிரியான நிலை ஹிட்லரின் காலத்தில் நடைபெற்றதாக சரித்திரத்தில் இருக்கின்றது. தற்போதும் பளை, கொடிகாமம் பகுதிகளில் அநேகமான காணிகள் இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளன.

வெளிநாட்டிலுள்ளவர்கள் அவர்களின் காணிகள் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ளதால் அச்சத்தால் இங்கு வருகின்றார்கள் இல்லை.

1998 ஆம் ஆண்டு வந்த சட்டத்திற்கு இதுவரை ஒன்றும் செய்யாது விட்டுவிட்டு ஏன் தற்போது வடக்கு கிழக்கிற்கு மாத்திரம் காணிப்பதிவை இவ்வளவு அவசரமாக செய்கின்றனர்.

எனவே எமது சாத்வீகம் முடிந்து ஆயுதப்போராட்டத்தை மௌனிக்க வைத்துள்ளார்கள். மௌனிப்பது என்பது அவர்களைப் பொறுத்தவரை மௌனமாகவே இருப்பது நல்லது. தற்போது நாம் மீண்டும் சாத்வீக போராட்டத்திற்கு அடுத்தகட்டமாக வந்துள்ளோம். காணிப்பதிவை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிட்டால் சர்வதேச சமூகத்தை நாடவேண்டிய நிலை ஏற்படும் என்றார் சரவணபவன் எம்.பி. (த-சி)

# அமைச்சர் தினேஷின் கிண்டல்

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான புத்திக்கபத்திரணவை நாடாளுமன்றில் இருந்து வெளியேற்றுவதற்கு முன்னரே அவரது எல்லாக் கேள்விகளுக்குமான பதில்களை அளிக்க நடவடிக்கை எடுத்திடுவோம் -என்று கிண்டலாகப் பதில் கூறினார் ஆளும் கட்சி கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன. நாடாளுமன்றில் நேற்று ஐ.தே.கவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொலவில் தெமதொய கிராமிய நீர்வழங்கல் கருத்திட்டம் குறித்து நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

சம்பந்தப்பட்ட அமைச்சரான நிமல் சிறிபால டிசில்வா நேற்று சபைக்கு சமூகமளிக்காத காரணத்தினால் ஆளும் கட்சிப் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதிலளித்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கிண்டல் செய்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பிராசார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை மற்றும் சுயாதீனக்கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரணவினதும் மேல் மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீலால் லக்திலக்கவினதும் கட்சி உறுப்புரிமை இடைக்காலத்துக்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று ஐ.தே.க கடந்த வாரம் விடுத்திருந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இவற்றை மறுத்த புத்திக்க பத்திரண ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டி மாத்தறையில் விளக்கம் அளித்திருந்தார். எவ்வாறாயினும் இது தொடர்பான சர்ச்சை முடிந்ததாக இல்லை. இந்த நிலையிலேயே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இப்படிக் கூறியுள்ளார்.

# கல்வி வலயங்களின் கணக்குகளை நவம்பருக்கு முன் சமர்ப்பிக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.19

வடமாகாணப் பாடசாலைகளுக்கு அந்தந்த வலயங்களூடாக வழங்கப்பட்ட இந்த வருடத்துக்கான அபிவிருத்தி மற்றும் பொருள் கொள்வனவுக்கான நிதியில் இதுவரை செலவு செய்தவைக்கான கணக்கு அறிக்கை சமர்ப்பிக்காத வலயக் கணக்காளர்கள் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் கணக்கறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று வடமாகாணக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் வடமாகாணக் கல்வி அமைச்சின் கணக்காளர், வடமாகாணக் கல்வித் திணைக்கள கணக்காளர், 12 வலயங்களையும் சேர்ந்த கணக்காளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போதே மேற்படி கணக்கு விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது.

வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அந்தந்த வலயங்களின் ஊடாக வருடாந்தம் நிதி வழங்கப்படுகிறது.

இந்த வருடத்துக்கான இதுவரையான கணக்கறிக்கைகள் இதில் ஆராயப்பட்டன. இவ்வருடம் நிறைவடையும் தறுவாயில் உள்ளதனால் இந்த வருடத்துக்கென ஒதுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள், கொள்வனவுகள் என்பன உரியமுறையில் நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் எனவும் தவறியிருப்பின் அவற்றை உடனடியாக அமுல்படுத்தி எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் வேலைத்திட்டம், பொருள் கொள்வனவு ஆகியவற்றைப் பூர்த்தி செய்து கணக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (த-4)

உதயன்
19 ஒக்ரோபர் 2011 புதன்கிழமை

# யாழ்ப்பாணத்தில் தொடரும் மின்தடையால் தொழில் முயற்சிகள் செயலிழக்கும் அபாயம்

## வருமானமின்றி முயற்சியாளர்கள் தவிப்பு

சண்டிலிப்பாய், ஒக்.19

குடாநாட்டில் கடந்த சில மாதங்களாக இடைவிடாமல் தொடரும் மின்வெட்டுக் காரணமாக சிறுவியாபாரம் செய்வோர் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதுடன் தமது அன்றாட வருமானத்தையும் இழக்கவேண்டிய இக்கட்டு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மின்வெட்டுக் காரணமாகக் குறிப்பாக இரும்பு ஒட்டு வேலை செய்வோர், தச்சுத் தொழில் செய்வோர், வாகனம் பழுதுபார்க்கும் வேலைகளில் ஈடுபடுவோர், நகை செய்வோர், கடைச்சல் தொழில் புரிவோர், உள்ளூரில் சிறுசிறு உற்பத்திப் பொருள் தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் எனப் பலரும் தமது தொழில் முயற்சியில் பெரும் சிரமத்தையும் வருமான இழப்பையும் சந்தித்துள்ளனர்.

இந்த நிலை தொடர்ந்தால் இவர்களது தொழில் முயற்சிகள் முற்றாகச் செயலிழக்கும் அபாய நிலை ஏற்படும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்று வரும் வீதி அகலிப்புக்காக இடைக்கிடை மின்சாரம் நிறுத்தப்படுவதால் மின்சாரத்தையே நம்பி தொழில் செய்யும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தாம் பொறுப்பேற்கும் வேலைகளைக் குறிப்பிட்ட தினங்களுக்குள் வழங்க முடியாமல் அவர்கள் திண்டாடுகிறார்கள்.

நாட்டில் ஏற்பட்ட சமாதானத்தைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் வாகனப் போக்குவரத்து என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. அதற்கேற்றவாறு பிரதான வீதிகளை அகலமாக்கவேண்டிய கட்டாய தேவையும் ஏற்பட்டுள்ளது. இதனால் பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய வீதிகள் அகலமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றன.

வீதிகளை அகலமாக்கும் போது மின்கம்பங்களையும் அதற்கேற்றவாறு மாற்றியமைக்க வேண்டியுள்ளது. இப்பணிக்காக வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் மின்சாரத்தை நிறுத்தவேண்டிய நிலைக்கு சம்பந்தப்பட்டவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். அது மட்டுமன்றித் தினமும் நேரகாலம் இல்லாமல் முன்னறிவித்தல் இல்லாமல் மணிக் கணக்கில் மின்தடை ஏற்படுகின்றது. மின்தடை இடம்பெறாத நாளே கிடையாது என்கின்றனர் குடாநாட்டு மக்கள்.

இதனால் மின்சாரத்தை நம்பி இரும்பு வேலைகள் உட்பட மற்றும் வேலைகளைச் செய்து வரும் சிறுசிறு தொழிற்சாலைகள் தொடர்ந்தும் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் அவற்றின் வருமானத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது. (த-115)

# பிரதேச சபை உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு இதுவரை இல்லை

சண்டிலிப்பாய், ஒக்.19

வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு இரு மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை. இது குறித்து விசனம் தெரிவித்துள்ள உறுப்பினர்கள் இக் கொடுப்பனவுகளை மாதம் மாதம் வழங்குவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் முன் வரவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு அரசினால் மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தலைவருக்கு ரூபா 10 ஆயிரம், உப தலைவர்களுக்கு ரூபா 6 ஆயிரத்து 500, சாதாரண உறுப்பினர்களுக்கு ரூபா 5 ஆயிரம் வீதம் மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

வலிகாமத்தில் வலி.வடக்கு, வலி.தெற்கு, வலி.மேற்கு ஆகிய பிரதேசசபை உறுப்பினர்களுக்கு இரு மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் வலி.தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்களுக்கு இரு மாதாந்தக் கூட்டங்கள் முடிவடைந்த நிலையிலும் இது வரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இந்த நிலைப்பாடு குறித்து விசனமும், கவலையும் தெரிவித்துள்ள உறுப்பினர்கள் மாதம் மாதம் கொடுப்பனவுகளை வழங்குவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென்று தெரிவித்துள்ளனர். (த-115)

# சிவில் பாதுகாப்புக் குழு செயற்பாடுகள் ஆரம்பம்

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் சிவில் பாதுகாப்புக்குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களும் பொலிஸாரும் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

மர்ம மனிதன் உட்பட இரவு நேரங்களில் இடம்பெறும் வரும் திருட்டு போன்ற குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகக் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக பொலிஸாரின் உதவியுடன் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

கிராமங்கள் தோறும் தெரிவு செய்யப்பட்ட 40 சிவில் பாதுகாப்பு குழுக்களிலிருந்து சுழற்சி முறையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் பொலிஸாருடன் இணைந்து இரவு நேரங்களில் ரோந்தில் ஈடுபட்டு வருகிறார்கள். சிவில் பாதுகாப்புக்குழுக்களின் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மக்கள் இரவில் நிம்மதியாகத் தூங்குகின்றனர். (த-115)

## எதிர்கால முத்துக்கள்...



வரவேற்பு: நவாலி இந்து சமய விருத்திச் சங்க முன்பள்ளியின் சிறுவர்தின விழாவின் போது ஆசிரியர்களாலும், பெற்றோர்களாலும் பாடசாலை மாணவர்கள் மாலை அணிவித்து, மலர் தூவி வரவேற்கப்படும் காட்சி. (த)

## கால்நடைகளால் விவசாயிகள் பெரும் சிரமம்

ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதிகளில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு மிகுதி எங்கே கட்டாக்காலிக் கால்நடைகள் இன்னும் கட்டி வைக்கப்படவில்லை.

விதைத்த வயல்களில் இவை நுழைந்து கண்டபடி திரிவதால் வயல் சேதமடைவதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இவற்றைக் கட்டுப்படுத்த விவசாய சம்மேளனங்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இவர்கள் தெரிவிக்கின்றனர். (த-100)

## மணிப்புரி வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.19

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட மணிப்புரி வீதி முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சபைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பல வருடங்களாகப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருந்த மணிப்புரி வீதி ''நெல்சிப்'' திட்டத்தின் மூலம் முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதி அபிவிருத்திக்கு 42 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீதி அபிவிருத்தியின் பின்னர் பொது மக்களின் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளதாக அந்தப்பகுதி பொது அமைப்பு ஒன்று தெரிவித்தது. (த-302)

# நெடுந்தீவு அஞ்சலகத்துக்கு புதிய கட்டடம்

நெடுந்தீவு அஞ்சல் அலுவலகக் கட்டடத்தின் புனர்நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரட்ணம் தெரிவித்தார்.

இந்தக் கட்டடத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது புனர்நிர்மாணத்துக்கான கேள்விப் பத்திரத்தை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கோரியுள்ளது. விரைவில் கட்டடப்பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன என்றார் ஜெபரட்ணம். (த-26)

# சொத்து விவரங்களைத் தயாரிப்பதில் உள்ளூராட்சி உறுப்பினர் மும்முரம்

சண்டிலிப்பாய், ஒக். 19

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தமது சொத்து விவரங்களைத் தயாரிப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர். நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தமது சொத்து விவரங்களைக் குறிப்பிட்ட காலத்துக்குள் தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கடந்த வாரம் தேர்தல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

தேர்தல் திணைக்களத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தமது சொத்து விவரங்களைத் தயாரிப்பதில் தற்பொழுது ஈடுபட்டுள்ளார்கள்.

யாழ். தேர்தல் திணைக்களத்திலிருந்து இதற்கான படிவத்தைப் பெற்றுக்கொண்ட உறுப்பினர்கள் மிக அவதானத்துடன் அப்படிவத்தைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

இப்படிவங்கள் பிரதேச சபைச் செயலாளர் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன. (த-115)

# அராலி - வேலணை கடற்பாதை நிதி ஒதுக்கியும் புனரமைப்பு இல்லை

## காரணம் கோருகிறார் பிரதேசசபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஒக். 19

அராலி - வேலணை கடற்பாதையைப் புனரமைப்புச் செய்வதற்கு அரச அதிபர் 05.08.2009 இல் 50 மில்லியன் ஒதுக்கிய போதும் அந்தத் திட்டம் இதுவரை நிறைவேறவில்லை.

வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்தப் புனரமைப்புக்கான மதீப்பீட்டைத் தயாரித்து அதற்கான ஒப்புதலும் பெறப்பட்ட நிலையில் வேலணை -அராலி கடற்பாதை புனரமைப்பு இன்றி உள்ளது.

இதனைப் புனரமைப்புச் செய்யாததன் காரணம் என்ன என்று வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

2009 இல் அராலி- வேலணை கடற்பாதையின் அபிவிருத்தி குறித்து வேலணைப்பிரதேச செயலகம், வேலணைப் பிரதேச சபை, வலி.மேற்கு பிரதேச செயலகம், வலி.மேற்கு பிரதேச சபை, பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம் ஆகியவற்றின் அதிகாரிகள், அரச அதிபர், வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பிரதம பொறியியலாளர் ஆகியோர் கூடி மேற்படி அபிவிருத்தித் திட்டம் 2010- 2011 ஆகிய காலங்களில் முன்னெடுக்கப்படும் எனக் கூறிய போதும் இதுவரை இந்தத் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

எனவே மேற்படி விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிக அக்கறை காட்டி 38 வருடங்களுக்கு மேலாகத் தீவகத்தையும் வலிகாமத்தையும் இணைக்கும் மேற்படி கடற்பாதையைத் துரித கதியில் புனரமைக்குமாறு வலி. மேற்கு பிரதேச சபை தர்மலிங்கம் நடனேந்திரன் கேட்டுள்ளார். (த-302)

## மின் தடைப்பட்டாலும் எரிபொருள் தடையின்றி விநியோகம்

நவாலி, ஒக்.19

மானிப்பாய் எரிபொருள் விற்பனை நிலையத்தில் மின்சாரம் தடைப்படும் வேளையில் ''ஜெனரேற்றர்'' மூலம் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படுவதால் பல பகுதிகளிலிருந்தும் வாகனங்கள் இங்கு வந்து எரிபொருளை நிரப்பிச் செல்கின்றன.

கடந்த இரு நாள்கள் அடுத்தடுத்து மின்சாரம் தடைப்பட்ட போதும், இங்கு ஜெனரேற்றர் மூலம் எரிபொருள் விநியோகிக்கப்படுவதால் வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று எரிபொருள் நிரப்பிச் சென்றன. இதன் மூலம் நாளொன்றுக்கு 4 லட்சம் ரூபா வீதம் 8 லட்சம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-100)

# நாணயக்குற்றித் தொலைபேசிகளை நாடாத குடாநாட்டுப் பொதுமக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.19

நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் ஆகியவற்றின் பாவனை குடாநாட்டில் அதீத வளர்ச்சி பெற்றதை அடுத்துப் பிரதான வீதிகள், பொது இடங்கள் ஆகியவற்றில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த நாணயக் குற்றித் தொலைபேசிகளின் பக்கம் பாவனையாளர்கள் திரும்பியும் பார்க்காத நிலைமை யாழ்ப்பாணத்தில் வந்துவிட்டது.

ஒரு காலத்தில் பாவனையாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய நாணயக் குற்றித்தொலைபேசிகள் அனைத்தும் இப்போது கவனிப்பாரின்றித் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் எவரும் தொட்டுக்கூடப் பார்ப்பதில்லை. அந்தளவுக்குக் குடாநாட்டில் தொடர்பாடல் வசதி வளர்ந்துவிட்டது என்றால் நினைத்துப் பாருங்கள்.


இதனால் வருமானம் இன்றி பொது இடங்களில் ஓய்ந்து கிடக்கும் நாணயக் குற்றித் தொலைபேசிகளைக் கழற்றி எடுக்கும் பணியில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் ஈடுபட்டுள்ளது.

மக்களின் வீடுகளில் இப்போது கேபிள் தொலைபேசிகள், சி.டி.எம்.ஏ தொலைபேசிகள், கைத்தொலைபேசிகள் என வகை வகையான வசதிகள் வந்து விட்டமையால் நாணயக் குற்றித் தொலைபேசிகள் பயன்பாட்டை இழந்துவிட்டன. இதனால் இவற்றைக் கழற்றி எடுக்கத் தீர்மானித்துள்ளதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நாணயக்குற்றித் தொலைபேசிகள் தான் குடாநாட்டில் மக்களின் மிக முக்கிய தொலைத் தொடர்புச் சாதனங்கள் பொது இடங்களில் பொருத்தப்பட்டுள்ள அவற்றைப் பயன்படுத்துவதற்கு மக்கள் மிக நீண்ட வரிசையில் மணிக்கணக்கில் காத்திருந்த வரலாறுகளும் உள்ளன. அப்போது அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதற்கு சங்கக் கடைகளில் கூட்டம் நின்றது போல இந்த நாணயக் குற்றித் தொலைபேசிகளுக்கும் அப்போது அதிக மவுசு. அப்போது வீடுகளுக்கான தொலைபேசிகளைப் பெறுவதற்குப் பல கட்டுப்பாடுகளும் இருந்தன.

இந்த நிலையால் நாணயக் குற்றித் தொலைபேசிகளின் பாவனை உச்சக் கட்டமாக இருந்ததால் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்துக்கும் நல்ல வருமானம் கொட்டியது. இதனையடுத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகரித்திருந்தது ரெலிக்கொம்.

தற்போது தொடர்பாடல் வளர்ச்சி காரணமாக நாணயக்



குற்றித் தொலைபேசிகளின் பாவனை குறைவடைந்ததையடுத்து அவற்றைக் கழற்றும் பணியில் ரெலிக்கொம் ஈடுபட்டுள்ளது. யாழ்.பஸ்நிலையம், யாழ்.போதனா வைத்திய சாலை, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி ஆகியவற்றிலேயே இந்த நாணயக்குற்றித் தொலை பேசிகள் இப்போது உள்ளன. அவற்றில் தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்ள தொலைபேசி மட்டுமே மாணவர்களால் பயன்படுத்தப்படுகிறது. ஏனைய இரண்டும் பாவனையற்று உள்ளன என ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. ஏனைய இடங்களில் இருந்த நாணயக் குற்றித் தொலைபேசிகள் கழற்றி அகற்றப்பட்டுள்ளன. (த-26)

# மாவை கலட்டியில் 100 குடும்பங்களுக்கு உதவித் திட்டம் வழங்குவதில் சிக்கல்

## சொந்தக் காணிகள் இல்லாமையால்

யாழ்ப்பாணம், ஒக்.19

வலி வடக்கில் கொல்லங்கலட்டி (ஜே/225) கிராம சேவகர் பிரிவின் கீழ் உள்ள மாவை கலட்டி கிராமத்தில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு நிரந்தர காணிகள் இல்லாமையினால் அவர்களுக்கு உதவித் திட்டங்களை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

மாவை கலட்டிப் பிரதேசம் கடந்த மே மாதம் 10 ஆம் திகதி விடுவிக்கப்பட்டது. தற்போது குறித்த பிரதேசத்தில் 200 குடும்பங்கள் வரை மீளக் குடியமர்ந்துள்ளன.

கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் கரித்தாஸ் நிறுவனத்தினால், 60 குடும்பங்கள் வரை மீளக் குடியமர்ந்திருந்த வேளையில் 13 குடும்பங்களுக்கு மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. தற்போது மேலதிகமாக 140 குடும்பங்கள் வரை மீளக் குடியமர்ந்துள்ளன.

சமுர்த்தி திட்டத்தின் மூலம் அந்தப் பகுதியில் 40 மலசல கூடங்களை அமைக்கும் பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.


குறித்த மாவை கலட்டி பிரதேசத்தில் 200 குடும்பங்கள் இருக்கின்ற போதும் 100 குடும்பங்களுக்கே உதவித் திட்டங்கள் வழங்கக் கூடிய நிலை காணப்படுகின்றது.

எஞ்சிய 100 குடும்பங்களும் இடப்பெயர்வுக்கு முன்னர், காங்கேசன் துறை சீமெந்து ஆலைக்குத் தமது காணிகளை கொடுத்துள்ளதுடன் அதற்கான பணத்தையும் பெற்றுள்ளனர். இருந்த போதும் கல் அகழ்வு மேற்கொள்ளப்படும் வரை அந்தக் காணிகளில் மக்கள் இருக்கலாம் என்ற அடிப்படையிலேயே அந்தப் பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்தனர்.

இதன் பின்னர் யுத்தம் ஆரம்பமானதையடுத்து குறித்த பகுதிகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்தனர். இதன் பின்னர் நீண்ட காலத்துக்குப் பின்னர் தற்போது குறித்த காணிகளிலேயே மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

குறித்த காணிகள் அந்த மக்களுக்கு சொந்தமானவையாக இல்லாமையினால் அவர்களுக்கான உதவித் திட்டங்கள் வழங்குவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. இருப்பினும் சமுர்த்தித் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 40 மலசல கூடங்களில் ஒரு சில மலசல கூடங்கள் இந்தப் பகுதி மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. (த-15-406)

**வெற்றிக் கனி...**



கிடைத்தது: சர்வதேச சிறுவர் தின நிகழ்வு அண்மையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெற்றது. சிறுவர் தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவன் ஒருவனுக்குச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா பரிசில் வழங்குகிறார். (தகி)

# வல்வெட்டித்துறைக்கு முதற்கட்டமாக 150 கேபிள் தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம், ஒக்.19

வடமராட்சியில் வல்வெட்டித்துறை பிரதேசத்துக்கு நிலத்தடிக் கேபிள் இணைப்பு வழங்கும் பணிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக இங்கு 150 தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கேபிள் தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கு நவீன வசதிகள் கொண்ட பரிவர்த்தனை அலகு இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறைப் பிரதேசத்துக்கும் இந்த வாரத்தில் கேபிள் தொலைபேசி இணைப்புகளை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான புணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் கேபிள் தொலைபேசி இணைப்பு வசதிகளை அதிகளவில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் இந்த மாதத்தில் குடாநாட்டின் சில பிரதேசங்களுக்கும் புதிய கேபிள் தொலைபேசி இணைப்புகளை வழங்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரியாலை, கொக்குவில், ஆனைக்கோட்டை போன்ற பகுதிகளுக்குப் புதிய கேபிள் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அந்த அதிகாரி கூறினார். (த-26)

# குடும்பப் பெண் கிணற்றில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.19

தொண்டமனாறு கெருடாவில் பகுதியின் கிணறு ஒன்றுக்குள் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கெருடாவில் கிழக்குப் பகுதியில் கிணறு ஒன்றுக்குள் இருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். கெருடாவில் கிழக்கு சீதாபுரம் பகுதியைச் சேர்ந்த சிறிதரன் ஈஸ்வரி (வயது 38) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இது குறித்து தகவல் கிடைத்ததும் ஸ்தலத்துக்கு விரைந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தியதுடன் சடலத்தை மீட்டு வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.(த-319)

# 28 ஆண்டுகளின் பின் நாவற்குழியில் நெற்செய்கை

கைதடி, ஒக்.19

28 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏ-9 வீதியில் நாவற்குழி இறால் பதனிடும் தொழிற்சாலைக்கு மேற்குப் பக்கமாகவுள்ள காணிகளில் நெற்செய்கைக்கான ஆயத்தங்களில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி காணிகளில் முன்னைய காலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனினும் 1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட போர் நடவடிக்கையைத் தொடர்ந்து இந்தப் பகுதியில் இலங்கை இராணுவம் முகாமிட்டு இருந்தமையால் அன்று முதல் இந்தப் பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை.

நீண்ட காலமாக இந்தக் காணிகள் செய்கை பண்ணப்படாமையால் இந்தப் பகுதி பற்றைக்காடாக இருந்தது. இப்போது இந்தப் பகுதி துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சுமுக



நிலையை அடுத்து காணி உரிமையாளர்கள் தத்தமது காணிகளை அளவிட்டு எல்லைகள் போட்டுள்ளதுடன் இங்கு நெற்செய்கை மேற்கொள்வதற்காக நிலத்தை உழுது பண்படுத்தல் உள்ளிட்ட வேலைகளிலும் ஈடுபட்டுவருகின்றனர். தற்போது பெய்து வரும் மழையை அடுத்து இந்தப் பகுதியில் நெல் விதைப்பையும் சில தினங்களில் விவசாயிகள் மேற்கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்தக் காணிகளில் 2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உழவு இயந்திர உரிமையாளர்கள் சிலர் நூற்றுக்கு மேற்பட்ட 'லோட்' மணலை அங்கிருந்து களவாக ஏற்றிவிற்பனை செய்ததாகவும் அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (த-288)

# தீவகத்தில் மேலும் ஒரு மின்மாற்றி

யாழ்ப்பாணம், ஒக்.19

புங்குடுதீவு மற்றும் மண்கும்பான் பிரதேசங்களுக்கு மின்சார இணைப்புகள் மேலதிகமாக வழங்கப்படவுள்ளன.

இதற்கென இந்தப் பிரதேசத்தில் மேலும் ஒரு மின்மாற்றியை அமைப்பதற்குத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மண்கும்பானில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கும் மின்சார இணைப்பு வசதிகள் வழங்கப்படவுள்ளன.

இதனைவிடப் புங்குடுதீவுக்கும் இதன் மூலம் மேலதிக மின் இணைப்பு வசதிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன. (த-26)

உதயன்
19 ஒக்ரோபர் 2011 புதன்கிழமை

ஈழத்தமிழர் அவலங்களைச் சித்திரிக்கும்

# 'உச்சிதனை முகர்ந்தால்' தீபாவளிக்குத் திரையில்




கவிதை பேசும் விழிகள் முழுக்க கனவுகளோடு பறந்து திரிந்த மட்டக்களப்பு இளம் புறா புனித வதிக்கும், உணவு மறந்து - உறவு மறந்து தாயகக் கனவுடன் தலைநிமிர்ந்து நடந்த பெண் போராளிகளுக்கும் இடையிலான நட்பும் பாசமும் அழுத்தமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும் 'உச்சி தனை முகர்ந்தால்' திரைப்படம் தமிழகத்தில் தீபாவளி தினத் தன்று திரைக்கு வரவுள்ளது என்று தமிழர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புனித நதி போன்று கம்பீரமாக நகர்ந்து கொண்டிருந்த புனித வதியின் வாழ்க்கை, 2009 மார்ச் முதல் திகதி எப்படி சிதைந்து போகிறது என்பதை உருக்கமாகச் சொல்கிறது உச்சிதனை முகர்ந்தால்.

இந்தப் படத்தைப் பார்க்கும் எவரையும் அந்தப் புனித நதி யின் பயணம் இளக வைக்கும் என்று நம்பிக்கையோடு கூறு கிறார் இயக்குநர் புகழேந்தி தங்கராஜ்.

இலங்கையால் சிதைத்துச் சீரழிக்கப்பட்ட ஆயிரமாயிரம் அப்பாவிக் குழந்தைகளின் அடை யாளம் புனிதவதி. தாய்த் தமிழகத்திலிருந்து 26 ஆவது மைலில் என்ன நடந்தது என் பதை அதிர்ச்சியோடு சித்திரிக் கின்ற நேரடிச் சாட்சியமாக தமிழ் மக்களைச் சந்திக்க இருக் கிறாள் 13 வயது மட்டக்களப்பு பாடசாலை மாணவி புனிதவதி.

கள்ளங்கபடமில்லாத அந்தச் சிட்டுக்குருவியின் சிறகுகள் சிறுகச் சிறுக உதிர்ந்து போவதைச் சித்தரிக்கும் கண்ணீர்க் கவி தையே, 'உச்சிதனை முகர்ந்தால்'.

சத்யராஜ், நாசர், சீமான், சங்கீதா, லட்சுமிராமகிருஷ்ணன், லாவண்யா, ஈழத்து மைக்கேல் ஜாக்சன் பிரேம்கோபால் என்று நீளும் நட்சத்திரக் கூட்டத்துக்கு இடை யில், ஒய். புனிதவதியாக நடித் திருக்கும் சிறுமி நீநிகா துருவ நட்சத்திரம் போன்று மின்னுகிறாள்.

தணிக்கைக் குழு இந்தத் திரைப் படத்துக்கு யூ/ஏ சான் றிதழை வழங்கியுள்ளது.

உச்சிதனை முகர்ந்தால் வெளி யீட்டு விழாவில் பங்கேற்பதற் காக, இந்தப் படத் தயாரிப்பில் முழுமையாக ஈடுபட்ட நோர்வே வாழ் தமிழர்கள் ஸ்டீவன் புஷ் பராஜா, ஸ்ரீபாலசுந்தரம், சிவ கணேஷ்தில் லையம்பலம், ரமணன் கந்தையா, விஜயசங் கர் அசோகன் ஆகியோர் சென்னை வரவுள்ளனர்.

# கூட்டமைப்பை விமர்சிக்க பிள்ளையானுக்கு எந்த அருகதையும் இல்லை; யோகேஸ் எம்.பி.

## கூட்டமைப்பின் பிச்சையில் முதலமைச்சரானவர்தான் சந்திரகாந்தன்

அம்பாறை, ஒக்.19

''தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு போட்ட பிச்சையால் கிழக்கு மாகாண முதலமைச் சரான சிவநேசதுரை சந்திர காந்தனுக்கு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பதற்கு எவ்வித அரு கதையுமில்லை''

இவ்வாறு, மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த்தேசியக் கூட் டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித் தார்.

கல்முனை மாநகரசபைக்கு தமிழரசுக்கட்சி சார்பில் போட் டியிட்டு வெற்றிபெற்றுள்ள நான்கு உறுப்பினர்களினதும் பதவி யேற்பு நிகழ்வு பாண்டிருப்பு -நற்பிட்டிமுனை பிரதான வீதி யிலுள்ள தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட அரசியல் பணிமனையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார். முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர். வில்லியம் தோமஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில்:-

''தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டி யிடாததால்தான் சிவநேச துரை சந்திரகாந்தன் கிழக்கு முதலமைச்சராகும் சந்தர்ப் பத்தைப் பெற்றுக்கொண்டார்.

தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு அவருக்குப்போட்ட பிச்சைதான் முதலைமைச்சர் பதவியாகும். அவ்வாறானவர் கல்முனையில் பாடசாலை விழாவொன்றுக்கு வருகை தந்து தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பை விமர்சித்துப் பேசி யிருக்கிறார்.

கூட்டமைப்பை இவ்வாறு விமர்சிப்பதற்கு அவருக்கு எந்த அருகதையும் இல்லை, நாம் போட்டபிச்சையில் வாழும் அவருக்கு நாம் பதி லளிக்க வேண்டிய அவசிய முமில்லை, அவ்வாறு பதில ளிப்பதற்குத் தகுதி கொண் டவரும் அவரல்லர்.

மேலும் கல்முனை மாநகர சபைத்தேர்தல் முடிவுகளால் தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வெறுப்பதாக அர்த்தமில்லை. வாக்கின் பெறு மதியை எமது மக்கள் உணரா மையே சற்றுப் பின்னடைவுக் குக் காரணமாகும்.

எனினும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் என்றும் தமிழ்த் தேசியத்துடனும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புடனும்தான் இணைந்திருக்கின்றன ரென் பது மறுக்க முடியாத உண் மையாகும்.

இதனை நாவிதன்வெளி, காரைதீவு, ஆலையடி வேம்பு, திருக்கோவில் பிரதேசசபைத் தேர்தல்களில் எமது தமிழ் மக்கள் நிரூபித்துள்ளமை சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மக்கள் தந்த ஆணைப்படி நேர் மையாக தமது கடமையை முன்னெடுத்து வருகின்றது. விஷமிகள் எத்தகைய பிரசாரங் களைச் செய்தபோதும் நாம் எமது உரிமையைப் பெற்றுக் காட்டுவோம், மக்கள் உரிமையு டன் தலை நிமிர்ந்து வாழ வழி வகுப்போம்''- என்றார். (வ-30)

# வீதி அகலிப்புப் பணிகளுக்காக 2 தினங்கள் மின் தடை

யாழ்ப்பாணம், ஒக்.19

உயர் அழுத்த மின் விநி யோக வலைப்பின்னலில் அவசர திருத்த வேலைகள் செய்யும் பொருட்டும் வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோகமார்க் கங்களிலுள்ள மின் தூண்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப் பதாலும் இன்று புதன்கிழமை மற் றும் நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை ஆகிய இரு தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப் பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களில் மின்சார விநியோகம் தடைப்படும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக் கிழமை காலை 8.30 மணி தொடக் கம் பிற்பகல் 5மணி வரை உரும் பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப்பிரதேசம்-

திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப்பகுதி, ஸ்ரான்லி வீதி, புன்னாலைக் கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி ஈவினைப்பிரதேசத்தின் ஒரு பகுதியிலும் -

எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல் லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், குப்பிளான், மயிலங்காடு, காங் கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர் -

ஆவரங்கால், அச்சுவேலி, இடைக் காடு, வடமராட்சிப் பிரதேசம், இணு வில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயி லடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி-.

கோம்பயன் மணல் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத் தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களிலும்

எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை புன்னாலைக் கட்டு வன் வடக்கு, தெற்கு, மயிலங் காடு பிரதேசத்தின் ஒருபகுதி ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் -

மின்சார விநியோகம் தடைப் படும் என்று இலங்கை மின்சார சபையின் சுன் னாகம் பிராந்திய நிலையத்தின் மின் பொறியியலாளர் தெரி வித்துள்ளார்.

(வ-311)

# மாணவர் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டல்

வரணி, ஒக்.19

மாணவத் தலைவர்கள், வகுப் புத் தலைவர்களுக்கான சின் னம் சூட்டும் நிகழ்வு அண் மையில் வரணி மகா வித்தி யாலயத்தில் இடம் பெற்றது.

வரணி மகாவித்தியாலய அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் யாழ். பல் கலைக்கழக பொருளியற் துறை விரிவுரையாளர் செ.சந் திரசேகரம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். (வ-122)

ENGLISH COURSE
CCHS -AHAVOLI, JAFFNA

**English Course leading to Diploma (level 111)**
**(all skills including literature)**

Classes : Week days from 3.30-5.30 for 6 months.
8th batch commences soon (20 students only)
Apply on forms available at AHAVOLI before 05-11-2011
For further details contact
Director,
Ahavoli, St.Patrick's Road, Jaffna.

தேவை

**யாழ்.நகரில் உள்ள பிரபல உணவகம் ஒன்றுக்கு உணவு பரிமாறுவதற்கு (Supplier) ஒருவர் தேவை.**
**உடன் தொடர்பு கொள்ளவும்**
T.P: 0771751495

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் இராசரத்தினம் சிவபுரநாதர்
திருமதி சிவபுரநாதர் இராசவதி

| 1936★10★01 | தோற்றம் | 1939★05★02 |
|---|---|---|
| 2010★10★29 | மறைவு | 2010★02★04 |

திதி:2011.10.19

எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டி எங்களை வாழவைத்த
எம் அன்புத் தெய்வங்களின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

நவாலி வீதி, சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
அன்பு மகள், ஆசைப் பேரன்

## மரண அறிவித்தல்



### விஸ்வலிங்கம் தெய்வேந்திரம்

கொக்குவில், தலையாழியைப் பிறப் பிடமாகவும் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான விஸ்வலிங்கம் தெய்வேந்திரம் 17.10.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி விஸ்வலிங்கம் - கனகம்மா தம்பதியரின் மகனும், காலஞ் சென்றவர்களான கந்தையா அப்புத்துரை - இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும்,சரஸ்வதி(புஷ்பம்)யின் அன்புக் கணவரும் நிரஞ்சன், நிரஞ்சினி(சுதா), அகிலா (உஷா) ஆகியோரின் தந்தையும் சிவகாந்தி,சந்திரமோகன்,சுகுமார் ஆகியோரின் மாமனும் நிரோஜன், நிரோஜா, நிதர்ஷன், நிகிலன், ரிஷி, ஹரி, ஹரினி, பிருந்தா, வினோஜன், ஷகானா, ஆகியோரின் பேரனும் சர்வானந்தன், சறோஜினிதேவி ஆகியோரின் சகோதரரும் தியாகேஸ்வரன், செல்வலிங்கம், கைலேஸ்வரன்,சுவர்ணா(சசி), நகுலேஸ்வரன், கிருபா (லதா), அனுஷா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா ரொறாண் டோவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: உறவினர்.

## வியனம் கேட்டீர்களா?

### பெற்றோரிடம் பேரம் பேசுமளவுக்கு இன்றைய இளைஞர்கள்..............

தேர்தல் முடிந்துவிட்டது. ஆனால் எங்கள் வாக்கு.. என்றொரு சுவரொட்டி தென்பட்டது. ஆர்வத்தோடு சென்று பார்த்தேன். அதில் 'எங்கள் வாக்கு மதுபானம் பாவிக்காத ஒருவருக்கே' என்று இருந்தது. ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் அதனை வெளியிட்டிருந்தது. இத்தகைய சுவரொட்டிகளைத் தேர்தல் காலங்களில் வெளியிட்டால் மிக நன்றாயிருந்திருக்கும். வேட்பாளர்களுக்கு இருக்கும் தகுதிகளாக மது பாவனையற்றவராக இருத்தல் என்பதையும் சேர்த்துக் கொள்வது இதைவிடச் சிறந்த நடவடிக்கையாகும்.

ஜனாதிபதியும் போதைப் பொருளற்ற இலங்கையை உருவாக்கவுள்ளதாகப் பல தடவை பேசியுள்ளார். அது சொல்வடிவம் பெறும்போது மக்கள் வாழ்த்துவர். அண்மையில் உள்ளூராட்சித் தேர்தலில் வென்ற தனது கூட்டுக்கட்சி அங்கத்தவர்களிடையே ஜனாதிபதி பேசும் போது போதைப்பொருள் வியாபாரிகள், ஆயுதக் கொள்ளையர், கப்பம் பெறுவோர் ஆகியோர் நாட்டிலிருந்து அகற்றப்படுவர் என்று அறிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கது. இதை அவர் செயற்படுத்த விழைந்தால் அமைச்சரவையிலிருந்து, நாடாளுமன்றத்திலிருந்து, மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளிலிருந்து முதலில் களையெடுப்புச் செய்ய வேண்டியிருக்கும் என்பது பொதுமக்களின் கருத்தாகும். பல மதுபான விற்பனை நிலையங்கள் அரசியல்வாதிகளாலேயே நடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு மதுபானம், சிகரெட் வழங்கினால் அந்த விற்பனை நிலையம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாண மதுவரித் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளதாகப் பத்திரிகைச் செய்தியொன்று கூறுகின்றது.

இன்றுள்ள பிரதான பிரச்சினை இளவயதிலுள்ள பிள்ளைகள் மத்தியில் தொற்றியுள்ள மது, சிகரெட் பாவனைப் பழக்கமாகும். பிள்ளைகள் பெற்றோர்களின் கண்காணிப்பில் இருந்த, மாலை வேளைகளில் விளையாட்டில் ஈடுபட்ட காலங்கள் அருகிவிட்டன. ரியூசன் கலாசாரத்தில் நகரப்புறங்களை நோக்கி மாலை வேளைகளிலும், விடுமுறை நாள்களிலும் செல்லும் ஆண்பிள்ளைகள் தமது சகபாடிகளுடன் இணைந்து சிகரெட், மதுபானப் பழக்கங்களுக்கு அடிமையாகி விடும் நிலைமை காணப்படுகின்றது. பிள்ளைகளின் வாழ்க்கைக் கோலம் மாறி விட்டது. அவர்களின் கைகளில் பணப்புழக்கம் அதிகரித்துள்ளது. பெற்றோருடன் பேரம் பேசுமளவுக்கு அவர்கள் கலாசார மாற்றத்துக்கு உள்ளாகியுள்ளனர். இன்று இது விஸ்வரூபப் பிரச்சினையாக, அவர்களது தான்தோன்றித் தனமான செயற்பாடுகளுக்கு வித்திட்டுள்ளது.

அது ஒரு நகரம். பாடசாலை, வங்கிகள், கடைத்தொகுதிகள், தபாலகம், சந்தை என்பவற்றோடு மதுபான விற்பனை நிலையங்களும் உள்ளன. நூறு மீற்றர் இடைவெளிக்குள் இரண்டு பார்கள் (அங்கிருந்தே அருந்த வேண்டியவை), ஒரு மதுபான விற்பனை நிலையம், ஒரு கள்ளுத் தவறணை என்பன உள்ளன. கள்ளுத் தவறணையோ பிரதான வீதியிலிருந்து முப்பது மீற்றர் உள்ளே ஒழுங்கையில் அமைந்துள்ளது. பார்களில் குறித்த வகையினரே மது அருந்த முடியும்.

மதுபான விற்பனை நிலையத்திலும் நின்று அருந்த முடியாது. எனவே, இருக்கவே இருக்கிறது கள்ளுத் தவறணை. தவறணைக்குள் சிலர் சென்று அருந்துவர். அது முடியாதவர்கள் பக்கத்திலுள்ள பற்றைக் காணிகளுக்குள் அமர்ந்து அருந்துவர்.

மாலை மயங்கும் நேரம் இளவயதினர் பதுங்கிப் பதுங்கி வருவர். மிரளும் விழிகளுடன் அங்குமிங்கும் திரிவர். பியர் போத்தலோ, ரின்னோ கிடைத்ததும் பற்றைக் காணிகளுக்குள்ளோ, இருட்டில் வீதியிலோ நின்றோ அருந்திவிட்டு அவற்றை வீதியில் எறிந்து விட்டுச் செல்வர். சிலருக்கு வீரம் வந்து போத்தல்களை வீதியில் உடைத்து விட்டோ, அயலிலுள்ள வீடுகளின் வேலிக்கு மேலாக எறிந்து விட்டோ செல்வர். தட்டிக் கேட்பவர் கடும் வார்த்தைகளால் துசிக்கப்படுவர். சிலவேளை அடி வாங்கவும் நேரிடும். ஏனையோர் எனக்கேன் என்று எண்ணியவாறு நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டு நடைப்பிணங்களாகச் செல்வர்.

அண்மையில் ஒருவர் டெங்கு எச்சரிக்கையைத் தொடர்ந்து தனது பற்றை சூழ்ந்த பனை வளவைத் துப்புரவு செய்தார். அங்கு நூற்றுக்கணக்கான போத்தல்களைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்து விட்டார். அவரது வளவு ஒரு 'மினிபாராக' இருந் துள்ளது.

மதுவரித் திணைக்களமும், பொலிஸாரும் தங்கள் கடமையை உணர்வுபூர்வமாகச் செய்தால் எமது எதிர்காலச் சந்ததியினரை ஆரோக்கியமான சமூகமாகக் கட்டியெழுப்பலாம். மதுபான விற்பனை நிலையங்களின் 'கோட்டா'வை எதிர்பார்த்து சமூகக்கடமையைக் கோட்டைவிடலாகாது.

எனவே, எமது எதிர்கால சந்ததியை அழிவிலிருந்து மீட்டெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பை மதுவரித் திணைக்களமும் பொலிஸாரும் கையேற்க வேண்டியது இன்றியமையாததாகும்.

விழிச்சான் குஞ்சு.

# மாணவர் ஒன்றியத் தலைவர் மீதான தாக்குதலுக்கு அரசே முழுப்பொறுப்பு

## 'நாம் இலங்கையர்' அமைப்பு கண்டனம்

கொழும்பு,ஒக்.19

யாழ். குடாநாட்டில் 55 ஆயிரம் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நிலையில், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்கவேண்டும்.

- இவ்வாறு 'நாம் இலங்கையர்' அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் உதுல் பிரேமரத்ன நேற்றுமுன்தினம் தெரிவித்தார். இந்தத் தாக்குதலைக் கண்டித்து அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கத்திடம், "உங்களுக்குத் தனிநாடுதேவையா" எனக் கேட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். அதேபோன்று இந்தத் தாக்குதலுக்கான முழுப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் 50 ஆயிரம் இராணுவத்தினரும், 5 ஆயிரம் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் அரங்கேறியுள்ளது.

அத்துடன், இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று இதுவரை எவரும் கைதுசெய்யப்பட வில்லை. குற்றவாளிகளைப் பொலிஸாரால் கைதுசெய்ய முடியாது போயுள்ளது.

வட பகுதியை அரசு தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, அப்பகுதியில் வாழும் தமிழ்மக்களைப் பயமுறுத்தி, அடிமைகளாக மாற்றி நிர்வாகம் செய்ய முயற்சிக்கின்றது என நாம் அன்று முதல் கூறி வருகிறோம்.

55 ஆயிரம் படையினர் யாழ். குடாநாட்டில் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளபோது அங்கு இனந்தெரியாதோரால் இவ்வாறான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனக் கூறுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-சி)



மொழி மற்றும் சமூக ஒற்றுமை எனும் தொனிப்பொருளில் மொழிகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான ஒன்பதாவது சர்வதேச மாநாடு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்துள்ளார்.

# பணப்பொதியை தவறவிட்டுச் சென்ற கொள்ளையர்கள்

கொழும்பு,ஒக்.19

புத்தளத்திலுள்ள வங்கி ஒன்றில் வைப்பிலிடுவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட 47 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணத்தைக் கொள்ளை யிட்ட கொள்ளையர்கள் அதில் முப்பது லட்சம் ரூபா பணம் அடங்கிய பொதியைத் தவறவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளது. புத்தளம் பஸ்தரிப்பு நிலையத்துக்கு அண்மையி லுள்ள வங்கி ஒன்றில் ஒருவர் 4,750,000 ரூபாவை வைப்பிலிடுவதற்காக கொண்டு சென்றிருந்தார்.

அப்போது திடீரென வங்கிக்குள் நுழைந்த இனந்தெரியாதநபர்கள் அந்தப் பணத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு தப்பியோடியபோது அதில் முப்பது லட்சம் ரூபா பணம் அடங்கிய பொதியைக் கீழே தவறவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ச)

# சர்வதேச நிதி ஆலோசனைக்கேற்ற வருவாயைப் பெருக்க வரி அதிகரிப்பு

## பஸில் ராஜபக்ஷ தகவல்; விக்கிலீக்ஸில் கசிவு

கொழும்பு,ஒக்.19

சர்வதேச நாணய நிதியம் அளித்த ஆலோசனைகள் அனைத்தையும் தமது அரசு நிறைவேற்றியுள்ளது என்று பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார் எனக் குறிப்பிட்டு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம், வொஷிங்டனுக்கு அனுப்பிய இரகசிய கேபிள் தகவல் 'விக்கிலீக்'ஸில் கசிந்துள்ளது.

''நிதியத்தின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வரி ஒரு சதவீதத்திலிருந்து 3 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

மேலதிக வருவாய்களை அதிகரிக்கும் பொருட்டே அரசு இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது'' என்றும் பஸில் குறிப்பிட்டார் என்று இந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி அமெரிக்கத் தூதரக விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஜேம்ஸ் ஆர். மூருக்கும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நிகழ்ந்தது.

இதில் வெளியான தகவல்கள் இந்தக் கேபிள் செய் தியில் அடங்கியுள்ளன.

இந்தச்சந்திப்பில் இரு தரப்புகளும் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக பூர்வாங்க கலந்துரையாடலை மேற்கொண்டன.

அச்சமயம், சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை முன் வைக்கும் கோரிக்கையை அமெரிக்கா தடுக்கிறது என்று ராஜபக்ஷ கவலை தெரிவித்தார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் கோரிக்கைக்கு அமெரிக்கா பகிரங்கமாக மிரட்டல் விடுக்கவில்லை. அதேபோல, அதைத் தனிப்பட்ட ரீதியாகத் தடுக்கவுமில்லை என்று இச்சந்திப்பில் விவகாரங்களுக்கும், பொருளாதாரத்துறைக்குமான அதிகாரி விளக்கமளித்தார். இதையே மத்திய வங்கி ஆளுநர் நிவாட் கப்ராலிடம் தூதுவர் பிளேக் ஊர்ஜிதப் படுத்தியுள்ளார் என்றும் கேபிள் அஞ்சலில் விவரிக்கப்பட்டுள்ளது.

(ச-சி)

# பரந்தன் சந்தியில் வர்த்தகர் ஒருவரின் கடையை மூடியதில் பிரதேச சபை தவறு செய்யவில்லை என்கிறார் செயலாளர்

பரந்தன், ஒக்.19

பரந்தன் சந்தியில் இயங்கி வந்த வர்த்தகர் ஒருவரது அழகு சாதனக் கடையை மூடிய கரைச்சிப் பிரதேச சபை அவர் அந்தக் கடையைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு இன்னமும் அனுமதி வழங்கவில்லையென மேற்படி வர்த்தகரால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இதுபற்றித் தெரிய வருவதாவது:

கடந்த ஆண்டு பரந்தன் சந்தியில் உள்ள கடை ஒன்றை 2லட்சம் ரூபா முற்பணம் செலுத்தியும் 4 ஆயிரம் ரூபா மாத வாடகை அடிப்படையிலும் கடைச் சொந்தக்காரர் என்று கூறிய நபர் ஒருவரிடமிருந்து பெற்ற மேற்படி வர்த்தகர் அழகு சாதனப் பொருள்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்துவந்துள்ளார்.

ஆனால், அந்தக் கடை கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமானது எனச் செயலாளரால் கூறிக் கடையை விடுமாறு அறிவிக்கப்பட்டது. வர்த்தகர் நடந்தவற்றைக் கூற அந்தக் கடைக்குப் பதிலாக வேறு ஒரு கடை அந்தப் பகுதியில் கரைச்சிப் பிரதேச சபையால் வழங்கப்பட்டது. மேற்படி வர்த்தகர் அந்தக் கடையைத் தனது பணத்தைச் செலவு செய்து திருத்தி நடத்தி வந்துள்ளார்.

இந்தவேளையில் கடந்த ஜூலை மாதம் கடையை மூடுமாறு கரைச்சிப் பிரதேச சபையால் அறிவிக்கப்பட்டது. அதற்கமைய கடை மூடப்பட்டுள்ளது. இது தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர், செயலாளர் ஆகியோரிடம் பல முறை எடுத்துக் கூறப்பட்ட போதும் இதற்கான ஒரு முடிவு இன்றுவரை தரப்படவில்லை எனக் கூறும் கடைக்காரர் நான்கு மாதங்களாக மூடப் பட்டுள்ள தனது கடைக்குள் 6 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இருப்பதாகவும் அப்பொருள்களைத் தான் வங்கியில் கடன் எடுத்தே வாங்கியதாகவும் கூறினார். மேலும் கடையின் திருத்த வேலைக்குத் தான் ஒரு லட்சத்துக்கும் மேல் செலவு செய்ததாகவும் இதுவும் கடனடிப்படையில் பெறப்பட்ட பணம் எனவும் தான் கடையில் உள்ள பொருள்களை விற்பனை செய்தால் தான் கடன் பணத்தை மாதாந்தம் கட்ட முடியும் எனவும் கூறிக் கவலை தெரிவிக்கின்றார்.

இது தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் கு.தவசோதியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

மேற்படி கடை அமைந்துள்ள இடம் கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமானது. இந்த நிலம் நாளாந்த நிலவாடகை அடிப்படையில் கடை நடத்துபவர்களுக்கு வழங்கப்பட்டது. கடையை அவர்களே அமைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் இதனை வேறொருவருக்குக் கைமாற்றம் செய்ய முடியாது. இந்த விதிமுறைகளை மீறியே இந்த நபருக்கு முன்பு கடை நடத்தியவர் கடையை வழங்கியுள்ளார். இதனால் பிரதேச சபை அந்தக் கடையைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

மேலும் தற்போதைய கடையும் தற்காலிக ஒப்பந்தமொன்றின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. கடைகளைப் பெறுவதற்குப் பலர் விண்ணப்பித்துமுள்ளனர். அத்துடன் கடை அமைந்திருக்கும் நிலம் தொடர்பான பிரச்சினையொன்றும் உள்ளது.

ஆகவேதான் தற்காலிகமாக இந்தக் கடை மூடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்தப் பகுதியில் கடைகளை வழங்கும் போது இவரது நிலை தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்படும் என்றார். (க-426)

# பூநகரியில் ரூ.60 லட்சம் செலவில் மீனவர் ஓய்வு மண்டபங்கள் அமைப்பு

சண்டிலிப்பாய், ஒக்.19

பூநகரி கடல்தொழிலாளர்களின் நலன்கருதி பள்ளிக்குடா, கிராஞ்சி, நல்லூர் ஆகிய கடற் கரைகளில் 60 லட்சம் ரூபா செல வில் மூன்று ஓய்வு மண்டபங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

இதற்கான நிதியை கடல் தொழில் நீரியல் துறை அமைச்சு வழங்கியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மீளக் குடியேறிய மீனவர், தொழிலுக்குச் செல்லும்போதும், தொழிலால் வந்த பின்பும் இளைப்பாறுவதற்கு மண்டபம் இல்லாமல் தரையிலிருந்து சிரமப்பட்டு வந்தார்கள்.

மீனவர்களின் நிலை குறித்தும் இளைப்பாறும் மண்டபத்தின் தேவை குறித்தும் பூநகரி கடல்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் கடற்றொழில் அமைச்சுக்கு எடுத்து விளக்கியதைத் தொடர்ந்து இளைப்பாறும் மண்டபம் அமைப்பதற்காக 60 லட்சம் ரூபா வழங்கப் பட்டுள்ளது. பள்ளிக்குடா, கிராஞ்சி, நல்லூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வரும் இந்த மண்டபங்கள் அடுத்த மாதம் மீனவர்களின் பாவனைக்கென கையளிக்கப்படவுள்ளன. (க-115)

# தான்தோன்றி ஈசுவரன் ஆலயத் திருப்பணி

*முல்லை மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரன் ஆலயத்துக்கான தீர்த்தக் கேணித் திருப்பணியும் ஆலய புனருத்தாபனத் திருப்பணியும் ஆரம்பமாகியுள்ளது. யுத்தத்தால் அழிவடைந்த முல்லை மாவட்டத்தில் சிவ வழிபாட்டை மீளவும் புதுப்பொலிவு பெற வைக்க அந்த ஆலயத் திருப் பணிக்கு யாழ்ப்பாணச் சைவ சமயிகள் தாராளமாக உதவ வேண்டும் என்று ஊர்ப் பிரமுகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*

*கனகராயன்குளம், மாங்குளம் உட்பட முல்லைத்தீவின் பல பகுதிகளில் வானுயர பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ள போது, சைவ சமயத்தவர்கள் தொன்மை மிக்க தான்தோன்றீஸ்வர ஆலயத்துக்குச் சிறந்த ஆகம விதிப்படி வானுயர்ந்த கோபுரம் இதுவரை இல்லை.*

*இதற்காக அகில இலங்கை இந்துமாமன்றம் செயற்படல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ ஆலயங்கள் தமது திருப்பணியில் சிறுதொகையை முல்லையில் சிவனுக்குச் சிறந்த சிவாலயம் அமைய உதவின் அது இந்த நூற்றாண்டின் சிறந்த கைங்கரியமாக அமையும். இவற்றை நாம் செய்யத்தவறின் எமது வரலாற்று எல்லை குறுகிவிடும் என்பதில் ஐயமில்லை என்று டாக்டர் யமுனானந்தா தெரிவித்தார்.*

*''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''*

*என சைவ அறநெறி தழைக்க குறிப்பாக யுத்த அழிவுக்குப் பின்பான சூழலில் நாம் பாடுபடல் வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.*

## இசை பெருகட்டும்...



ஆசிரியர்க்கொரு கீதம்: கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வுகளின்போது ஆசிரியர்கள் ஆசிரியர் கீதம் இசைக்கின்றனர்.

# பாடசாலை பேருந்துசேவை

முல்லைத்தீவு, ஒக்.19

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பாடசாலைச் சேவைக்கென பேருந்துகள் இயங்காததால் மாணவர்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாக கெருடமடு, வசந்தபுரம், பேராறு, மன்னாகண்டல் 3 ஆம் கண்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இவர்கள் காலை, மாலை வேளைகளில் ஆறு கிலோ மீற்றர் தூரத்துக்கு மேல் நடந்து செல்கின்றனர். வழமையாகச் செல்லும் பேருந்துகள் இவர்களை ஏற்றாமல் செல்வதே இதற்குக் காரணமாகும். (க-500)

# விஷமிகளால் குடிசை தீக்கிரை

மீள் குடியமர்வுக்கெனத் தற்காலிமாக அமைக்கப்பட்ட வீடொன்றை இனந்தெரியாத விஷமிகள் தீவைத்து அழித்துள்ள சம்பவம் அண்மையில் விசுவமடுப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

விசுவமடு மேற்கு தொட்டியடிப்பகுதியில் செல்லையா நடராசா என்பவர் தனது சொந்தக்காணியில் சுற்றிவரத் தகரங்களால் மறைத்து தென்னோலையைக் கூரையாகக்கொண்ட வீடு ஒன்றை மீள் குடியமர்வு கருதி அமைத்துக்கொண்டார்.

தற்காலிக வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து விசமிகள் தீயிட்டதனால் இந்த வீடு எரிந்து நாசமாகியது. இந்தச்சம்பவம் குறித்து புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்கும், பிரதேச செயலருக்கும், இந்தப் பகுதி கிராம சேவையாளரிடமும் முறையிடப்பட்டுள்ளது.(க-236)

# எரியாத வீதி விளக்குகளால் இருளில் மூழ்கிய வீதிகள்

வவுனியா, ஒக்.19

வவுனியாக் கிராம வீதிகள் பலவற்றில் வீதி விளக்குகள் பொருத்தப்படாததால் வீதியால் பயணம் செய்யும் மக்கள் இரவு வேளைகளில் பெரும் அவலங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக வவுனியா கோவில்குளம் ஊடாக சிதம்பரபுரத்துக்குச் செல்லும் வீதியில் வீதி விளக்குகள் பொருத்தப்படாததை அவதானிக்க முடிகின்றது.

மேலும் கோவில்குளம் இந்துக் கல்லூரியைத் தாண்டிச் செல்லும்போது அந்த இடம் ஒரே இருள் மயமாகக் காட்சியளிக்கின்றது. இதனால் இரவு வேளையில் இந்தப் பகுதியில் செல்வது அச்சத்துக்குரியதாக மாறியுள்ளது.

தினமும் இரவுவேளைகளில் வவுனியா நகரப் பகுதியிலுள்ள கடைகள், தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் தமது கடமை முடிந்து இந்த வீதியூடாகச் செல்லும்போது சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

உரிய அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தித் தெருவிளக்குகளை எரியச் செய்து தமது சிரமங்களைப் போக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-421)

# மாணவனின் அவசர மருத்துவச் செலவுக்கு கற்சிலைமடு பாடசாலை சமூகம் உதவி

முல்லைத்தீவு, ஒக்.19

முல்லைத்தீவு மாவட்டம் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன், முள்ளந்தண்டு விலகல் நோயால் அவதிப்பட்டு வருகிறார். அவரது மருத்துவச் செலவுக்குப் பாடசாலைச் சமூகம் 60 ஆயிரம் ரூபாவை வழங்கி உதவி உள்ளது.

கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் ஜி.சீ.ஈ. சாதாரணதர தரத்தில் கல்வி கற்கும் பேராறு கிராமத்தில் வசிக்கும் சோனமுத்து மோகனரூபன் என்ற 16 வயது நிரம்பிய மாணவனே இவ்வாறு முள்ளந்தண்டு விலகல் நோயால் அவதியுற்று வருகின்றார்.

இவருக்குக் கொழும்பு சென்று முள்ளந்தண்டுச் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தேவைப்படுகின்றது. ஆனால், இவரது குடும்பத்தினர் மிகவும் வறிய நிலையில் உள்ளார்கள். இவர்களால் இந்தப் பெருந்தொகைப் பணத்தை நினைத்துக் கூடப்பார்க்க முடியாது.



இந்த நிலையில் இவர் கற்கும் பாடசாலையின் காருண்யம் மிக்க ஆசிரியர்கள், பணியாளர்கள், ஆசிரியர் நலன்புரிக் கழகத்தினூடாக 60 ஆயிரம் ரூபாவைச் சேகரித்து முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையின் 72349038 ஆம் இலக்கச் சேமிப்புக்கணக்கில் வரவு வைத்து உதவுதொகை நிதியமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இந்த மாணவனின் மருத்துவச் செலவுக்கு உதவ விரும்புவோர் இந்த நிதியத்துக்குத் தமது உதவிகளை அனுப்பி வைக்குமாறும் வேண்டுகோளும் விடுத்துள்ளனர். (க-500)

# மன்னாரில் தலைதூக்கும் கலாசாரச் சீரழிவுகள் தடுத்து நிறுத்துமாறு ஆர்வலர்கள் கோரிக்கை

மன்னார் கீரி-தாழ்வுபாட்டுக் கடற்கரை ஓரங்களில் கலாசார சீர்கேடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் கடந்த காலங்களில் பொழுதைக் கழிப்பதற்காக எந்த விதமான இடங்களும் காணப்படவில்லை.

இதனால் மக்கள் மாலை நேரங்களில் வீடுகளிலேயே முடங்கிக் கிடந்தனர். தற்போது யுத்தம் முடிவடைந்த நிலையில் மன்னார் மாவட்ட மக்கள் பல்வேறு விடயங்களிலும் சுதந்திரமாகச் செயற்படுகின்றனர்.

இந்த நிலையில் இவர்கள் பொழுதைக் கழிப்பதற்காக மன்னார் பிரதான பாலத்தடி மற்றும் மன்னார் கீரி-தாழ்வுபாடு கடற்கரைப் பகுதி ஆகியவற்றுக்குச் சென்று வருகின்றனர்.

இவர்கள் குடும்பம் குடும்பமாக அங்கு சென்று பொழுதைக் கழித்துவிட்டு வருகின்றனர். ஆனால் இளைஞர், யுவதிகள் பலர் இவ்விடங்களுக்கு வந்து நடந்து கொள்ளும் விதமோ வித்தியாசமானது.

அண்மைக்காலமாக மன்னார் பாலத்தடிப் பகுதியில் குறிப்பிட்ட சில இளைஞர், யுவதிகள் அவ்விடத்தில் வித்தியசமான முறையில் நடந்து கொள்கின்றனர்.

இவர்களின் நடவடிக்கைகள் நாகரிகமற்ற முறையில் காணப்படுகின்றன. குடும்பத்துடன் வருபவர்களையும், பார்ப்பவர்களையும் முகம் சுழிக்கச் செய்யும் விதத்தில் சில இளைஞர், யுவதிகள் நடந்து கொள்கின்றனர்.

முன்னர் ஊடகங்கள் மூலம் இந்தப் பிரச்சினை வெளிக் கொண்டுவரப்பட்ட பின் பாதுகாப்புப்பிரிவினர் செயற்பட்டு குறித்த பிரச்சினையைக் கட்டுப்படுத்தினர். குறித்த பிரச்சினைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே அதிகரித்து காணப்பட்டது. ஆனால் தற்போது குறித்த கலாசாரச் சீரழிவுகள் மன்னார் கீரி- தாழ்வுபாடு கடற்கரையோரங்களில் அதிகரித்து காணப்படுவதாக கிராம மக்களும் சமூக ஆர்வலர்களும் விசனம் தெரிவிக்கின்றனர். மன்னார் நகருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள இந்தக் கடற்கரைப் பகுதிகளுக்கு அதிகமான இளைஞர், யுவதிகள் தனித்துச் செல்கின்றனர்.

இவர்களில் சிலர் பொழுது போக்கில் ஈடுபடுகின்ற போதும் பலர் கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்தும் முகமாக கடற்கரை ஓரங்களிலும், அப்பகுதியில் உள்ள பற்றைக்காடுகளிலும் நடந்து கொள்கின்றனர். மன்னாரில் உள்ள அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு தடுத்து நிறுத்த முற்படுகின்றபோது இச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றோர் நாளுக்கு நாள் இடத்தை மாற்றி வருகின்றனர். ஒரு சிலர் கீரி-தாழ்வுபாட்டு கடற்கரைக்கு ஞாயிற்றுக்கிழமை மதியம் வந்துவிட்டு இருட்டாகியவுடன் இப் பகுதியில் உள்ள காடுகளுக்குள் சென்றுவிட்டு மறுநாள் வீடு செல்வதாகவும் தெரிய வருகின்றது. தற்போது மீள் குடியமர்ந்த கிராமங்களில் இருந்தே இவர்கள் வருவதாகவும் இப்படி நடந்து கொள்பவர்களில் சிலரைப் பொலிஸார் பிடித்து விசாரணைகளை மேற் கொண்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

எனவே மன்னார் மாவட்டத்தில் மீண்டும் தலை தூக்கியுள்ள கலாசாரச் சீரழிவுகளுக்கு அதிகாரிகளின் அதிரடி நடவடிக்கைகள் மூலமாகவே தீர்வுகாண முடியுமென சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (க-601)

# நீண்ட காலமாகக் கவனிக்கப்படாத முத்து ஐயன்கட்டுக்குளம் புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசனக் குளமாக விளங்கும் முத்து ஐயன் கட்டுக்குளத்தின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குளம் 22 அடி நீர்க் கொள்ளளவைக் கொண்டது. ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன விரிவினர் இதனை நிர்வகித்து வருகின்றனர். இக்குளத்தில் நீண்ட காலமாகவே புனரமைப்பு வேலைகள் எவையும் இடம்பெறவில்லை. இதனால் குளமும், வாய்க்கால்களும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன.

தற்போது இதன் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். மேலும் குளத்தின் வாய்க்கால்களையும் புனரமைப்புச் செய்வதன் மூலமே நீரை இலகுவாகப் பாய்ச்சமுடியு மென அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் இதன் மூலம் நீர் விரயத்தையும் தடுக்க முடியும். மேலும் குளத்திலிருந்து ஒழுங்கான முறையில் நீர் பாய்ச்சப்படுமேயானால் மக்களால் கைவிடப்பட்ட காணிகளிலும் பயிர் செய்கைகளை ஆரம்பிக்க முடியு மெனவும் தெரிவிக்கப்படுகின்றது. முத்து ஐயன்கட்டுக் குளத்தின் கீழ் உப உணவுப் பயிர்ச் செய்கையே ஆரம்பத்தில் இடம்பெற்றது. ஆனால் தற்போது அதிகளவில் நெல் விவசாயம் நடைபெறுகின்றது. எதிர்காலத்தில் இந்தப் பிரதேசத்தில் நெல் விவசாயம் படிப்படியாகக் கைவிடப்பட்டு உப உணவுப்பயிர் களே பயிரிடப்பட வேண்டு மென முல்லைத்தீவு அரச அதிபர் அறிவுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (க-500)

# மாணவர்களுக்குக் கௌரவிப்பு

மருதங்கேணி, ஒக்.19

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அதிபர் செ.ஸ்ரீராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஈ.உதயகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக வத்திராயன் இராணுவப் பொறுப்பதிகாரி 2 ஆம் லெப்ரினன்ட் லயனல் பண்டாவும், வடமராட்சி ஈ.பி.டி.பி அமைப்பாளர் ஐ.ஸ்ரீ.ரங்கேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள். (236)

# மணி விழா நிகழ்வு

மல்லாவி, ஒக்.19

துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றுள்ள சின்னத்தம்பி இராஜேஸ்வரனின் மணிவிழா கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் மாங்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

துணுக்காய் கல்வி வலயத்தின் அதிபர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பெற்றோர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-425)

## எம்மதமும் சம்மதம்...



காலத்தில் செய்யும் உதவி- மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இந்து ஆலயம் ஒன்றுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஒரு தொகுதிப் பொருள்களைக் கையளிக்கின்றார். (601)

# விதை நெல் கிடைக்காமையால் காலபோக நெற்செய்கை தாமதம்

அக்கராயன், ஒக்.19

காலபோக நெற்செய்கைக்கு விதை நெல் பெற்றுத் தருமாறு கிளிநொச்சி அரச அதிபர், மேலதிக அரச அதிபர் ஆகியோரிடம் அக்கராயன் ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், கோணாவில் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அக்கராயனில் நடைபெற்ற காலபோக நெற் செய்கைக்கான கூட்டத்தில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அரச செயலகத்தில் நடைபெற்ற விவசாய குழுக் கூட்டத்திலும் விதை நெல் பிரச்சினை தொடர்பாக விவசாயிகளினால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சிறு போகத்தின் போது குளப் புனரமைப்புக் காரணமாக நெல் விதைப்பு இடம்பெறவில்லை. இதன் காரணமாகவே விதை நெல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அக்கராயன் குளத்தின் கீழான காலபோக நெற்செய்கை தாமதமடைவதற்கு விதை நெல் இல்லாமையும் முக்கிய காரணமாகும். (க-410)

# நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்; ஆனந்தசங்கரி உருக்கமான வேண்டுகோள்

நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.- இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

காணி அபகரிப்பு மற்றும் சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் நடத்திய உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு முதல் நந்திக்கடல்வரை சுமார் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 'இந்த இடம் விமானப் படைக்குரியது' என்று பலகை வைத்துள்ளார்கள். அதைப்பார்த்ததும் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அதனைவிடவும் சிவசக்தி ஆனந்தன் சொன்ன விடயம் இன்னமும் எனது மன வேதனையை அதிகரித்து விட்டது. இத்தகைய அடாவடித்தனங்களைக் கண்டபிறகும் எனது உயிர் பிரிய மாட்டேன் என்கிறதே என்று எனக்குக் கவலையாக உள்ளது. இன்னும் நான் ஏன் வாழ வேண்டும் என்று கேட்கத் தோன்றுகிறது.

இன்றைய உண்ணாவிரதம் என்னை 30வருடங்கள் பின்னோக்கிப் பார்க்க வைக்கின்றது. அன்றைய பிரதமர் சிறிமாவோ அம்மையார் தனிச்சிங்களச் சட்டத்தை அமுல்படுத்திய போது இதே வவுனியா நகர சபை மைதானத்திலே நாங்கள் உண்ணாவிரதம் இருந்தது எனது நினைவுகளுக்கு வருகின்றது.

அன்றும் அரசுக்கு ஆதரவானவர்கள் எமது உண்ணாவிரதத்தைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். எம் மினத்துக்கு அரசாங்கத்துடன் சேர்ந்து எம்மினத்தவர்களே துரோகம் இழைத்த வரலாறுகள் எம்மிடம் நிறையவே உள்ளன. இன்றும்கூட இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொள்ள வந்த ஏராளமான மக்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். ஓய்வு பெற்ற காணி உத்தியோகத்தர் ஒருவர் தற்போதைய காணிப் பதிவு முறைமை சிறந்தென்று ஊடகங்களின் மூலம் தெரிவித்துள்ளார்.

அவருக்குநான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் ஓய்வு பெற்றுவிட்டீர்கள். நீங்கள் தாராளமாக உங்கள் குடும்பத்தினருடன் உங்களது எஞ்சிய வாழ்க்கையை அனுபவியுங்கள். எமது மக்களுக்கு ஏதாவது செய்வதாக இருந்தால் உருப்படியான யோசனை களைச் சொல்லுங்கள் அல்லது மௌனமாக இருங்கள்.


கடந்த 30ஆண்டுகால வாழ்க்கையில் எமது மக்கள் இலட்சக்கணக்கில் மடிந்துள்ளனர். இறந்தவர்கள் ஒன்றும் பிச்சைக்காரர்கள் அல்ல. காணிபூமியுடன் வளமாக வாழ்ந்தவர்கள். அவர்களின் வாரிசுகளுக்கு தங்கள் காணி எங்கிருக்கின்றது என்பதே தெரியாது. அத்துடன் யுத்தத்தில் உயிரைக் கையில் பிடித்து ஓடியவர்கள் தங்களது காணி உறுதிகளைத் தொலைத்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து ஒரு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் வரவிருக்கின்றனர். அவர்களது காணிகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறது இந்த அரசு? இந்த நேரத்தில் இத்தகைய பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

அரசு துரிதகதியில் மேற்கொள்ளும் இத்தகைய செயல் தொடருமானால் எமது இனம் இல்லாமலேயே போய்விடும். இவைகளை எல்லாம் சிந்தித்துத்தான் நாங்கள் அனைவரும் எம்மிடமுள்ள சிறுசிறு வேற்றுமைகளை மறந்து ஓரணியாக அணி திரண்டு எமது மக்களின் எதிர்ப்பை இன்று அரசுக்குக் காண்பித்திருக்கிறோம்.


இன்று எத்தகைய உயர் பீடத்திலும் தமிழர்கள் இல்லை. முன்பு ஓரளவுக்கு உயர் பதவிகளில் தமிழர்கள் இருந்தார்கள். இன்று இலங்கைப் பொதுநிர்வாகத்திற்கான சோதனையில் ஒரு தமிழரும் சித்தியடையாத நிலை தோன்றியுள்ளது. இந்த நாட்டில் நாம் மனிதர்களாக வாழ்வோமா என்ற சந்தேகம் எனக்குத் தோன்றியுள்ளது. நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்றுதான் இத்தகைய செயலைத் தடுத்து நிறுத்த வேண்டும். எனவே இப்பொழுது நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் நிர்ப்பந்தம். அதனை நாம் திடசங்கற்பமாக ஏற்போம் என்று மேலும் அவர் கூறினார். (க-601)

# சத்தங்களை எழுப்பி தகவல்களைப் பரிமாறும் மீன்கள்



பிரன்ஹாஸ் மீன்கள் 3 சத்தங்களை எழுப்பி தகவல் தெரிவிப்பதாக பெல்ஜியம் ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது என்று பெல்ஜியம் நாட்டின் லீஜ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த உயிரின ஆராய்ச்சியாளர் எரிக் பார்மென்டீர் தெரிவித்துள்ளார்.
இவர் தனது ஆய்வகத்தில் பல வகை மீன்களைத் தொட்டியில் வளர்த்து அவற்றின் தகவல் பரிமாற்றம் பற்றி ஆராய்ந்தார். அவற்றில் பிரன்ஹாஸ் மீன்கள் தகவல் தொடர்புக்கு 3 விதமான சத்தங்களைப் பயன்படுத்துவதாகக் கண்டுபிடித்தார்.
இதுபற்றி எரிக் கூறியதாவது:
மற்றவர்கள் கவனத்தைக் கவர சண்டையிடுவதைவிட சத்தம் எழுப்புவது குறைவான சக்தியை வெளியிடும் என்பதை விலங்குகள் அறிந்துள்ளன.
மீன்கள் எழுப்பும் சத்தத்தைப் புரிந்து கொள்வதன் மூலம் அவற்றின் நடவடிக்கைகளை அறிய முடிந்தால் கடலில் மீன்களை நம்பியுள்ள மீனவர்களுக்கு அதுபற்றி நாம் தெரிவிக்க முடியும்.
அதற்கான சரியான நேரம் இன்னும் வரவில்லை. எனினும் ஆய்வகத்தில் பிரன்ஹாஸ் மீன்களின் தகவல் பரிமாற்றத்தை நீருக்கடியில் மைக்ரோபோன் பொருத்தி பொறுமையாக காத்திருந்து பதிவு செய்தனர்.
அதில் முதல் சத்தம் குரைப்பது போல் இருக்கிறது. அது தனது வருகையை மற்ற மீன்களுக்கு உணர்த்துவதாக இருக்கிறது. சண்டையிடுவதற்குப் பதிலாக சத்தம் மூலம் மிரட்டுவதாக உள்ளது.
டிரம்ஸ் எழுப்பும் சத்தம் போல் உள்ள அடுத்த 2 ஒலிகளை மீன்கள் ஒன்றையொன்று துரத்தும் போதும், கடிக்கும் போதும் எழுப்புகின்றன. பொதுவாக உணவுக்காகச் சண்டை நடக்கும்போது இதுபோன்ற சத்தங்களை எழுப்புகின்றன.

# துணி துவைக்கும் மனிதக் குரங்கு



குரங்கிற்கும் மனிதனுக்கும் ஒரே மூதாதையர் என்று சில விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இவர்களின் கூற்றுக்கு வலுச்சேர்க்கக்கூடிய ஆதாரம் ஒன்று கிடைத்து உள்ளது. மனிதக் குரங்கு ஒன்று துணியை நீருக்குள் அமிழ்த்துகின்றது. அந்த துணியால் தம்முடைய முகத்தைத் துடைக்கின்றது. பின் அத்துணியை நீருக்குள் மீண்டும் அமிழ்த்தி எடுக்கின்றது, பிழிகின்றது. ஆம் மனிதர்களைப் போலத் துணியைத் துவைக்கின்றது.


# சிந்திக்கச் சில...



வாழ்க்கை என்பது ஒரு பாடப் புத்தகம்
அதனைப் படித்து முடி
வாழ்க்கை என்பது ஒரு தொடர் நாடகம்
அதனை நடித்து முடி
வாழ்க்கை என்பது ஒரு நீண்ட பயணம்
அதனை நடந்து முடி
வாழ்க்கை என்பது ஒரு பெருங்கடல்
அதனைக் கடந்து முடி
வாழ்க்கை என்பது ஒரு சொர்க்கம்
அதனை ருசித்து முடி
வாழ்க்கை என்பது ஒரு பூந்தோட்டம்
அதனை இரசித்து முடி
வாழ்க்கை என்பது ஒரு போராட்டம்
அதனைப் போராடி முடி

ஆ. வந்தனா
கரவெட்டி.

# பீரங்கி மரம்



பீரங்கி என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அது என்ன பிரங்கி மரம்? தென் அமெரிக்கா, அமேசன் வெப்ப மண்டலக் காடுகளிலும், இந்தியாவின் சில பகுதிகளிலும் வளரக்கூடிய ஒருவகை மரம் தான் இது. 1755 ஆம் ஆண்டில் பிரான்ஸ் தாவரவியலாளரான ஜே. எஃப். ஆப்லட் என்பவர் இந்த மரத்தைக் கண்டறிந்துள்ளார்.

இந்த மரத்தின் பழங்கள் பழுப்பு நிறத்தில் பிரங்கிக் குண்டுகள்போல இருந்ததால் பிரங்கி மரம் என்று பெயர் சூட்டப்பட்டது. 82 அடி வரை உயரமாக வளரும் இந்த மரத்தின் பூக்கள் செம்மஞ்சள் மற்றும் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

பழங்கள் 24 சென்றி மீற்றர் அளவு விட்டமுள்ளதாகவும் மிகவும் கடினமானதாகவும் இருக்கும். ஒவ்வொரு பழத்திலும் 200 முதல் 300 விதைகள் உள்ளன. ஒரு பழத்தின் எடை 5 கிலோவுக்குக் குறையாமல் இருக்கும்.

இந்த மரத்தின் கீழே நிற்கக்கூடாது. ஏனென்றால், இந்தப் பழம் மனிதனின் தலையில் விழுந்துவிட்டால் ஆளையே கொன்று விடுமாம்.

எனவே, இந்தப் பழத்தை ஆட்கொல்லிப் பழம் என்றும் கூறுகிறார்கள்.

இந்த மரத்தின் இலைகள் மற்றும் பூக்களில் இருந்து மருந்து தயாரித்து புண்களில் தடவினால் புண்கள் மாறிவிடும். இவற்றைத் தமிழ்நாட்டில் சில இடங்களில் காண லாம். இதனை நாகலிங்க மரம் என்றும் கூறுவார்கள்.

# இந்தியாவில் உயிருள்ள பாலம்



இந்தியாவின் மேகாலயா மாநிலத்தில் உள்ள சோரா என்கிற ஊரில் ஒரு வகை மரங்களின் உயிருள்ள வேர்களில் பாலங்கள் அமைக்கப்படுகின்றன. இங்கு பழங்குடி மக்கள் இந்த வித்தையை நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர். இந்த மரவேர் பாலங்கள் மிகவும் பலமானவை. ஆனால் பாலங்கள் முழுமை பெறுகின்றமைக்கு 10 முதல் 15 வருடங்கள் வரை பொதுவாக எடுக்கின்றது. பல நூற்றாண்டு காலத்துக்கும் நீடிக்கக் கூடியவை இந்தப் பாலங்கள்.

# உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும்

## காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கூறுகிறார்

அம்பாறை, ஒக்.19

கல்முனை மாநகர சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ள நான்கு உறுப்பினர்களும் பொறுப்புணர்ந்து, கட்சிப்பற்றுடன் செயற்படவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும், காரைதீவுப் பிரதேசசபைத் தவிசாளருமான செல்லையா இராசையா தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகரசபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பதவியேற்பு நிகழ்வுக்கு வாழ்த்துத் தெரிவித்து அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இம்முறை பெரும் எதிர்பார்ப்புடன் இடம்பெற்ற கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நான்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்தமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் ஆறு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு மக்கள் சேவையை முன்னெடுத்து வந்தனர்.

இம்முறை கூட்டமைப்பு சார்பிலான உறுப்பினர் தொகை கடந்த முறையை விடவும் அதிகரிக்குமென்ற எதிர் பார்ப்பே எல்லோரிடமும் இருந்தது.

எனினும் எமது மக்கள் தமது வாக்குரிமையின் முக்கியத்துவம் உணராது, வாக்களிப்பில் அசமந்தமாக இருந்தமை காரணமாக எதிர்பார்ப்பு நிறைவேறாது, இரு பிரதிநிதித்துவமும் குறைந்துள்ளமை கவலை தரும் விடயமாகும்.

இருப்பினும் மாநகர சபையில் அங்கம் வகித்துக் கடந்த ஐந்த வருடகால அனுபவம் பெற்ற, நெழிவு சுழிவுகள் தெரிந்த முன்னாள் உறுப்பினர்கள் இருவருடன் மேலும் ஆற்றல் மிக்க இரு இளைஞர்களுமாக நான்கு பேர் இம்முறை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை நம்பிக்கையூட்டுகின்றது.

கடந்த முறை போன்று இம்முறையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே எதிர்க்கட்சி அந்தஸ்த்துக் கிடைத்துள்ளது.

எனவே எதிர்க்கட்சித் தலைவராக வரும் நமது அனுபவமிக்க உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் சகலரும் கட்டுக் கோப்புடனும் கட்சிப் பற்றுடனும் கல்முனை மாநகரம் வாழ் தமிழ் மக்களுக்கான பணியைத் தொடர இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அதேவேளை இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பொறுப்புக்களும், சேவைக்கான செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன.

மக்களுக்கு நன்மை பயக்கும் அத்தனை நல்ல விடயங்களுக்கும் நாம் ஆதரவாகத் திகழ்வதுடன், எமது தமிழ் மக்களுக்கான உரித்துடைய பங்குகளையும் பெற வேண்டும். அதே வேளை அநீதிகளுக்கு எதிராக சபையில் உரத்துக்குரல் கொடுப்பவர்களாகவும் நமது உறுப்பினர்கள் திகழ வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

## சீனன்குடாவில் குண்டுகள் மீட்பு

சீனன்குடா - கப்பல்துறைப் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் தனது விவசாய நிலத்தில் விவசாயம் செய்வதற்காக நிலத்தை மண்வெட்டியால் வெட்டியபோது அடியிலிருந்து கைக்குண்டுகள் பல வந்துள்ளன. இரண்டு கைக்குண்டுகள் மண்வெட்டியில் அகப்பட்டுள்ளன. ஆனால், மண்வெட்டியால் கைக்குண்டுகள் வெட்டுப்படவில்லை. இதனையடுத்து உடனடியாக சீனன்குடா பொலிஸ் நிலையத்திற்கு விவசாயி தகவல் வழங்கினார். தகவலைக் கேள்வியுற்று அவ்விடத்திற்கு விரைந்து வந்த விசேட அதிரடிப்படையினர் அந்த இடத்தில் மேலும் இரு கைக் குண்டுகளை மீட்டுள்ளனர்.

கைக்குண்டுகளைப் பரிசோதனைக்கு உட்படுத்திப் பார்த்தபோது அவை ஏ-36 ரகத்தைச் சேர்ந்தவைகள் என்று இனங்காணப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மொனராகலையில் கொள்ளைக் கோஷ்டி கைது

தியத்தலாவை, ஒக்.19

மொனராகலை பிரதேசத்தில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய கோஷ்டியை தம்பகலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தம்பகலை, பொல்கல்ல, மெதகம, மடல்கும்புர போன்ற பிரதேசங்களில் கடைகள், வீடுகள் உடைக்கப்பட்டு பொருள்களும், பணமும் கொள்ளையிட்டமை தொடர்பாக தம்பகலை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டையடுத்து, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வேஹித தேசப்பிரிய தலைமையிலான குழுவினர் இந்தப் பிரதேசமெங்கும் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியதில் இந்த மூவர் அடங்கிய கோஷ்டியை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர்.

இவர்களிடமிருந்து 88,000 ரூபா பெறுமதியான நகை மற்றும் 71,000 ரூபா பணம் போன்றவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ச)



கல்முனை நகர, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று லயன்ஸ் கழகங்கள் ஒன்றிணைந்து சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வை கல்முனை கவர்மன் பற்றிமா தேசியப் பாடசாலை கிளணி மண்டபத்தில் நடத் தியது. நிகழ்வின் ஆரம்பத்தில் மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற் றோர் பாடசாலை மாணவர்கள் மற்றும் கழகங்களின் உறுப்பினர் கலந்துகொண்ட விழிப்புணர்வு ஊர்வலம் கல்முனை நகர் ஊடாக இடம்பெறுவதைக் காணலாம். (30)

## சைக்கிள் கொள்ளை; சந்தேகநபர் கைது


மட்டக்களப்பு,ஒக்.19

மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களில் சைக்கிள் கொள்ளையில் ஈடுபட்டு வந்தவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் களு வாஞ்சிக்குடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக் குடி பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரி.எஸ்.எம். தென்னக்கோன் இந் தத் தகவலைத் தெரிவித்தார். கல்முனை, கல்முனைக் குடி, சாய்ந்தமருது, களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங்களிலேயே இவர் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேகநபர் பெரிய கல்லாறு, அருளானந்தர் வீதியைச் சேர்ந்தவர் எனத் தெரிய வருகிறது. இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் சைக்கிள்கள் பல மீட்கப்பட்டுள்ளன. (ச)

## பெற்றோர் ஆர்ப்பாட்டம்



திருகோணமலை, ஒக்.19

திருகோணமலை மட்கோ அல்மின்ஹாஜ் முஸ்லிம் வித்தியாலய அதிபரை இடமாற்றக் கோரி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாடசாலையில் ஆரம்ப காலத்தில் 450 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்றனர். தற்போது 250 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர் எனவும் தெரியவருகிறது.

பாடசாலை அபிவிருத்திப் பணிகளில் அதிபரின் அக்கறையின்மையே இதற்குக் காரணம் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். பாடசாலைச் சொத்துகளை அதிபர் மோசடி செய்கின்றார் எனவும் அந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்போது தெரிவித்தனர்.

16 வருடங்களாக ஒரே பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி சாதனை படைக்காத அதிபர், இந்தப் பாடசாலைக்குத் தேவையில்லையென எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் மட்கோ பள்ளிப் பரிபாலன சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.(ச)

# உணவு நஞ்சான சம்பவத்தில் அதிபர்கள் உட்பட 5பேர் கைது

தலவாக்கலை, ஒக்.19

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட விருந்துபசார நிகழ்வில் பரிமாறப்பட்ட உணவு நஞ்சான சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபர்கள் இருவர் உட்பட ஐந்து பேர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

கிரேட்வெஸ்டன் தமிழ் வித்தியாலய அதிபர், தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலய அதிபர், 'வயில்ட் பன்ட்ஸ்' எனும் நிறுவனத்தின் இரு அதிகாரிகள் மற்றும் உணவு விநியோகத்தர் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை நீதிமன்றில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் நுவரெலியா, லிந்துலை, கொட்டகலை, டிக்கோயா மற்றும் மஸ்கெலியா வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் மயக்கம், வாந்தி போன்றவற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



3 பாடசாலை மாணவர்களை இணைத்து தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட சிறுவர்தின நிகழ்வில் வழங்கப்பட்ட மதிய உணவு ஒவ்வாமையால் வாந்தி, வயிற்றோட்டம், குமட்டல் என்பன ஏற்பட்டு 580 சிறுவர்களும் 12 முதியவர்களும் நோய்வாய்ப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு, சந்தோஷம் அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய பொருள்களை வாங்குவர். குடும்பத்தினர் மீதான பாசம் அதிகரிக்கும். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். மாமன், மைத்துனர்கள் வகையில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். சந்தோஷமான அனுபவங்களைப் பெறுவீர்கள்.

**இடபம்:**
வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். கூட்டுத் தொழில் செய்வோர் அனுசரித்துச் செல்ல வேண்டும். தேக ஆரோக்கியத்தில் சிறு பிரச்சினைகளைச் சந்திக்கலாம். முக்கியமான விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களை பெரிய ஆளாக காட்டிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்:**
வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள். கடனாகக் கொடுத்த பணம் திடீரென திரும்பி வரும். தள்ளி வைக்காமல் எந்த வேலையையும் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். உறவினர்கள் சிலர் உங்கள் மூலம் காரியம் சாதிப்பர். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். கனவுத் தொல்லை உண்டு.

**கடகம்:**
வரவுகள் வரும் முன்னரே செலவுகள் காத்திருக்கும் நாள். சில வேலைகளுக்காக ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றால், நீங்கள் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். மருந்துப் பொருட்கள் வாங்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

**சிங்கம்:**
ஆதாயம் பார்க்காமல் செய்த வேலை ஒன்றில், கணிசமான பலன் கிடைக்கும். உங்களிடம் யோசனை கேட்டு நண்பர் ஒருவர் செயற்படலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். மனக் குறைகள் தீர்ந்து நிம்மதி பெறுவீர்கள். நிலம், பூமி விவகாரங்களில் பொறுமையான அணுகுமுறை அவசியம்.

**கன்னி:**
பல நாள் முயற்சி ஒன்றுக்கு பலன் கிடைக்கும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். நண்பர்களுக்கு தெரிந்த ஒருவர், உங்களுக்கும் அறிமுகமாகலாம். நல்ல நாள்.

**துலாம்:**
இழந்த பொருள் ஒன்றை மீட்பதில் அக்கறை காட்டுவீர்கள். தள்ளி வைத்த பயணம் ஒன்றை இன்று மேற்கொள்ளலாம். பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். உறவினர்கள் உறு துணையாக இருப்பர். குடும்ப உறுப்பினர்கள் இடையே வாக்கு வாதங்கள் ஏற்பட்டு, கோபதாபம் உண்டாகலாம். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் உண்டு.

**விருச்சிகம்:**
கடன் பிரச்சினைகளால் கவலைகள் அதிகரிக்கலாம். புதிய முயற்சிகளைத் தள்ளி வைக்க வேண்டிய நாள். உங்களின் தவறு ஒன்றை மற்றவர்கள் சுட்டிக் காட்டி விமர்சிக்கலாம். நண்பர்களுக்காக உங்களின் சேமிப்புப் பணத்தை செலவு செய்யலாம். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்றில் தடை, தாமதம் ஏற்படலாம்.

**தனுசு:**
உங்கள் திறமையைப் பார்த்து மற்றவர்கள் வியக்கலாம். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தந்தை வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். நண்பர்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் எளிதில் நிறைவேறும். வியாபாரிகளுக்கு கடன் மிகுதி வசூலாகும்.

**மகரம்:**
எடுத்த காரியங்கள் எளிதில் முடிவிற்கு வரலாம். கணவன், மனைவி இடையேயான பாசம், அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி, சந்தோஷம் உண்டு. பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில், நீங்களும் கலந்து கொள்ளலாம். போட்டிகளை வெற்றிகரமாக முறியடிப்பீர்கள்.

**கும்பம்:**
புதிய இடங்கள் சிலவற்றுக்கு செல்ல நேரிடலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். மனதிற்கு பிடித்த வகையில் சில விடயங்கள் நடக்காமல், ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். ஏமாற்றங்களைத் தவிர்க்க எச்சரிக்கை அவசியம். நீங்கள் செல்லும் இடத்தில் உறவினர் அல்லது நண்பர் ஒருவரைப் பார்க்க வாய்ப்பு உண்டு.

**மீனம்:**
தடை, தாமதங்களுக்குப் பின்னர் காரியங்களில் வெற்றி பெறும் நாள். ஒரு பொருளை வாங்க பல இடங்களுக்கு அலைந்து திரியலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை, சிலர் உங்களின் மீது காட்டலாம். தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். உங்களுக்கு வேண்டிய உறவினருக்காக, மற்றவர்களிடம் உதவி கேட்கலாம்.

# ஈழம் சிறையிலி
# வெளியே

**அருட்தந்தை சூ.ம.ஜெயசீலன் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். கடந்த 13.07.2011 தொடக்கம் 15 நாள்கள் ஈழத்தில் தங்கி இருந்தார். அருட்தந்தை அவர்கள் ஏற்கனவே பல்வேறு புத்தகங்களை வெளியிட்டுள்ளார். அத்துடன் தமிழ் நாட்டில் தஞ்சமடைந்துள்ள ஈழத்தமிழ் அகதிகளின் நல்வாழ்வுக்காகப் பல ஆண்டுகள் களப்பணி செய்துள்ளார். அவரது பயண அனுபவத்தை இங்கே பதிவுசெய்கின்றார். குரலடக்கப்பட்டுப்போன தேசத்தின் உணர்வுகளை கொட்டிவிடும் வரிகள் இனி........**

நான் இலங்கைக்குப் போனேன். சுதந்திரம் தேடும் சிறகுகள் அனைத்தும் தீவிரவாதத்தின் கனவுகள் என்று உலகுக்கு அறிவித்து கொண்டிருக்கும் இலங்கை ஜனநாயக சோஸலிச குடியரசு நாட்டுக்குப் போனேன்.

கடற்பரப்புத் தாண்டி நிலப்பரப்புக்குள் விமானம் பறந்து கொண்டிருந்தபோதே எங்கும் சூழ்ந்திருக்கும் பசுமையின் வனப்பு விழிக்குள் விதையானது. வளமையின் தேசத்தில் எம் தமிழினம் அழிக்கப்படுவதை நினைத்து நெஞ்சம் விம்மியது. கட்டுநாயக்க விமான நிலையத்தினுள் விமானம் தரை இறங்கியது முதல் விமான நிலையத்திலிருந்து வெளியேறும்வரை பரந்த நிலப்பரப்பிற்குள் படர்ந்த எம் பார்வையில் எம் வீர மறவர்களின் மறப்போர் ஆச்சரியத்துடனும் ஆனந்தத்துடனும் வியப்புடனும் முட்டி மோதியது. அடிமனதில் ஏக்கம் அலைந்துகொண்டே இருந்தது.

அது உள்ளூராட்சி தேர்தல் காலமாதலால் எம்.ஓ.டி. எனப்படும் அனுமதிக்கடிதம் வழங்கும் முறையை அரசு திரும்ப பெற்றுக்கொள்வதாக அறிவித்திருந்தது. அதனால் சற்று நிம்மதி கிடைத்தது. இந்த அனுமதிக் கடிதம் இல்லாமல் யாரும் தமிழர் பூமிக்கு, யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்க முடியாது. தேர்தல் முடிந்தபிறகும் இந்த விலகல், நடைமுறையில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இது தொடருமா என்ற ஐயப்பாடு அனைத்துத் தமிழர் மனங்களிலும் ஆழ இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

### சுத்தமான கொழும்பு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு இரவு பேருந்தில் முன்பதிவு செய்யப்பட்டிருந்ததால், பகல் பொழுது நண்பர் வீட்டில் கழிந்தது. மாலையில் கொழும்புநகரை சுற்றி வந்தபோது, என் திகைப்பு அதிகரித்தது. சாலையில் சாலையோர கடைகள் இல்லை, பிச்சைக்காரர்கள் தொல்லையில்லை, ஓடிக்கொண்டோ ஓய்ந்து போயோ இருக்கும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் இல்லை. முகம் மலரச்செய்யும் நல் தூய்மை, வாகன ஓட்டிகளின் ஒழுங்கு, பாதசாரிகளின் பக்குவம், அனைத்தும் பிரமிக்க வைத்தன.

சாலையில் வரையப்பட்ட மஞ்சள் கோடுகளை பொதுமக்கள் எந்த நேரத்திலும் கடக்கலாம், எந்த பாதிப்பும் நேராது, வாகன ஓட்டிகள் தங்கள் வாகனத்தின் வேகத்தைக் குறைத்து நின்றுவிடுகின்றார்கள். இரவு வேளைகளில் நமது ஊர் நண்பர்களைப்போல அதிக பட்ச ஒளியை கண்களுக்குள் பாய்ச்சும் அனுமதி அங்கில்லை, அதனால் எரிச்சலும் தடுமாற்றமும் எதிர்வரும் பயணிக்கு இல்லை.

தலைக்கவசம் இல்லாமல் இருசக்கர வாகனம் ஓட்ட முடியாது. பின் அமர்ந்திருப்பவரும் தலைக்கவசம் அணிய வேண்டும். இது அரசின் பரிந்துரை அல்ல. மாறாக சட்டம் இயற்றிக் கடைப்பிடிக்கிறார்கள். முச்சக்கர ஊர்திகளிலும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே நபர்களை ஏற்ற வேண்டும். மீறினால் தண்டனைதான், சட்டங்கள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுவதால் விபத்துப் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன.

### படபடப்பும் பரிதவிப்பும்

இந்த ஒழுங்குகளை உள்வாங்கிய உணர்வுடன் எனது தேசத்திற்குள் செல்வதற்காகப் பேருந்தினுள் அமர்ந்தேன். குளிர்சாதன வசதியுடைய பேருந்து அது. உடல் குளிர ஆரம்பித்தது. ஆனால் மனம் வெப்பமாக இருந்தது. உறக்கம் பிடிக்கவில்லை. கடந்தகால யுத்தம், என் சகோதர சகோதரிகளின் இரத்தம், அழிக்கப்பட்ட சொத்துக்கள், அவமானப்படுத்தப்பட்ட உடல்கள், கற்பழிக்கப்பட்ட கொடூரங்கள், நச்சுக் குண்டுகளில் மூச்சுவிட முடியாது இறந்தவர்கள், கொத்துக் குண்டுகளினால் கொலையுண்டவர்கள், ஓடிக் கொண்டே போன எம் எதிர் காலங்கள், அனைத்தும் எனது மனதுக்குள் புகுந்து ஏதேதோ செய்தது.

''இதுவரை காலமும் எங்களுடைய இனத்தின் வீரர்கள் என்றால் யார்? என்று கேட்கும் நிலை இருந்தது. ஆனால் இன்று நாம் எமது இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயம் அழியாது'' என்று முதல் மாவீரர் தின உரையில் தமிழினத் தலைவர் பிரபாகரன் பேசியதை மீண்டும் ஒருமுறை அசைபோட்டபடி எம் வீரர்கள் களமாடிய, போர் மற்றும் அரசியல் பக்கங்களுடன் நின்றுவிடாமல், சமூகம், பொருளாதாரம் நிர்வாகக் கட்டமைப்புகள், மனிதாபிமானப் பணிகள் என்று பல்துறை சார்ந்து வியாபித்து நின்ற தமிழ் மண்ணின் வாசம் என் சுவாசத்திற்குள் சங்கமிக்கப் போகின்றது என்ற படபடப்பும் பரிதவிப்பும் என்னை சூழ்ந்து கொண்டது.



மண்மேடு அல்ல! முழங்காலில் மாவீர

### திகில் ஆரம்பம்


நள்ளிரவு எல்லோரும் அசந்து தூங்கி கொண்டிருந்தார்கள். எனது வலது பக்க இருக்கையில் அமர்ந்திருந்தவர் மூச்சுப்பிரச்சனை உள்ளவர்போல, தொடர்ந்தும் இருமிக்கொண்டும் கையோடு கொண்டுவந்திருந்த பிளாஸ்ரிக் பையில் வாந்தி எடுத்துகொண்டும் அவதியோடு தன்னால் இயன்றளவு கிருமிகளைப் பரப்பிக் கொண்டு வந்தார்.

திடீரென பேருந்து நின்றது. இல்லை, இல்லை நிறுத்தப்பட்டது. இருபது வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் இலங்கை இராணுவ உடையுடன் பேரூந்தில் ஏறினான். கையில் சிறிய டார்ச் இருந்தது. ஒவ்வொருவர் முகத்திலும் ஒளிபாய்ச்சிக் கொண்டே வந்த அவன் எல்லோரின் அடையாள அட்டைகளையும் எடுக்கச் சொன்னான். அர்த்த ராத்திரியில் தட்டு தடுமாறி தங்கள் அடையாள அட்டைகளைக் காட்டி தாங்கள் இந்த நாட்டின் குடிமக்கள்தான் என்பதை நிரூபித்து கொண்டார்கள். என்னைப்போன்ற வெளிநாட்டவர்கள் எங்கள் கடவுச்சீட்டினைக் காட்டினோம்.

அயல் நாட்டு குடிமக்களையும், தாங்கள் விளையாட்டு பொம்மைகளாக நினைக்கும் ஈழத்தமிழர்கள் சிலரையும் இறங்கி வரச்சொன்னான் அந்த படையினன். அந்த இரவிலும் இறங்கி கொஞ்சத்தூரம் நடந்தோம். அங்கே ஏற்கனவே ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. முந்தைய பேருந்தில் பயணம் செய்தவர்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. வரிசையில் நின்றோம். என்முறை வந்தபோது எனது கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டு பதிவு செய்து கொண்டான் ஒருவன். மற்றவன் கொஞ்சம் தள்ளி இருந்த அறைக்குள் சென்று எல்லோருக்கும் செய்தது போலவே எனது கடவுச்சீட்டை நகல் எடுத்து கொண்டு வந்தான். தமி

# ...திருந்து ...பறினேன்

**1**



...ர் துயிலும் இல்லம் இருந்த இடம்...

...மும் தெரியவில்லை ஆங்கிலமும் அவனுக்கு அவ்வளவாகத் தெரியவில்லை. தமிழர் திண்டாட்டம் அங்கிருந்து ஆரம்பமாகின்றது.

**உண்மையின் தரிசனம்**

பேருந்து புறப்பட்டது. அந்த இடத்திற்கு பெயர் ஓமந்தை என்றார்கள். பார்த்தீர்களா எனது வீட்டுக்கு போவதற்கும் பயந்து கொண்டு போகவேண்டி இருக்கின்றது என்று எனது அருகில் இருந்தவர் தனது ஆதங்கத்தை சொல்லும்போதே உலகை ஏமாற்றும் ராஜபக்ஷவின் புழுகு மூட்டை அவிழ ஆரம்பித்தது.

ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலும் யாராலும் தூங்க முடியவில்லை. அமர்ந்திருக்க முடிந்தால்தானே தூங்குவதற்கு. பள்ளங்களும் புழுதிகளுமே சாலைகளாக இருந்தன. ஆனால் அதுதான் கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் முதன்மைச் சாலை. ஒரே தேசம் எனச்சொல்லப்படும் நாட்டின் வடபகுதியானது, போரின்போதும் போருக்கு பிறகு இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற பிறகும் வளமற்றே கிடக்கிறது. காய்ந்த பூமியும், கருகிய புதர்களும், நொருக்கப்பட்ட கட்டடங்களுமாக, கைம்பெண்ணின் முகம்போல வடிவிழந்து இருக்கும் எம் தமிழ் சகோதரரின் நாட்டுக்குள் இப்படித்தான் பயணப்பட்டோம்.

யாழ்ப்பாணம் வந்திறங்கியபோது பொழுது நன்றாக விடிந்திருந்தது. எம் வீரர்களும் தரம் வாய்ந்த கலைஞர்களும் வாழ்ந்த பூமியில் எனது 15 நாள் வாழ்க்கை இருக்கப்போகின்றது என்ற உள்ளப் பூரிப்பில் இறங்கினேன். வரலாறு சுமந்திருந்த யாழ். நூலகம் எரிக்கப்பட்ட பூமியில், வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்ந்த உலகத்தமிழர் மாநாட்டில் தமிழ் அறிஞர்கள் கொலை செய்யப்பட்ட நிலத்தில் நிற்கின்றேன் என்ற பதைபதைப்பில் இறங்கினேன். மிகப்பெரும் அதிர்ச்சி நகரம் என்பதற்கான எந்தவித ஆரவாரமோ, ஆடம்பரமோ, தூய்மையோ வாகன ஒழுங்குமுறையோ ஏதுமின்றி காட்சி அளித்தது யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாணம்**

யாருடைய முகத்திலும் இயல்பான மகிழ்ச்சி இல்லை. உரத்துப் பேசும் ஆற்றல் இல்லை. கூடிக்குலாவும் சாலையோரச் சந்திப்புக்கள் இல்லை. இன்னும் பல இல்லை இல்லை.

காரணம் விரைவிலேயே புரிந்தது. சாலையில் எப்பக்கம் பயணித்தாலும் இராணுவத்தினரே அரணாக நின்று கொண்டிருந்தார்கள். கையில் துப்பாக்கியும் தோளில் ஒரு பையும் சுமந்துகொண்டு பச்சைநிற உடையுடன் சிங்கள இளைஞர்கள் நின்று கொண்டிருக்கும் காட்சியே நமக்கு சூழலின் மொத்தப் பரிமாணத்தையும் உணர்த்திவிடுகிறது. எந்த வீதிக்குள்ளும் அவர்களின் பார்வையில் படாமல் செல்லவேமுடியாது.

எப்பொழுது வேண்டுமானாலும் நாம் நிறுத்தப்படலாம். தமிழர் தம் சட்டைப்பையில் அடையாள அட்டை இல்லை என்றாலோ, அடையாள அட்டையில் திருப்தி இல்லை என்றாலோ சிக்கல்தான். இப்படி இடைமறித்து வினவுவது அவர்களின் பொழுதுபோக்கு. வாகன ஒழுங்கைக்கூட இராணுவ வீரர்கள்தான் செய்து வருகின்றார்கள். ஒவ்வொரு இராணுவ வீரனையும் துப்பாக்கியின் துர்கனவுகளையும் கடந்து செல்வது என்பது தமிழர்களுக்கு தினம்தோறும் அறுவைச்சிகிச்சை.

இடப்பெயர்வுகளின்போது இடம்பெயர்ந்த பலரது வசதியான வீடுகள் இன்று இராணுவக் குடியிருப்புக்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. வீடுகளின் உரிமையாளர்கள் பல ஆண்டுகளாகவே வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும்தான் தங்கியிருக்கின்றார்கள்.

இரவு வேளைகளில் நகரம் கிராமம் எங்கும் அமைதியே குடிகொண்டிருக்கின்றது. போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட காலங்களில் மாலை நேரத்தில் வீதிகளின் குறுக்கே முள் வேலிகளைப் போட்டுப் பாதைகளை அடைத்து விட்டதாகவும் வெளியேற அனுமதிக்கப்படவில்லை என்றும் குமுறினார்கள்.

இப்போதுகூட 7 மணிக்குப் பிறகு வாகனங்களில் பயணிக்கும் யாவருக்கும் பல்வேறு முனைகளில் விசாரணை நடக்கிறது. துப்பாக்கி மொழி மட்டும் தெரிந்திருக்கும் அவர்களிடம் சிங்களம் பேசி சிறிது புன்னகைப்பவர்கள் எளிதில் கிளம்பிவிடலாம். தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் தங்களை விளங்கப்படுத்துவதற்குள் விக்கித்து போய்விடுவர்.

**வடக்கு முழுவதும் ஒரே காட்சிகள்தான்**

சந்தேகம் எல்லாம் சாட்சிகளாக்கப்படும் இராணுவத்தில் துப்பாக்கிகளின் பாதுகாப்பில்தான் தமிழர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல. வடக்கு மாகாணத்தில் மற்ற இடங்களில் இருந்தும் கிழக்கு மாகாணத்திலிருந்தும் என்னை பார்க்க வந்தவர்களும் இதே வாழ்க்கை முறையில் தாங்கள் அவதிப்படுவதையே கண்ணீரோடு சொன்னார்கள். நானும் கண்டு வந்தேன்.

பூநகரி வழியாக முழங்காவில் என்ற இடத்துக்கு மேட்டார் சைக்கிளில் நண்பருடன் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. சென்றுவர ஐந்து மணிநேரப் பயணம். மழைக்கோட் அணிந்து கொண்டுதான் பயணித்தோம். மழையெல்லாம் பெய்யவில்லை. நாம் அப்படிதான் செல்லமுடியும். சாலைகளின் தரம் அப்படி. அதில் கிளம்பும் புழுதியும் அப்படி .

வாகனத்தில் அமர்ந்திருந்தாலும் குதித்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். எனக்கு உடல் வலி தெரியவில்லை. சுற்றும்முற்றும் பார்வையைப் பரவவிட்ட எனக்கு, என் மக்கள் மூட்டை முடிச்சுக்களோடு பதறி ஓடிய விளைநிலப்பகுதியும் மறைந்து கொண்ட புதர் பகுதிகளும் கொன்று வீசப்பட்ட நிலப்பகுதியும் ஈனஸ்வரமாக கலந்துபோன கதறல்களாகவுமே கண்ணில் படர்ந்துகொண்டிருந்தன.

பூநகரியில் வெள்ளை ஸ்தூபி ஒன்று பறக்கும் வெள்ளை புறாவை சுமந்தபடி நிற்கிறது. அதன் அருகே சிறிய பாலம் ஒன்று போருக்கு பிறகு கட்டப்பட்டுள்ளது. ஆனால் இராணுவத்தின் கோரப்பார்வையை பார்க்காமல் பாலத்தில் ஏறவும் முடியாது இறங்கவும் முடியாது. முழங்காவில் செல்லும்வரை சிறுநீர் கழிக்கக்கூட ஓரிடத்தில் நாம் இறங்க முடியாதபடிக்கு திசையெங்கும் இராணுவத்தினர் துப்பாக்கிகளோடு நிற்கிறார்கள். அது வனம் நிறைந்த பகுதி என்பதால் ஒரு படையினன் நிற்கின்றான் என்றால் அவனுக்கு பின்புறமாக ஒரு இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருப்பதையும் காண முடியும். சரியான இடைவெளியில் சர்வ சமாதானத்தின் தந்தை என்ற அறிவித்தலுடன் விளம்பரத்தட்டியில் ராஜபக்ஷ நின்று கை அசைத்து கொண்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் இருந்த மாவீரர் துயிலும் இல்லம் தடம் தெரியாமல் அழிக்கப்பட்டு வீரர்களின் வீர சுவாசத்தின் மீது இராணுவ முகாம் அமைந்திருக்கின்றது என்பதையும் மாவீரர் துயிலும் இல்லம் இருந்ததாகச் சொல்லப்படும் இடத்தில் நின்று நிழற்படம் எடுத்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதையும் என் நண்பர் வழியாக தெரிந்து வைத்திருந்த எனக்கு முழங்காவிலில் இருந்த மாவீரர் துயிலும் இல்லத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. போனோம் சுற்றும் முற்றும் பார்த்தோம்.

எங்கும் புல் புதர்கள்தான் இருந்தன. அருகில் இருந்த கட்டடத்தை அடையாளமாக வைத்து இந்த இடத்தில்தான் துயிலும் இல்லம் இருந்தது என்று நண்பர் சொன்னார். வரலாற்றையே அழிப்பவர்களுக்கு வீரத்தை மட்டும் போற்றவா தெரியப்போகின்றது. 200 மீற்றர் தூரத்தில் நின்று கொண்டிருந்த படையினனின் கண்களில் சிக்கிவிடாமல் வண்டியில் அமர்ந்தபடியே கையெடுத்துக் கும்பிட்டுவிட்டுப் படம் ஒன்று எடுத்து கொண்டேன்.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஜூலை 23 அன்று நடைபெற்றது. அன்றைய நாளில்தான் 1983இல் இலங்கை முழுவதும் தமிழர்களுக்கு எதிராக அடக்கு முறைகளும், அழித்தொழிப்புகளும் கொடூர முறையில் கட்டவிழ்த்து விடப்பட்டன. தமிழர்களுக்கு ஜூலை 23 என்பது கறுப்பு ஜூலையாகும். பல்வேறு வடிவங்களில் அந்த நாளில்தான் தேர்தல் நடத்தப்பட்டது. ✱

## சொல்லும் செயலும்



சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றும் இந்தக் காலத்தில் சகஜமாகப்போய் விட்டது. வாக்குறுதி கொடுப்பதற்கு நிறையப் பேர் இருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்றத்தான் ஆள் இல்லை.

கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கப் போனால் நான் எப்போது வாங்கினேன் என்பார்கள். இவர்கள் எங்கே கொடுத்த வாக்கைக்காப்பாற்றுவர்.

சில பெரியவர்கள் இப்படி இல்லை; சொன்னால் சொன்னபடி நடந்துகொள்வார்கள். அத்தகையவர் வாக்குக் கொடுத்தால் கொடுத்ததுதான். என்னவந்தாலும் அதிலிருந்து மீறமாட்டார்கள்.

கர்நாடக சங்கீத உலகத்தில் தியாகராஜரைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அபூர்வராகங்களில் பல மேன்மையான கிருதிகளைப் படைத்தவர் அவர். ஆனந்த பைரவி ராகத்தில் மூன்றே மூன்று பாட்டுத்தான் எழுதியிருக்கிறார். அதற்கு மேல் அவர் ஏன் எழுதவில்லையா? இதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்பது கர்நாடக சங்கீதம் படித்த பல பேருக்கும் ஏற்படுகின்ற ஒரு சந்தேகம். இதற்குப் பதிலைத் தேட முயற்சி செய்தபோது ஒருதகவல் கிடைத்தது.

அந்தக்காலத்தில் சங்கீதம் பாடுபவர்கள் ஒவ்வொரு ராகத்தில் சிறந்து இருப்பார்கள் அந்த ராகமே அவர்களுக்கு அடைமொழியாகவும் ஆகிவிடுவதுண்டு. இந்த வகையில் தான் ''அடாணர் அப்பய்யா என்று ஒருத்தர் இருந்தார்.

அப்போது திரிபுவனம் சுவாமிநாதன் அய்யர் என்று ஒருத்தர் இருந்தார். இவர் எந்த இராகத்தை எடுக்கலாம் என்று யோசித்தார். ஆனந்தபைரவியை எடுத்தார். அதில் மிகவும் சிறந்தவித்துவான் ஆகிவிட்டார். பல பேரின் கவனம் அவர் பக்கம் திரும்ப ஆரம்பித்தது.

ஒரு சமயம் ஒரு பொம்மலாட்டக் கோஷ்டி திருவையாறுக்கு வந்தது. அதோட திரிபுவனம் சுவாமநாதன் அய்யரும் வந்தார். அவர்கள் இவருடைய ராக ஆலாபனையில் மிகவும் லயித்துப் போய்விட்டார்கள்- அதுமட்டுமன்றி திரும்பிப்போனதும் தியாகராஜரிடம் ஒரு செய்தியை சொல்லியிருக்கிறார்கள். இதற்கு தியாகராஜர் உடனடியாகப் பதில் எதுவும் சொல்லவில்லை.

ஒரு நாள் தியாகராஜரே அங்கே நேரில் சென்றுவிட்டார். ஒரு இடத்தில் மறைவாக நின்று கவனித்தார். திரிபுவனசுவாமிநாதையர் ஆனந்த பைரவி ராக ஆலாபனையை ஆரம்பித்தார். உண்மையிலேயே அதை மெய்மறந்து கேட்டார் தியாகராஜர்.

கச்சேரி முடிந்தவுடனே கூட்டத்தில் முண்டியத்து மேடைக்குப் போனார் தன்னுடைய பாராட்டைத் தெரிவிப்பதற்காக.

சங்கீத மகானே அங்கே வந்திருப்பதைப் பார்த்ததும் சபையில் ஒரு சலசலப்பு. உடனே சுவாமி நாதையர் மேடையில் இந்து கீழே இறங்கி தியாகராஜர் காலில் வீழ்ந்தார். ''சுவாமி தாங்கள் சபையில் இருக்கிறபோது நான் ராக ஆலாபனை செய்ய முனைந்தது அதிக பிரசங்கத்தனம், என்னை மன்னித்து விடுங்கள் என்றார்.


தியாகராஜரோ '' உங்களுடைய கச்சேரியைச் கேட்டுத் திருப்தியும் ஆனந்தமும் கொண்டேன்'' என்றார் கூட்டத்தில் ஒரே கைதட்டல், ஆரவாரம். இந்தச் சமயத்தில் சுவாமிநாதையர் தயக்கத்தோடு ஆரம்பித்தார் ''புலவர் பெருமானே, உங்களிடம் ஒருவரம் வேண்டுகின்றேன்'' என்றார். ''நீங்கள் கேட்பதற்கு முன்பாகவே கொடுக்கிறேன்'' என்றார் தியாகராஜர்.

''சுவாமி நான் வேண்டும் வரம் இதுதான்; இன்றுமுதல் ஆனந்தபைரவி இராகத்தில் பாடல் இயற்றுவதை தாங்கள் நிறுத்திவிடவேண்டும். வருங்காலத்தில் தியாகராஜர் ஆனந்த பைரவி ராகத்தில் ஏன் அதிகமாகப் பாட்டு எழுதவில்லை என்ற கேள்வி எழும்போது இப்போது நடந்ததைக் கூறுவார்கள் அதனால் என்னுடைய பேரும் தலைமுறை தலைமுறையாக மக்கள் மனதில் நிலைத்திருக்கும்'' என்றார்.

மக்கள் வாயடைத்து நின்றார்கள். ஆனால் தியாகராஜர் ஒன்றும் அதிர்ச்சியடையவில்லை. முகத்தில் புன்னகையோடு அவர் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். அன்றைக்குக் கொடுத்த வாக்கை அப்படியே நிறைவேற்றினார் தியாகராஜர்.

அதுமட்டுமல்ல, ஏற்கனவே எழுதியிருந்த மூன்று பாடலையும் அதற்குப்பின் புதிதாகவந்த சீடர்களுக்குக் கற்பிக்கவும் இல்லை. இந்த மூன்று பாடல்களும் இந்தச்சம்பவம் நடப் பதற்கு முன் கற்றுக்கொண்ட சீடர்கள் வழியாகத்தான் இன்றைக்கு வழக்கத்தில் இருக்கின்றன. எனவே பெரியவர்கள் எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் வாக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதை எவ்வளவு உறுதியாகக் காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**கோ.சுவாமிநாதன்**



முறிகண்டி இந்து வித்தியாலயத்தில் அண்மையில் அதிபருக்கான பாராட்டு விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா அதிபர் ஆ.சூசைநாதனுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துமடல் வழங்குகின்றார்.

# பிள்ளைகளின் ஒழுக்கத்தில் பெற்றோர் கவனமெடுத்தால் அவர்களது மனநலம் பாதிப்படைவதைத் தடுக்க முடியும்

## உளநல அதிகாரி கூறுகிறார்

குருநகர், ஒக்.19

இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் வாழும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஒழுக்கத்தில் கூடிய கவனம் செலுத்தினால் அவர்களது மனநலம் பாதிப்படைவதைத் தடுக்க முடியும்.

இவ்வாறு யாழ்.பிரதேச செயலக உளநலப் பொறுப்பதிகாரி எஸ்,உதயகுமார் தெரிவித்துள்ளார்.

உளநலவாரத்தையொட்டி குருநகர் பொதுமக்களுக்கு உளநலம் சம்பந்தமாக விழிப்புணர்வை உருவாக்கும் கருத்தரங்கு குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அவர் கருத்துரை வழங்கியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் சரியான வழியில் எமது வாழ்க்கையை நடத்துவதற்கு எமது உடல், உள ஆன்மீக ஆரோக்கியம் சிறப்பாக இருக்க வேண்டும். மனிதனது நடத்தையைத் தீர்மானிப்பதில் அவனது குடும்பமும் அவன் சார்ந்த சமுதாயமும் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன. ஒரு தந்தை மதுபாவனையில் ஈடுபாடுடையவராக இருந்தால் அந்தக் குடும்பம் பாதிப்படைந்து விடும். பிள்ளையும் அவரையே பின்பற்ற முயற்சிக்கும். அந்தக் குடும்பத்தில் வேண்டத்தகாத செயல்கள் உருவாகி குடும்பம் வளர்ச்சியடையாமல் பின் தங்கி விடும்.

அதேபோன்று சமுதாயத்தில் நடக்கும் நிகழ்ச்சியும் பிள்ளையில் செல்வாக்குச் செலுத்துகிறது. இன்றைய சமுதாயத்தில் தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசிப் பாவனை அதிகரித்துக் காணப்படுகிறது. கையடக்கத் தொலைபேசியைப் பாவிக்கும் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பலர் வேண்டத்தகாத தீய பழக்க வழக்கங்களைப் பின்பற்றி தங்களையே அழிவுக்குள்ளாக்குவதை எமது சமுதாயத்தில் காணவும் கேட்கவும் கூடியதாக உள்ளது.

உள நம்பிக்கை உடல் ஆரோக்கியத்தை வழங்குகிறது. மனோபலம் எல்லாவற்றையும் விடச் சிறந்தது. நல்ல உடல் நலம் உள்ளவர்கள் சிறந்த தீர்மானத்தை எடுப்பார்கள். அதிக வேலைப்பளு உளநலத்தைப் பாதிக்கும். வெளிநாடுகளில் வேலை செய்பவர்கள் உளநலம் பாதிப்படையாமல் இருப்பதற்காக அந்த நாடுகளில் வேலையாள்களுக்குக் கட்டாய லீவு வழங்கப்படுகிறது.

நீரிழிவு நோய் வருவதற்கு அதிகளவு மன அழுத்தமும் ஒரு காரணி என்று ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மகிழ்ச்சியும் துக்கமும் அவரவர் மனதைப் பொறுத்தது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பாதுகாப்பில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். பாலியல் வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளன என்று பத்திரிகைச் செய்திகள் மூலம் தெரியவருகின்றது. நடைபெற்று முடிந்த போர் காரணமாகப் பலர் தமது உறவுகளை இழந்து உளப் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். இவர்களை ஆற்றுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இத்தகைய உளப் பாதிப்புக்குள்ளானோர் திங்கள், புதன் ஆகிய நாள்களில் யாழ்.பிரதேச செயலகத்துக்கு வருகைதந்து தமது பிரச்சினைகளை எம்மிடம் கூறினால் அவர்கள் உளப் பாதிப்பிலிருந்து விடுபடுவதற்கான ஆலோசனை வழங்கப்படும் - என்றார். (ச-51)

# வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிப்பதன் மூலம் ஏனையவர்களையும் ஊக்குவித்துக் கொள்ள முடியும்

## வணிக பீடாதிபதி தெரிவிப்பு

வலி.வடக்கு, ஒக்.19

கிராமங்களின் வளர்ச்சிக்கு கல்வி முக்கியமாகும். எனவே வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிப்பதன் மூலம் ஏனையவர்களையும் கல்வியில் ஊக்குவிக்கமுடியும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா தெரிவித்துள்ளார்.

மல்லாகம், கோட்டைக்காடு சாளம்பை விழுதுகள் அபிவிருத்திக் கழகத்தின் வாணி விழாவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முன்றலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விழுதுகள் சமூக அபிவிருத்திக் கழகம் மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புக்களை மட்டும் நடத்தாது அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்குவித்தும் வருகின்றார்கள். மாணவர்களை இவ்வாறு பாராட்டுவதன் மூலம் சமூகத்தில் நல்ல பண்பாளர்களாக மாற்றமுடியும்.

இன்று மாணவர்களுடைய ஆற்றல்கள் கல்வி, கலை, விளையாட்டு என்று பல துறைகளிலும் இனம் காணப்பட்டு அவர்களுக்குப் பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள் - என்றார். (ச-86)

# மாற்றுவலுவுடையோர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளின் முடிவுகள்

வலி.வடக்கு, ஒக்.19

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலக சமூக சேவைகள் திணைக்களம், உடுவில் கல்விக் கோட்டம் என்பன இணைந்து சர்வதேச மாற்று வலுவுடையோர் தினத்தையொட்டி உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளிடையே நடத்திய கட்டுரை, கவிதைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**கட்டுரை**

கீழ் பிரிவு- யோ. வினுஜா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி),க.சுஜீவன்(இணுவில் மத்திய கல்லூரி), த.தணிகன் (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்).

மத்திய பிரிவு - வ.சொரூபிகா(இணுவில் இந்துக் கல்லூரி), சி.கம்ஸா(இணுவில் மத்திய கல்லூரி), உ.தனுசன் (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி).

மேல் பிரிவு - வி.சுலக்ஷன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), பொ.கீதாஞ்சலி, (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), கு.தயாளினி, (இணுவில் மத்திய கல்லூரி) .

**கவிதை**

கீழ்ப் பிரிவு- சி.யதர்சிகா (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி), ப.காண்டீபன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஜெ.காயத்திரி, (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி), நா.கீர்த்திகா (இணுவில் மத்திய கல்லூரி).

மத்திய பிரிவு - ம.மதுஷாலினி(இணுவில் இந்துக் கல்லூரி), இ.சர்மிளா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), செ.நிரோஜினி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

மேல்பிரிவு -ஜெ.தர்சனா (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சி.லாவணியா (இணுவில் இந்துக் கல்லூரி), செ.அரவிந்தன் (ஏழாலை மகா வித்தியாலயம்).

(ச-86)

## சிறந்த ஆசிரியருக்கான விருது



மன்னார், ஒக்.19

மன்னார் பொன் தீவுக் கண்டல் றோ.க.த.க.பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை திருமதி சகிலா கிறிஸ்ரி அன்ரன் 2011 ஆம் ஆண்டு சிறந்த ஆசிரியர்களுக்கான பிரதீபா பிரபா விருதினை பெற்றுள்ளார். (ச)

## சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் இரண்டாம் இடம்

தென்மராட்சி, ஒக்.19

சர்வதேச அஞ்சல் தினத்தையொட்டி அஞ்சல் அலுவலகங்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் மாகாண மட்டத்தில் முதலாம் தர அஞ்சல் அலுவகங்களில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

அத்துடன் தபால் பிரிக்கும் உத்தியோகத்தர்களிடையே நடத்தப்பட்ட போட்டியில் இந்த அலுவலகத்தைச் சேர்ந்த எஸ். கோகுலராஜா மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தபாலகத்தின் தூய்மை, அதன் வளர்ச்சி தபாலகக் கட்டடத்தின் அழகு, நிர்வாகக் கட்டமைப்பு, பணியாளர்களின் அயராத சேவை போன்றவற்றை அடிப்படையாக வைத்துப் போட்டிகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச -207)

## முதியோர் தின நிகழ்வு

கொழும்புத்துறை, ஒக்.19

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர்தின நிகழ்வும் கௌரவிப்பும் கடந்த ஞாயிற்றுக் கிழமை அரியாலை நீர்நொச்சித் தாழ்வு அருளம்பலம் மண்டபத்தில் சங்கத் தலைவர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜே/89 கிராம அலுவலர் எஸ்.இன்பன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் அரியாலைப் பிரதேசத்தைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட முதியோர் கௌரவிக்கப்பட்டனர்.

வயது கூடிய அடிப்படையில் 12 பேருக்கு மலர்மாலை அணிவித்து உடுபுடைவைகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ச-135)

## முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா

சுழிபுரம், ஒக்.19

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை விக்கினேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வேல்ட் விஷன் முகாமையாளர் பிளேற்றர் றொசைறோ கலந்து கொண்டார். (ச-28)

# வலி நீங்க வழி பிறக்குமா?

மத்தியான வெயில் தயவுதாட்சண்யமின்றி எல்லோரையும் சுட்டுப்பொசுக்கிக் கொண்டிருந்தது. வீதியில் போடப்பட்டிருந்த தார்கூட வெயிலின் சூட்டைத் தாங்கமுடியாமல் உருகத்தொடங்கியிருந்தது.

ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் ஓர் ஓட்டோ வெகு வேகமாக வீதியில் விரைந்து கொண்டிருந்தது. அதன் வேகத்தில் உருகிய தார் சர்க்! சர்க்!! சர்க்!!! என ஓட்டோவின் சில்லை ஒட்டிப் பிடித்து, வேகத்தைக் குறைக்க முயற்சித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் அதற்கு ஓட்டோ மசிவதாக இல்லை. ஓட்டோவுக்குள் இருந்த பெண்ணின் நிலை அப்படி. பிரசவ வலியால் அந்தப் பெண் துடித்துக் கொண்டிருந்தாள்.

''கொஞ்ச நேரம் சாமாளிச்சுக் கொள்ளம்மா! ஆஸ்பத்திரிக்கு கிட்ட வந்திட்டம். இனிப் பயமில்லை'' என்று அந்தப் பெண்ணின் தாய் அவளைத் தேற்றிக் கொண்டிருந்தாள். தேறுதல் மொழிகள் வலியை எந்தவிதத்திலும் விரட்டவில்லை. மாறாக முன்னரை விடவும் வலி இன்னும் அதிகரிக்கவே செய்தது. நாலைந்து கிலோ மீற்றர் தாண்டிவிட்டால் வைத்தியசாலை வந்துவிடும். அது மட்டும் வலியைத் தாங்கத்தான் வேண்டும்.

## கோணல் கோலங்கள்

இவர்களின் பயணத்தை விடவும் துரதிர்ஷ்டம் மிகவேகமாகப் பயணித்திருக்க வேண்டும். இன்னும் ஒரு சந்தியைக் கடந்துவிட்டால் ஆஸ்பத்திரி வந்துவிடும் என்றெண்ணிக் கொண்டிருந்த வேளையில், வீதியில் ஓட்டோவில் அவசரமாகப் பயணிப்பவர்களைக் கண்டு அவர்களின் நெருங்கிய உறவினர் ஒருவர் கைநீட்டி மறித்தார்.

''இதென்ன மனிசன், நேரகாலம் தெரியாமல் ஓட்டோவை மறிக்குது?'' என மனதுக்குள் திட்டியவாறு, வெளியே எட்டிப்பார்த்தார் தாய்.

''அண்ணை! பிள்ளைக்கு வலி வந்திட்டுது. அதுதான் ஆஸ்பத்திரிக்கு அவசரமாக் கொண்டு போறம்'' அவரது வார்த்தைகளில் 'ஏன் மறிச்சனீங்கள்?' என்ற கேள்வியும் இருந்தது.

''எனக்கும் தெரியும். உங்கட மூத்தவன் இப்ப போன் பண்ணிச் சொன்னவன். அதுதான் மறிச்சனான். நீங்கள் உந்த ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக அவங்கள் பெரியாஸ்பத்திரிக்குத்தான் போகச் சொல்லுவாங் கள். மிட்வைப் வாறேலை, லீவு எண்டு சொல்லி பிள்ளைப் பெத்துக்காரரை பெரியாஸ்பத்திரிக்குத் தான் அனுப்புறாங்கள். நீங்கள் போனாலும் மிட்வைவ் நிக்கமாட்டினம். அதால உங்களையும் பெரியாஸ்பத்திரிக்குத் தான் போகச்சொல்லுவாங்கள். அதால உங்க போய் மினக்கெடாமல் பிள்ளையை பெரியாஸ்பத்திரிக்கே கொண்டுபோங்கோ. அதைச் சொல்லத்தான் வந்தனான்'' சொன்னதோடு மட்டுமல்லாமல் , ஓட்டோக் காரரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு போகும்படி அவசரப்படுத்தவும் செய்தார்.

அதன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அந்தப்பெண்ணுக்கு பிரசவம் இனிதே நிகழ்ந்தது. அந்த உறவினர் தடுத்தாட்கொள்ளாவிட்டால் நிச்சயமாக முதலில் சென்ற வைத்தியசாலையில் அவர்கள் மினக்கெட்ட பின்பு இண்டைக்கு மிட்வைவ் வரேலை. அவை இல்லாமல் டெலிவரிகேஸ் பாக்கமுடியாது. அவசரமான கேஸ் மட்டும்தான் பாக்கலாம். இவாவுக்கு நோர்மல்தானே. அதால பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போறதுதான் நல்லது என்று அனுப்பியிருப்பார்கள். ஏனெனில் வலி.கிழக்கில் உள்ள அந்தப் பெரிய வைத்தியசாலையில் இவ்வாறு மிட்வைஃப் எனப்படும் குடும்பநல மாதுக்கள் பெரும்பாலும் இல்லாதிருப்பதால் அங்கு பிரசவத்துக்காக வருகின்றவர்களில் பெரும்பாலானோரை யாழ்.போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைப்பது வாடிக்கையாகி விட்டது. பிரசவம் ஒன்று நிகழ்கின்ற சமயத்தில் ஒரு குடும்பல நல உத்தியோகத்தரும் இருக்கவேண்டும். குறித்த வைத்தியசாலையில் ஒன்றுக்கு மூன்று குடும்பநல உத்தியோகத்தர்கள் இருந்தாலும் அவர்கள் அடிக்கடி லீவில் சென்று விடுகின்றனர். அவர்களுக்காகப் பதில் கடமையேற்பவர்களும் உரியபடி சமுகமளிப்பதில்லை. இதனால் தேவையற்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக பிரசவத்துக்காக வருகின்றவர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் அனுப்பிவைப்பதாகக் கூறப்படுகின்றது. குடும்பநல உத்தியோகத்தர்கள் இப்படி பொறுப்பற்றவகையில் அடிக்கடி சொல்லாமல் கொள்ளாமல் விடுப்பில் செல்வதையோ, உரியநேரத்துக்கு பணிக்கு வராதிருப்பதையோ, குடும்ப நல உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் பிரசவத்துக்கு வலியோடு வருகின்ற பெண்கள் திருப்பி அனுப்புப்படுவதையோ அந்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியும் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

இதனால் வைத்தியசாலை பற்றிய தவறான கணிப்பீடே பொதுமக்கள் மத்தியில் எழத்தொடங்கியுள்ளது.

### ஓடுகாலி

எப்படியும் குறித்த வைத்தியசாலைக்குச் சென்றால் பெரியாஸ்பத்திரிக்குத் தானே அனுப்பப்போகிறார்கள். அதனால் நாமே பேசாமல் பெரியாஸ்பத்திரிக்குச் சென்றுவிடுவோம் என அவர்களாகவே முடிவெடுத்து விடுகிறார்கள். இதனால் பிரசவத்துக்காக இந்த வைத்தியசாலைக்கு வருபவர்களின் எண்ணிக்கை சடுதியாகக் குறைவடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இப்பகுதியில் உள்ள மக்கள் பிரசவத்துக்காக போதனா வைத்தியசாலைக்குச் செல்ல , நீண்டநேரம் பிடிக்கிறது. பிரசவத்தின்போது தாமதிக்கின்ற ஒவ்வொரு நொடியும் ஆபத்தானது. ஆனால் தமது பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலை கையை விட்டதால், தாமதிப்பது ஆபத்து என்று தெரிந்தும் கூட வேறுவழியின்றி போதனா வைத்தியசாலைக்குச் செல்வதே இவர்களின் ஒரே தெரிவாக உள்ளது.

இதுகுறித்து வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி இனியாவது கவனமெடுத்து மக்களின் இன்னல்களைப் போக்க முனைவாரா? ✱

# 31ஆம் நாள் நினைவலைகள்

சென்ற 19.09.2011 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்



அமரர்
சின்னத்தம்பி
அருமை

தோற்றம்:
02.05.1935

மறைவு:
19.09.2011

ஒருமைக் கண் ஒன்றாய்க் கண்ட உம்பிள்ளைகளை
அருமையாக வளர்த்தெடுத்தீர் ஐயா! எம் தெய்வமே! – இன்று
இரும் என எமை நீர் இருத்தி விட்டு இறையடி சேர்ந்தின்று
ஒரு திங்கள் ஆனதாக பொழுதெல்லாம் மாறிடினும் – அப்
பொழுதெல்லாம் எம்மனதில் நீரே ஐயா!

ஐயா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.10.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

சுன்னாகம் வீதி,
மருதடி,
புத்தூர் வடக்கு, புத்தூர்.

குடும்பத்தினர்.

## எரிபொருள் நிலைய ஊழியர் தாக்கப்பட்டார்

நவாலி, ஒக்.19

மானிப்பாய் ப.நோ.கூ. சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு கடமையிலிருந்த ஊழியர் இனந்தெரியாத நபரினால் தாக்குதலுக்கு உள்ளானார்.

இரவு 8 மணியளவில் குறித்த ஊழியர் அந்த விற்பனை நிலையத்தில் நின்று கொண்டிருந்த வேளை அவ்விடத்திற்கு சிலர் வந்ததாகவும் அவர்களில் ஒருவர் திடீரென உள்ளே வந்து ஊழியரைத் கன்னத்திலும் உடம்பிலும் தாக்கி விட்டுச் சென்றார் என்றும் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இதுபற்றி மானிப்பாய் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-100)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03.10.1926



மறைவு
29.10.2010

திருமதி துரைசாமி
கனகம்மா

திதி. 19.10.2011 ஸப்தமி

எங்களின் அன்பு அம்மாவே
வீடு ஒளியிழந்து ஓராண்டு
ஆகிவிட்டதம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்

44, முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம்
30 . 10 . 1930



மறைவு
19 . 09 . 2011

அமரர் தெய்வேந்திரன் சரஸ்வதி

கடந்த 19.09.2011 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்தோருக்கும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (19.10.2011) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

7, பேக்கரி ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தெ.பாலகணேஷ்.
(மகன்)

எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின்
சுதந்திர உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளனின்

# பதினோராம் ஆண்டு நினைவு


செய்திக்காக:
05.06.1961

செய்தியாய்:
19.10.2000

பாரினில் உன் குரல்
பரவிக் கிடக்கையில்
ஊரெல்லாம் உன் பெயர்
ஓங்கி ஒலிக்கையில்
இடிவிழுந்தது எம்வாழ்வில்
உன் உயிர் பிரிந்தது அந்நாளில்

ஆண்டு பதினொன்று
ஆனதோ நிமலனே!
ஆறுதல் அடையாமல்
ஆண்டாண்டாய் தவிக்கின்றோம்
ஆண்டவர் மடியில் நீர்
ஆறுதல் அடைந்திட
மாண்டவர் அனைவருக்கும்
வேண்டுதல் செய்கின்றோம்

உன் நினைவுடனே வாழும்
உன் குடும்பத்தினர்



அமரர்

## மயில்வாகனம் நிமலராஜன்

# வசதிகளற்ற நிலையிலும் தங்கம் வென்ற எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்

ஒவ்வொரு ஊரிலும் வாழ்ந்த சைவப் பெருமக்கள் சமயத்தை வளர்ப்பதில் மிகவும் அக்கறை கொண்டு விளங்கினார்கள். காலணித்துவ கிறிஸ்தவ மத குருமார்கள் இங்கு கால் பதித்து தமது மதத்தைப் பரப்பும் குறிக்கோளை முன்னிறுத்தி அதற்குக் கல்வியை ஒரு கருவியாக எடுத்துக் கொண்டு ஆங்காங்கே பாடசாலைகளை உருவாக்கி உலக கிறிஸ்தவ மதத்தை கிராமங்கள் தோறும் பரப்ப நடவடிக்கை எடுத்திருந்தனர். இதனை எதிர்த்து சைவப் பெருமக்கள் சைவப் பாடசாலைகளை தத்தமது ஊர்களில் நிறுவ ஆர்வமுடன் செயற்பட்டனர்.




எழுவை தீவிலும் சைவப்பெற்றோர்கள் தமக்கோர் சைவவித்தியாலயம் வேண்டும் என சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினருடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பால் 1925 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதே எழுவைதீவு முருக வேள் கனிஷ்ட வித்தியாலயமாகும்.

பாடசாலை ஆரம்பமானதும் வெளியிடங்களைச் சேர்ந்த பலர் இங்கு கல்வி கற்பிக்க தமது சொந்த விருப்புடன் வந்தனர். அது அந்தக் காலப்பகுதியில் நடந்தது தற்போது முதல் நியமனத்தின் போது மட்டுமே என்றால் இங்கு வருகிறார்கள்; பின்னர் எப்படியோ இடமாற்றம் பெற்றுச் சென்று விடுகிறார்கள் என எழுவை தீவு மக்கள் கூறுகிறார்கள். இந்தப் பாடசாலையில் எழுவை தீவைச் சேர்ந்த ஒரே ஒருவர் மட்டுமே ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார் என்றும் ஒரு தகவல் உண்டு. முருகவேள் வித்தியாலயம் ஆரம்பிக்கக் காரணராக விளங்கியவர் அம்பலவாணர் முத்துச்சாமி. இவரே அங்கு பயிற்றுவித்த ஆசிரிய குமாஸ்தா. பின் நாளில் இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக தமது அர்ப்பணிப்புடன் கூடிய சேவையை வழங்கியவர் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்ற க.சுப்பிரமணியமாவார்.

ஆரம்ப காலத்தில் கல்வித்தரம் உயர்ந்து விளங்கியதாகவும் அது காரணமாக க.பொ.த. சாதாரண வகுப்பு வரை ஆரம்பிக்கபட்டதாகவும் மாணவர்கள் நல்ல பெறுபேற்றினைப் பெற்றுள்ளதாகவும் தற்போதைய அதிபர் ஜே.கமலதீபன் கூறியதுடன் 2009-2010 ஆம் ஆண்டுகளில் கிடைத்த பெறுபேறுகளையும் காண்பித்தார். தற்சமயம் க.பொ.த. சாதாரண பெறுபேறுகள் நல்ல நிலையில் வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

முருகவேள் வித்தியாலயத்தில் 1936 ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் மொத்தம் 18 பேர் ஐந்தாம் வகுப்பு வரை அங்கிருந்துள்ளனர். 1937 இல் இருபத்து ஐந்து மாணவர்களைக் கொண்டிருந்தது. தற்சமயம் நூற்றி இருபது மாணவர்களும் அதிபருடன் கூடவே ஒன்பது ஆசிரியர்களும் உள்ளனர். ஆரம்ப நாள்களில் ஒரு ஆசிரியர் மட்டுமே இருந்ததால் அவருக்கு ஏற்படக் கூடிய அவசர வேலைகளின் நிமித்தம் வெளியில் செல்வதானால் பாடசாலையை மூட வேண்டிய நிலை ஏற்படும். இதைத் தவிர்க்க ஊரில் உள்ள படித்தவர்கள் மாணவர்கள் உதவ முன் வந்துள்ளனர்.

பாடசாலை தொடர்பான ஆவணங்கள் பெரிய அளவில் இல்லை. சில குறிப்புகளைக் கொண்ட பதிவுப் புத்தகம்தான் அதன் விவரங்கள் சிலவற்றைப் பார்க்க உதவுகிறது. அதிபர்களாகப் பணியாற்றியவர்களின் விவரங்கள் முழுமையாக இல்லை. த.கனகரத்தினம் க.சுப்பிரமணியம் எஸ்.சிவபாலன் (இவர் பதினைந்து வருடங்கள் அதிபராக இருந்துள்ளார்) து.கிருபாகரன், கு.செல்லத்துரை ஆகியோர் அதிபர்களர்கப் பணியாற்றினர். தற்போதைய அதிபர் எழுவைதீவைச் சேர்ந்தவர். எழுவைதீவு முருகவேளில் பணியாற்றிய ஒரேயொரு ஆசிரியரும் இவரே.

1957இல் மதிய போசனம் வழங்கப்பட்டது. இதனால் ஏழை மாணவர்கள் இங்கு கல்வி பயில சேர்ந்து கொண்டார்கள். மாணவர்களின் வரவு அதிகரித்ததால் மூன்றாம் தரத்தில் ஆங்கிலம் ஒரு கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டது.

1966 இல் ஏற்பட்ட இயற்கையின் தாக்கத்தினால் பாடசாலையின் தற்காலிக கொட்டகைகள் தரைமட்டமானது. இந்த வேளை அதிபராக இருந்த சுப்பிரமணியம் முடிந்தவற்றையெல்லாம் காப்பாற்றி அருகில் இருந்த ஏரம்பு என்பவரின் வீட்டில் பாதுகாப்பாக வைத்திருந்தார். பின்னர் அந்த வீடும் திடீரெனத் தீபற்றிக் கொண்டதால் தப்பியிருந்த ஏனைய ஆவணங்களும் சாம்பராகியது துரதிஷ்டமே.

முன்னர் ஆண்டு ஐந்துக்கு மேல் உள்ள வகுப்புக்களுக்கான மாணவர்கள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்குச் சென்று விடுவார்கள். அப்போதெல்லாம் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் என்ற நிலைப்பாடு இருந்ததால் கிறிஸ்தவ மாணவர்கள் முருகவேள் வித்தியாலயத்தைத் தவிர்த்து வந்திருந்ததாகவும் தற்சமயம் முருகவேள் வித்தியாலயம் வளர்ச்சியடைந்துள்ளதால் கிறிஸ்தவ மாணவர்களும் அங்கேயே தமது கல்வியைத் தொடர்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**லக்ஸ்மன்**

பாடசாலையின் கல்வி நிலை வளர்ச்சியடைந்து வருகின்றது. எனினும் கணினி அறை, நூலகம் விளையாட்டுக்கான உபகரணங்கள், குடிதண்ணீர் வசதி என்பன தேவையாக உள்ளன. மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இந்தத் தீவின் முக்கிய பாடசாலை இது என்பதால் ஆசிரியர்கள் தமது கடமை நேரத்துக்கும் மேலதிகமான சேவைகளை வழங்குகிறார்கள். (தொடரும்)

**வீடு வாடகைக்கு**

யாழ். நகரை அண்டிய பகுதியில் பாதுகாப்பான, அழகான, விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.
வெளிநாட்டு நிறுவனங்கள் / அரச தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0773780585

**அறை வாடகைக்கு**

திருநெல்வேலி சந்திக்கு அண்மித்து கலாசாலை வீதியில் முன் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0772517640
0212220568
(9204)

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
புறொயிலர் இறைச்சி ரூபா 495/= மட்டுமே
நல்லூர் பாம் சென்ரர்,
இல.19, முருகேசர் லேன், நல்லூர்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

முல்லைத்தீவு பாலிநகர் மகாவித்தியாலய ஆசிரியை
**திருமதி தவச்செல்வம் லோகரஞ்சினி**



அவர்கள் துணுக்காய் கல்வி வலயத்தின் நல்லாசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியால் ''பிரதீபா பிரபா'' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை வாழ்த்துவதுடன் மேலும்பல உயர்வுகளைப் பெற்று மாணவர்களுக்கு தனது சேவையை ஆற்ற வேண்டுமென எல்லாம் வல்ல வளவு நாச்சிமாரை வேண்டுகிறோம்.

வாழ்த்துபவர்கள்:
அம்மா, கிருபா அக்கா குடும்பம் (சண்டிலிப்பாய்),
நாளாயினி குடும்பம் (குழுமுனை),
ரவி, ரூபன் குடும்பம் (இத்தாலி).

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**




கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கில் வசிக்கும்
திரு.திருமதி சந்திரகுமார் கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வி
ஷர்ஜினா தனது முதலாவது பிறந்த நாளை இன்று (19.10.2011) புதன்கிழமை கொண்டாடுகிறார். இவர் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோண்டாவில் சிவபூதவராயர் ஆசிவேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: இணுவிலில் இருக்கும் அப்பா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், பிரசான் சித்தப்பா, அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், தங்கச்சி உற்றார், உறவினர்
இணுவில் தெற்கு, இணுவில். அப்பா சந்திரகுமார்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



கிளிநொச்சி கல்வி வலயத்தில் நல்லாசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு ஜனாதிபதியினால் 'பிரதீபா பிரபா' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட எமது பாடசாலை ஆசிரியர்
**திரு.மரியநாயகம் மரியராசா**
(B.Com, HNDE) அவர்கள்
மேலும் பல சிறப்புகளும் விருதுகளும் பெற வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் சகோதரத்துவம்,
கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம்.

**உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**



தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்!

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருள்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DHL WORLDWIDE EXPRESS கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது 650/= ரூபாவிலிருந்து

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்,CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL WORLDWIDE EXPRESS




**திருமுருகன் கொம் நெற்**

இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.

# சிறைச்சாலை திணைக்களத்துக்கு எதிராக இதுவரை 800 ஊழல் முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஒக். 19

சிறைச்சாலை திணைக்களத்தில் நடைபெற்றுள்ள லஞ்ச, துஷ்பிரயோக, ஊழல் மோசடிகள் பற்றி இதுவரை 800 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரியவருகிறது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்நிர்மாண அமைச்சால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழுவிற்கே இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின் பின் மூன்று சிறைச்சாலைக் காவலர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். சிறைக்கைதிகள் மீதான தாக்குதல்கள், சித்திரவதைகள் போன்றவை பற்றிப் பாதிக்கப்பட்ட கைதிகளோ உறவினர் களோ செய்யும் முறைப்பாடுகள், சிறைச்சாலை ஊழியர்களின் பிரச்சினைகள் பற்றிய முறைப்பாடுகள் போன்றவையே விசாரணைக்குழுவிற்குக் கிடைக்கின்றன.

கடந்த எட்டு மாதகாலமாக சட்டத் தரணி ஒருவரின் தலைமையில் இந்தக்குழு இயங்கி வருகிறது. சிறைச்சாலை உயரதிகாரிகள் பலருக்கு எதிராக வும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன - என்றார்.



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.வி.வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை திறப்புவிழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. சிலை அமைப்பதற்கு நிதி உதவி வழங்கிய எஸ்.சதாசிவத்துக்கு காரைநகர் கோட்டக்கல்வி அதிகாரி பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். (ம-250)

# தஞ்சம் கோரிய சீனருக்கு புகலிடம் வழங்கியது அரசு

இலங்கையில் அரசியல் புகலிடம் கோரிய சீனப் பிரஜையொருவர் இலங்கையில் தங்கியிருக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. செல்லுபடியான விசா இன்றி இலங்கையில் தங்கியிருந்ததாக அவர் மீது தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் அவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை விடுதலை செய்தது.

இந்தநபர் தொடர்பாக கொம்பனித்தெரு பொலிஸாருக்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அனுப்பிய கடிதமொன்றை கருத்திற்கொண்ட நீதிவான் லங்கா ஜயரட்ன இவரை விடுதலை செய்துள்ளார்.

அரசியல் புகலிடம் கோருவோருக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து சான்றிதழ்களை வழங்குவதற்கான செயற்பாட்டு உடன்படிக்கைத் திட்டமொன்றை அகதிகளுக்கான ஐ.நா. உயர் தூதரகம் தயாரித்து முடித்துள்ளதாகவும் இதனால் அரசியல் புகலிடக் கோரிக்கையாளர்கள் செல்லுபடியான விசா இல்லாமலும் நாட்டில் தங்கியிருக்கலாம் என்று பொலிஸாருக்கு குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்திருந்தது.

இந்தச் சந்தேகநபர் அகதிகளுக்கான ஐ.நா. உயர் தூதரகத்தில் பதிவு செய்துள்ளார். அவருக்கு அரசியல் புகலிடக் கோரிக்கையாளருக்கான சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கொரிய மொழிப் பரீட்சையில் 'குதிரை ஓட' முயற்றோர் கைது

கொழும்பு,ஒக்.19

கொரிய மொழிப் பரீட்சையில் வேறு நபர்களுக்காக ஆள் மாறாட்டம் செய்து பரீட்சை எழுத முயன்றதாகக் குற்றம் சுமத்தப்பட்ட ஐந்து சந்தேகநபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தப் பரீட்சையில் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, தேர்ஸ்டன் கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் இந்த ஐந்து சந்தேகநபர்களும் வேறு நபர்களுக்காக பரீட்சை எழுத முற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.(ச)




# உடைக்கப்பட்ட பஸ் தரிப்பிடம் அதே இடத்தில்

குருநகர், ஒக்.19


குருநகர், கடற் கரை வீதியில் வீட்டு உரிமையாளரால் உடைத்து அகற்றப்பட்டிருந்த பஸ் தரிப்பிடம் மீண்டும் அதேஇடத்தில் அகற்றப்பட்டவராலேயே அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பஸ்தரிப்பிடம் கொங்கிறீற் கற்களால் கட்டப்படாமல் நான்கு மரங்களைப் பாவித்துக் கூரைத் தகடுகளுடன் காணப் படுகிறது. இந்த பஸ்தரிப்பிடம் குருநகரைச் சேர்ந்த முக்கியஸ்தரின் ஞாபகார்த்தமாக பல வருடங்களுக்கு முன்னர் குருநகர், கடற்கரை வீதிக்கு அண்மையில் அமைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பஸ்தரிப்பிடத்துக்கு அண்மையில் குடியிருக்கும் தற்போதைய வீட்டு உரிமையாளர் எதுவித அறிவித்தலுமின்றி உடைத்து அகற்றியதை அறிந்த குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு வீட்டு உரிமையாளருக்கு வழங்கிய ஆலோசனையைத் தொடர்ந்து வீட்டு உரிமையாளர் மீண்டும் இந்த பஸ்தரிப்பிடத்தை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-51)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தாயின் மடியில்: 28.06.1925

இறைவன் அடியில்: 19.09.2011

## கணபதிப்பிள்ளை சின்னத்துரை

எங்கள் அன்புத் தெய்வம்
எங்களை விட்டு எங்குதான் சென்றீர்கள்
நாங்கள் தனித்துப் போனோமே
காலனவன் கணப்பொழுதிலே
உங்களை அழைத்துச் சென்று விட்டானே
ஆறமுடியவில்லை அப்பா உங்கள் பிரிவு
நிலையில்லா வாழ்வதும் நிஜமே
நினையா முன் பிரிவதும் கனவே

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உடுவில் வீதி, மானிப்பாய்.

தீபத் திருநாளை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
(ராசி சில்க்ஸ் & நல்லி சில்க்ஸ் இணைந்து வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை)

நல்லி சில்க்ஸ்
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5573

15.10.2011 தொடக்கம் 26.10.2011 வரை
திருமணச் சாறி, கொட்டன்சாறி, சல்வார்கள்,
சல்வார்த் துணிகள் (கொட்டன் சில்க்ஸ்) மற்றும்
அனைத்து உடுபுடைவைகளையும் ஒரே இடத்தில்
மிக மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5571



# இந்தியா கண்ட பிரதமர்களிலேயே மிகப் பலவீனமானவர் மன்மோகன்

## அத்வானி தாக்கு


நாடு இதுவரை கண்ட பிரதமர்களில் மிகவும் பலவீனமான பிரதமர் மன்மோகன் சிங் என்று அத்வானி கூறியுள்ளார்.

பாரதீய ஜனதா மூத்த தலைவர் அத்வானி, 38 நாள் ரத யாத்திரையை பீகாரில் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பித்துள்ளார். நேற்று முன்தினம் அவர் மராட்டிய மாநிலத்தின் இரண்டாவது தலைநகர் என்ற சிறப்புக்குரிய நாக்பூருக்கு ரதயாத்திரை வந்தார்.

நாக்பூர் அருகேயுள்ள சாவோனர் என்ற இடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசினார்.

அதன்போது அவர் கூறுகையில்:

குஜ்ரால், சந்திரசேகர், தேவேகவுடா ஆகியோர் பிரதமர்களாக இருந்து நல்லாட்சியை நடத்தியுள்ளனர். இவ்வளவுக்கும்



அவர்கள் குறைந்த எண்ணிக்கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களையே கொண்டிருந்தனர்.

ஆனால் மன்மோகன்சிங், நாடு இதுவரை கண்ட பிரதமர்களில் மிகவும் பலவீனமான பிரதமராகத் திகழ்கிறார். அவர் எண்.10, என்பத்திலிருந்து (சோனியா காந்தியின் இல்லம்) சமிக்ஞை வராமல் எந்தக் காரியத்தையும் செய்யமாட்டார்.

2009 ஆம்ஆண்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சியைத் தக்க வைத்தது. அப்போது வெளிநாட்டு வங்கிகளில் குவிக்கப்பட்டுள்ள கறுப்பு பணத்தை 100 நாள்களில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மன்மோகன் சிங் உறுதி அளித்தார்.

தற்போது காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவி ஏற்று இரண்டு ஆண்டுகளாகியும், கொடுத்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. கறுப்புப் பணத்தை இங்கே திரும்பக் கொண்டு வந்தால், நாட்டில் 6 லட்சம் கிராமங்கள் குடிதண்ணீர், மின்சாரம், அடிப்படை வசதிகளைப் பெற்று விடும். இவ்வாறு அவர் கூறினார். (வ)

# காங்கிரஸில் இணைவேன் ஹஸாரே திடீர் அறிவிப்பு


ராலேகான் சித்தி, ஒக்.19

நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில் வலுவான லோக்பால் பிரேரணையைக் கொண்டு வந்தால், காங்கிரஸுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக அன்னா ஹசாரே அறிவித்துள்ளார்.

சமூக சேவகர் அன்னா ஹசாரேவுக்கு பிரதமர் மன்மோகன் சிங் அண்மையில் ஒரு கடிதம் எழுதி இருந்தார். அதில், வலுவான லோக்பால் பிரேரணையைக் கொண்டுவர உறுதி பூண்டிருப்பதாகக் கூறி இருந்தார்.

இந்தநிலையில், மராட்டிய மாநிலத்தில் தனது சொந்த ஊரான ராலேகான் சித்தியில் அன்னா ஹசாரே கடந்த ஞாயிற்றுக் கிழமை காலவரையற்ற மௌன விரதத்தை ஆரம்பித்தார். அதற்கு முன்பு, ஒரு தனியார் தொலைக் காட்சிக்கு அவர் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில்:



பிரதமர் எழுதிய கடிதத்தால், வலுவான லோக்பால் பிரேரணை கொண்டுவரப்படும் என்ற ஊகம், என்னுள் எழுந்துள்ளது. நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில், வலுவான லோக்பால் பிரேரணையைக் கொண்டு வருவதுடன், தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான வாக்குறுதிகளையும் நிறைவேற்றினால், நான் ஏன் காங்கிரஸை எதிர்க்கப்போகிறேன்? இன்னும் சொல்லப்போனால், காங்கிரஸுடன் இணைந்து செயற்படுவேன். - என்றார். (வ)



அரசு முறைப் பயணமாக, இந்தியாவுக்கு வந்துள்ள பிரிட்டனின் ராணுவ துணைத் தளபதி சர் நிகோலஸ் ஹங்ட்டன், டில்லி இந்தியா நுழைவாயிலில் உள்ள மறைந்த ராணுவ வீரர் களின் நினைவிடமான அமர் ஜவான் ஜோதியில், அஞ்சலி செலுத்தினார்.

# எடியூரப்பாவின் பிணை மனு விசாரணை நாளை

பெங்களூர், ஒக்.19

கர்நாடக முன்னாள் முதல்வர் எடியூரப்பா தாக்கல் செய்த பிணை மனு மீதான விசாரணை நாளை வியாழக்கிழமை ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

நிலமோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட எடியூரப்பா உடல் நலக்குறைவு காரணமாக தற்போது நீதிமன்றக் காவலின் கீழ் மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் தன்னை இடைக்கால பிணையில் விடுவிக்கக் கோரி எடியூரப்பா தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை கர்நாடக உயர்நீதிமன்றம் நாளை வியாழக் கிழமைக்கு ஒத்தி வைத்துள்ளது.

# கனிமொழியின் பிணைமனு ஒக். 22இல் விசாரணைக்கு

டில்லி, ஒக்.19



2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கனி மொழி தாக்கல் செய்த பிணை மனு குறித்த விசாரணை எதிர்வரும் 22ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சர் ராஜா, தி.மு.க. மாநிலங்களை உறுப்பினர் கனிமொழி உட்பட 17 பேர் சி.பி.ஐ. பொலிஸாரால் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் உள்ளனர்.

பிணை வழங்கக் கோரி பலமுறை மனுத்தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் குற்றச்சாட்டு பதிவுசெய்த பிறகே பிணை மனு விசாரணைக்கு ஏற்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதுபோல் சினியுக் நிறுவுனர் கரீம்மொரானி, ரிலையன்ஸ் அதிகாரி சுரேந் திரபிரபா ஆகியோருடைய பிணை மனுக்களின் விசாரணை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (வ)

# இடிந்தகரையில் மீண்டும் உண்ணாவிரதம்

கூடங்குளம் அணுமின்நிலையத்தை எதிர்த்து நேற்று மீண்டும் இடிந்த கரையில் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சித் தேர்தலையொட்டி நேற்று முன்தினம் ஒருநாள் போராட் டத்தை நிறுத்தி வைத்த போராட்டக் குழுவினர் நேற்றுக் காலை உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். (வ)

# பெண் கிடைக்காமல் திண்டாடும் ஆண்கள்

## குஜராத்தில் அவலம்

பெண் சிசுக்கொலையின் தாக்கத்தால், இந்தியாவில் ஆண்-பெண் விகிதாசாரம் பாதிக்கப்பட்டு வருவது குஜராத் மாநிலத்தில் எதிரொலித்துள்ளது. அங்குள்ள ஆண்கள் பெண் கிடைக்காமல் தவித்து வருகின்றனராம். பெண் கிடைக்காமல் 300 இற்கும் மேற்பட்ட ஆண்கள் தவித்து வருகின்றனர்.

தென்னிந்தியாவில் ஆண் - பெண் விகிதாசாரம் அதிகரித்து சமநிலையை எட்டியுள்ள நிலையில், வட இந்தியாவின் பல மாநிலங்களில் இது தலைகீழாக உள்ளது. கடந்த 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் மக்கள் தொகையில் 1000 ஆண்களுக்கு 933 பெண்கள் என இருந்தது.

ஆனால், 2011 ஆம் ஆண்டு எடுத்த கணக்கெடுப்பின்படி அது மேலும் குறைந்து 1000 ஆண்களுக்கு 914 பெண்கள் என்ற நிலையை எட்டியுள்ளது. இந்தியாவில் கேரளா, மணிப்பூர் உள்ளிட்ட சில மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது.

இந்த நிலையில், குஜராத் மாநிலத்தில் சியானி என்ற கிராமத்தில் திருமணம் செய்ய பெண்கள் கிடைக்காமல் ஆண்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். விவசாய கிராமமான இந்தப் பகுதியில் திருமணம் செய்து கொள்ள பல ஆண்டுகளாகப் பெண் பார்த்தும், கிடைக்காமல் தவிக்கும் ஆண்கள் அதிகமானோர்.

இதில் 24 இற்கும் மேற்பட்ட ஆண்கள், பெண் துணை இல்லாமல் ஒரே இடத்தில் வசித்து வருகின்றனர். சியானி கிராமத்தில் இதேபோல திருமணம் செய்யாமல், பெண் கிடைக்கக் காத்திருந்து 35 வயதைக் கடந்தவர்கள் 350 இற்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர். பெண் கிடைக்காமல் துக்கப்பட்டு இருந்த இளைஞர்கள் தற்போது ஒரு கூட்டணி அமைத்து ஒரு குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர்.

படிப்பறிவு மற்றும் பொருளாதாரக் குறைவு காரணமாக, இருக்கின்ற சில பெண்களும் இந்தக் கிராம இளைஞர்களை மணக்க மறுக்கின்றனராம். (வ)

# சவூதிக்கு ஹஜ்புனித யாத்திரை சென்ற 19 இந்தியர்கள் மரணம்

இந்தியாவிலிருந்து ஹஜ் புனித பயணமாக சவூதி அரேபியாவுக்குச் சென்றுள்ளவர்களில் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

உலகம் முழுவதும் இருந்து முஸ்லிம்கள் ஹஜ் புனித பயணமாக சவூதி அரேபியாவுக்கு சென்றுள்ளனர். இந்தியாவில் இருந்து 223 விமானங்களில் 61,847 பேர் அங்கு சென்றுள்ளனர். அவர்களில் 27,487 பேர் மக்காவுக்கும், 34,345 பேர் மதீனாவுக்கும் புனித யாத்திரையாக சென்றுள்ளனர்.

இவர்களில் 19 பேர் இறந்து விட்டனர். இவர்களில் 15 பேர் ஹஜ் குழு சார்பிலும், 4 பேர் தனியார் மூலமாகவும் வந்தவர்கள். இந்தத் தகவலை ஜெட்டாவில் உள்ள இந்தியத் தூதர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் எப்படி இறந்தார்கள் என்ற தகவல் வெளியிடப்படவில்லை. தற்போது டில்லியில் இருந்து 20,268 பேரும், லக்னோவில் இருந்து 10,128 பேரும், ஹைதராபாத்தில் இருந்து 6,977 பேரும், கோழிக்கோட்டில் இருந்து 8,400 பேரும் ஹஜ் புனித பயணத்திற்காக சவூதி அரேபியா சென்றுள்ளனர். (வ)

# கன்னியாகுமரிக்கும் வந்தது போஸ்கோவின் வலது கரம்

களியாக்கவிளை, ஒக்.19

உலகம் முழுவதும் திருப் பயணம் மேற்கொண்டு வரும் புனித ஜான் போஸ்கோவின் வலது கரம் அடங்கிய பேழை கேரளா வழியாகக் கன்னியாகுமரியை வந்தடைந்துள்ளது.

இத்தாலியைச் சேர்ந்தவர் புனித ஜான்போஸ்கோ. கிறிஸ்தவ பாதிரியாரான இவர், சலேசியஸ் சபையை தோற்று வித்து நற்பணிகள் செய்தவர். 1883 ஆம் ஆண்டு தனது 72 ஆவது வயதில் இறந்த அவரது உடலில் இருந்து வலதுகரம் மட்டும் தனியே எடுக்கப்பட்டு பேழையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ஜான்போஸ்கோவின் 200ஆவது பிறந்த நாளையும், சலேசியஸ் சபை தோற்றுவிக்கப்பட்டு, 150 ஆவது ஆண்டையும் நினைவு கூறும் வகையில் ஜான்போஸ் கோவின் வலதுகரம் அடங்கிய பேழை உலகம் முழுவதும் திருப்பயணமாக கொண்டு செல்லப்பட்டு வருகிறது.

கடந்த 2009 ஜனவரி மாதம் ஆரம்பித்த திருப்பயணம் 130 நாடுகள் வழியாகக் கேரளாவுக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கிருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு குமரி மாவட்டத்தை அடைந்தது. தத்ரூபமாக வடிவமைக்கப்பட்ட அவரது உருவத்துடன் அவரது வலது கை பொருத்தப்பட்டு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

பேழை பயணத்திற்கு களியாக்கவிளை அடுத்த படந்தாலுமூட்டில் தக்கலை உள்ளிட்ட மறை மாவட்டங்கள் மற்றும் பங்குகளைச் சேர்ந்தவர்கள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து திருச்சியை நோக்கிக் கொண்டு செல்லப்பட்டது. (வ)



# TCT

## பல்பொருள் விற்பனை நிலையத்தில் தீபாவளியை முன்னிட்டு 30.10.2011 வரை

## 50 அத்தியாவசியப் பொருள்களுக்கான ஆச்சரியமூட்டும் விலைக்கழிவு

| பொருள்கள் | குறித்த விலை | கழிவு விலை | சேமிப்பு |
|---|---|---|---|
| Anchor-Full Cream-1Kg | 647/= | 615/= | 32/= |
| Anchor-Full Cream-400g | 264/= | 252/= | 12/= |
| Anchor-Instant-Full Cream-400g | 264/= | 260/= | 4/= |
| Sunlight-With Lemon-120g | 30/= | 28/= | 2/= |
| Sunlight-Lime-120g | 30/= | 28/= | 2/= |
| Noodles-Prima-Special-400g | 150/= | 135/= | 15/= |
| Noodles-Maggi-Curry-85g | 39/= | 37/= | 2/= |
| Coconut Milk Powder-Maggi-300g | 260/= | 250/= | 10/= |
| Ceylonta-Tea-400g | 315/= | 295/= | 20/= |
| Dish Wash-Vim-Real Lime-500ml | 120/= | 110/= | 10/= |
| Surf Excel-1Kg | 275/= | 260/= | 15/= |
| Surf Excel-3kg | 750/= | 720/= | 30/= |
| Surf Excel-Matic-960g | 299/= | 285/= | 14/= |
| Astra-Margarine-1Kg | 475/= | 465/= | 10/= |
| Astra-Margarine-500g | 250/= | 240/= | 10/= |
| Astra-Margarine-250g | 145/= | 135/= | 10/= |
| Milo Milk-200ml | 35/= | 33/= | 2/= |
| Washing Powder-Diva-1Kg | 115/= | 106/= | 9/= |
| Cologne-Johnsons-Powder Mist-125ml | 225/= | 199/= | 26/= |
| Cologne-Johnsons-Morning dew-125ml | 225/= | 199/= | 26/= |
| Cologne-Johnsons-Heaven-125ml | 225/= | 199/= | 26/= |
| Cologne-Johnsons-Bounce-125ml | 225/= | 199/= | 26/= |
| Baby Soap-Cheramy-75g×5 | 145/= | 130/= | 15/= |
| Rice-Basmathi-Turkey-5Kg | 1350/= | 900/= | 450/= |
| Oval Tin-220g(Pkt) | 195/= | 170/= | 25/= |
| Oval Tin-330g(Pkt) | 285/= | 250/= | 35/= |
| Cheese-Happy Cow-120g | 224/= | 210/= | 14/= |
| Nestomalt-400g(Pkt) | 205/= | 199/= | 6/= |
| Layer Cake-Chocolate- Tiara -310g | 180/= | 170/= | 10/= |
| Layer Cake-Vanilla- Tiara -310g | 180/= | 170/= | 10/= |
| Butter Sponge Cake- Tiara -220g | 130/= | 120/= | 10/= |
| Layer Cake-Chocolate-Tiara-480g | 280/= | 265/= | 15/= |
| Layer Cake-Vanilla- Tiara-480g | 270/= | 255/= | 15/= |
| Maliban-Biscuits- Assortment Tin-500g | 385/= | 346.50/= | 38.50/= |
| Maliban-Biscuits -Gift Selection-400g | 200/= | 180/= | 20/= |
| Maliban-Biscuits -Krisco-170g | 110/= | 99/= | 11/= |
| Maliban-Biscuits -Cheesebits-170g | 120/= | 108/= | 12/= |
| Maliban-Biscuits -Teatime-200g | 100/= | 90/= | 10/= |
| Maliban-Biscuits -Cream Cracker-190g | 70/= | 63/= | 7/= |
| Munchee -Biscuits- Gift Assortment-400g | 220/= | 198/= | 22/= |
| Munchee -Biscuits -Onion Biscuits-180g | 120/= | 108/= | 12= |
| Munchee -Biscuits -Cheese Buttons-180g | 125/= | 112.50/ | 12.50/= |
| Munchee -Biscuits -Snack Crackers-260g | 230/= | 207/= | 23/= |
| Munchee -Biscuits -Chocolate Marie-400g | 130/= | 117/= | 13/= |
| Luckyland Biscuits-Bourbon-200g | 80/= | 72/= | 8/= |
| Luckyland Biscuits-Batter Carole-400g | 125/= | 112.50/= | 12.50/= |
| Luckyland Biscuits-Choc&Batter Rings-400g | 125/= | 112.50/= | 12.50/= |
| Promises-Kandos-240g | 375/= | 360/= | 15/= |
| Check Mate-Edna-200g | 350/= | 330/= | 20/= |
| Chunky Choc Trio-Ritzbury-200g | 130/= | 124/= | 6/= |

★ வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அழகுசாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் , சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள்

★ தீபாவளியினை முன்னிட்டு சிறுவர்கள் முதல் பெரியவர்களுக்கான நவநாகரிகமான புடைவை வகைகளையும்,

★ இலங்கையில் பிரசித்திபெற்ற தம்ரோ, ஆப்பிக்கோ தளபாட வகைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## TCT பல்பொருள் விற்பனை நிலையம்

527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 7451895, 021 222 8025

## தொடர்ச்சியாக விலைக்கழிவில் விற்பனை செய்யப்படும் பொருள்கள் வருமாறு

| பொருள்கள் | குறித்த விலை | கழிவு விலை | சேமிப்பு |
|---|---|---|---|
| Vegetable Oil-Fortune-3L | 990/= | 830/= | 160/= |
| Vegetable Oil-Fortune-2L | 825/= | 720/= | 105/= |
| Vegetable Oil-Fortune-1L | 420/= | 370/= | 50/= |
| Vegetable Oil-Fortune-500ml | 225/= | 210/= | 15/= |
| Vegetable Oil-Turkey-3L | 1000/= | 890/= | 110/= |
| Vegetable Oil-Turkey-1L | 425/= | 400/= | 25/= |
| Vegetable Oil-Turkey-500ml | 225/= | 210/= | 15/= |
| Vegetable Oil-Tastyy-1L | 382/= | 340/= | 42/= |
| Vegetable Oil-Tastyy-500ml | 268/= | 200/= | 68/= |
| Sun Flower Oil-Turkey-3L | 1790/= | 1750/= | 40/= |
| Sun Flower Oil-Turkey-2L | 1195/= | 1160/= | 35/= |
| Sun Flower Oil-Turkey-1L | 615/= | 550/= | 65/= |
| Sun Flower Oil-Turkey-500ml | 345/= | 310/= | 35/= |
| Sun Flower Oil-Fortune-2L | 890/= | 850/= | 40/= |
| Sun Flower Oil-Fortune-1L | 450/= | 410/= | 40/= |
| Sun Flower Oil-Fortune-500ml | 240/= | 230/= | 10/= |
| Sun Flower Oil-Tastyy-2L | 1094/= | 1000/= | 94/= |
| Sun Flower Oil-Tastyy-1L | 556/= | 500/= | 56/= |
| Sun Flower Oil-Tastyy-500ml | 281/= | 260/= | 21/= |
| Enfakid-A+ -Vanilla-850g (3Years&Above) | 1650/= | 1550/= | 100/= |
| Enfapro-A+-900g(6-18 Months) | 1910/= | 1800/= | 110/= |
| Enfalac A+-900g(Below-12Months) | 1820/= | 1710/= | 110/= |
| Enfagrow-A+-Vanilla-850g(1-3Years) | 1875/= | 1750/= | 125/= |
| Enfalac A+-Below 12 Months-400g | 940/= | 880/= | 60/= |
| Enfakid-A+-Vanilla (3Years And Above)-400g | 840/= | 790/= | 50/= |
| Enfa mama A+-Vanila-400g | 980/= | 900/= | 80/= |
| Enfagrow-A+-Vanilla-400g (Stage 03*1-3Years) | 900/= | 840/= | 60/= |
| Enfapro-A+-2-400g | 1020/= | 950/= | 70/= |
| Enfamil O-Lac 400g (From Birth Onwards) | 850/= | 800/= | 50/= |
| Sma Gold-(iii)-400g | 925/= | 880/= | 45/= |
| Sma Gold-(ii)-400g | 975/= | 910/= | 65/= |
| Sma Gold-(i)-400g | 975/= | 870/= | 105/= |
| Nan-(i)-400g | 970/= | 910/= | 60/= |
| Nan-(ii)-400g | 955/= | 900/= | 55/= |
| Nan-(iii)-400g | 930/= | 890/= | 40/= |
| Cow & Gate-Blue(ii)-400g(Tin) | 910/= | 860/= | 50/= |
| Cow & Gate-Step Up(iii)-400g(Tin) | 890/= | 850/= | 40/= |
| Cow & Gate-Nutricia-(iv)-400g-(Tin) | 890/= | 830/= | 60/= |
| Cow & Gate-Premium-400g(i)Tin | 850/= | 820/= | 30/= |
| Anchor-Pediapro-400g(3year) | 450/= | 440/= | 10/= |
| Anchor-Pediapro-400g(1-3years) | 450/= | 440/= | 10/= |
| Cerelac-Mango-300g | 340/= | 335/= | 5/= |
| Cerelac-Apple & Wheat-375g | 320/= | 315/= | 5/= |
| Cerelac-Apple+Cherry & Wheat-300g | 320/= | 315/= | 5/= |
| Cerelac-Dhal+Mixed Vegetables-300g | 330/= | 325/= | 5/= |
| Cerelac-Mixed Fruit-300g | 360/= | 355/= | 5/= |
| Cerelac-Red Rice-375g | 320/= | 315/= | 5/= |
| Cerelac-Rice-375g | 320/= | 315/= | 5/= |
| Cerelac-Vegetable & Wheat-375g | 320/= | 315/= | 5/= |
| Lactogen-(1)-350g | 350/= | 345/= | 5/= |
| Lactogen-(2)-350g | 325/= | 320/= | 5/= |
| Lactogen-(3)-350g | 310/= | 305/= | 5/= |
| Neslac Excella-Nestle-1+(1-3Years)-400g | 500/= | 490/= | 10/= |
| Sustagen-Chocolate-400g | 1100/= | 1020/= | 80/= |
| Sustagen-Vanila-400g | 1100/= | 1020/= | 80/= |
| Nespray-Full Cream-(Everyday-Pkt)1Kg | 565/= | 555/= | 10/= |
| Nespray-Full Cream-Enriched1Kg(Pkt) | 647/= | 635/= | 12/= |
| Nespray-Full Cream-400g(Box) | 264/= | 255/= | 9/= |
| Nespray-Full Cream-(Everyday)400g(Pkt) | 254/= | 250/= | 4/= |
| Lakspray-Full Cream-1Kg(Pkt) | 635/= | 620/= | 15/= |
| Lakspray-Full Cream-1Kg(Box) | 640/= | 625/= | 15/= |
| Lakspray-Full Cream-400g(Pkt) | 260/= | 255/= | 5/= |
| Lakspray-Full Cream-400g(Box) | 260/= | 255/= | 5/= |
| Milgro-Instand-Full Cream-1Kg(Pkt) | 629/= | 615/= | 14/= |
| Milgro-Instant-Full Cream-400g | 262/= | 255/= | 7/= |
| Milgro-Instant-Full Cream-(Box)1Kg | 644/= | 635/= | 9/= |
| Maliban Kiri-Full Cream-1Kg(Pkt) | 639/= | 625/= | 14/= |
| Maliban Kiri-Full Cream-400g(Box) | 264/= | 260/= | 4/= |
| Maliban Kiri-Full Cream-400g(Pkt) | 260/= | 255/= | 5/= |
| Fair&Lovely-M.Vitamin-50g | 200/= | 190/= | 10/= |
| Roasted Red Rice Flour-Maharaja-1Kg | 105/= | 80/= | 25/= |
| Tooth Paste-Clogard-120g (2:Get 1Free) | 148/= | 74/= | 74/= |
| Tooth Paste-Clogard-70g(2:Get 1Free) | 102/= | 51/= | 51/= |
| Tooth Paste-Clogard-40g (2:Get 1Free) | 66/= | 33/= | 33/= |
| Eva-Regular-2Pcs | 186/= | 165/= | 21/= |
| Tea-Jones-400g+100g | 352/= | 277/= | 75/= |
| Tea-Jones-200g+50g | 188/= | 148/= | 40/= |
| Tea-Jones-100g+50g | 115/= | 75/= | 40/= |
| Tea-Jones-50g+50g+50g | 120/= | 80/= | 40/= |

எமது நிறுவனத்தில் பொருள்களை கொள்வனவு செய்வதன் மூலம் நீங்களும் அறப்பணியாளர் ஆகுங்கள்.

இத்துடன் 2 மாதத்தில் ரூபா 20,000/- க்கு பொருள்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ரூபா 500/- பெறுமதியான அன்பளிப்பு வவுச்சர் வழங்கும் நடைமுறை தொடர்ச்சியாக இருக்கும்.

# ஆப்கானிஸ்தான் எல்லைகளில் அமெரிக்கப் படைகள் குவிப்பு

## பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை



இஸ்லாமாபாத்,ஒக்.19

ஆப்கானிஸ்தானின் வஜீரிஸ்தான் எல்லைப்பகுதிகளில் அமெரிக்கப் படைகள் குவிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர், அஹ்மட் முக்தார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு வஜீரிஸ்தான் பகுதியில் குண்டு வீச்சை மேலும் அதிகரிப்பதன் மூலம், ஹக்கானிக் குழுவை ஒழித்துக் கட்ட முடியும் என அமெரிக்கா கூறி வந்தது. ஆனால், பாகிஸ்தான் அதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தது. சமீபத்தில் இருதரப்புக்கும் ஏற்பட்ட ஹக்கானிக் குழு தொடர்பான விவகாரத்தில், ஹக்கானி குழு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது எனப் பாகிஸ்தான் திட்டவட்டமாகத் தெரிவித்தது.

இதனையடுத்து கடந்த செப்ரெம்பர் 29ஆம் திகதி வாஷிங்டனில் நடந்த தேசிய பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில், அதிபர் ஒபாமா, வடக்கு வஜீரிஸ்தானில் தாக்குதல் நடத்துவதன் மூலம், ஹக்கானி குழுவை ஒழித்தே தீர வேண்டும் என உறுதியாகத் தெரிவித்தார்.

இந்நிலையில்தான், கடந்த 15 மற்றும் 16ஆம் திகதிகளில், வடக்கு வஜீரிஸ்தான் எல்லைப் பகுதி முழுவதும், அமெரிக்கப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வடக்கு வஜீரிஸ்தான் மற்றும் ஆப்கனின் கோஸ்ட் மாகாணத்துக்கு இடையிலான அனைத்துப் போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.தொடர்ந்து அமெரிக்க ராணுவ வீரர்கள், வீடு வீடாகத் தேடுதல் வேட்டையிலும் ஈடுபட் டுள்ளனர்.

அமெரிக்கப் படைகள் எல்லையில் குவிக்கப்பட்டுள்ளதை பாகிஸ்தான் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்த நிலையிலேயே பாகிஸ்தானின் பொறுமையை அமெரிக்கா சோதிக்கக் கூடாது என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் அஹ்மட் முக்தார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாகிஸ்தானில் அமெரிக்கப் படையினர் மேற்கொண்டு வருகின்ற தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இருப்பதுடன். கடந்த 3 தினங்களில் மாத்திரம் சுமார் 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள தாக தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் ஆப்கானிஸ்தானை ஒட்டியுள்ள பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில் அமெரிக்கா தனது படைகளை குவித்து வருகிறது.

அமெரிக்கா தங்களது பொறுமையைச் சோதிப்பதாகத் தெரிவித்துள்ள பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர், அமெரிக்கா வரம்பு மீறி நடந்து கொள்ளக் கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ந)

# தினமும் 10 கடிதங்களைப் படித்து மக்கள் குறை அறிகிறார் ஒபாமா

வாஷிங்டன்,ஒக்.19



அமெரிக்க அதிபர் ஒபாமா மக்கள் அனுப்பும் 10 கடிதங்களைத் தினமும் படித்து மக்கள் குறை அறிவதை வழக்கமாக்கியுள்ளார். சில கடிதங்களுக்கு மறக்காமல் பதில் கடிதமும் போடுகின்றார்.

2008ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றிபெற்று முதல் கறுப்பின அதிபராகப் பதவியேற்ற பராக் ஒபாமா அடுத்த ஆண்டு அதிபர் தேர்தலுக்கும் தயாராகி வருகிறார்.

இந்தநிலையில் நாடு முழுவதும் இருந்து அதிபருக்கு தினமும் ஆயிரக்கணக்கான கடிதங்கள், மின்னஞ்சல்களும் வருகின்றன. இவற்றைப் படிப்பதற்கென ஒபாமா தினமும் நேரம் ஒதுக்குகிறார். இதன் போது கஷ்டத்தில் இருப்பதாகக் கடிதம் எழுதிய சிலருக்கு காசோலையும் அனுப்பி வைத்திருக்கிறார்.

நேரில் சந்திக்கும்போதுகூட மக் கள் தங்கள் எண்ணங்களை அதிபருடன் பகிர்ந்து கொள்ள முடிவதில்லை. இந்த நிலையில் கடிதங்கள் மூலமாக மக்களின் எண்ணத்தை அதிபர் நேரடியாகப் புரிந்துகொள்கிறார் என்று அமெரிக்க இதழ்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றன. (ந)

# பஸ் கவிழ்ந்ததில் சீனாவில் 10 பேர் சாவு

பெய்ஜிங்,ஒக்.17

சீனாவில் சுற்றுலாப் பயணிகள் சென்ற பஸ் கவிழ்ந்து 10 பேர் உயிரிழந்தனர், 33 பேர் காயமடைந்தனர்.

ஹுனான் மாகாணத்தில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இவ் விபத்தில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ந)




பெல்ஜியம் தலைநகர் பிரசெல்ஸில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் ஜரோப்பிய கமிஷன் தலைவர் ஜோஸ் மானுவல் பார்ரோசோ(வலது) ஜரோப்பிய கவுன்ஷில் தலைவர் வான் ரெளம்ப கலத்துகொண்டு பேசினர்.

# பலஸ்தீனம், இஸ்ரேலுடன் சர்வதேசம் தனித்தனிப் பேச்சு

ஜெருசலேம், ஒக்.19

பலஸ்தீன் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுடன் சர்வதேச பேச்சுவார்த்தையாளர்கள் தனித்தனி பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஜெருசலேமில் இந்தச் சந்திப்புகள் இடம் பெறவுள்ளன.

இரு தரப்பையும் மீண்டும் நேரடிப் பேச்சில் கலந்து கொள்ளச் செய்யும் முயற்சியாக ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பேச்சையை நடத்தவுள்ளது.

எனினும் தமது இலக்கினை எட்டுவதில் சர்வதேச பேச்சுவார்த்தையாளர் சிரமங்களை எதிர்நோக்கலாம் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பலஸ்தீனிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இஸ்ரேல் யூத குடியேற்றங்களை நிர்மாணிக்கின்றமை காரணமாக இருதரப்பு சமாதானப் பேச்சு முறிவடைந்திருந்தன.

இதனையடுத்து இரு தரப்பு பேச்சுக் களைகளை மீள ஆரம்பிக்கும் முயற்சிகளை ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்கா ஆகியன மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள தனித் தனிச் சந்திப்புக்களில் மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான பிரதிநிதி டெனி பிளேயர் கலந்து கொள்ளவுள்ளார். (ந)

# கடாபிக்கு புகலிடம் வழங்காதீர்கள்

## ஆபிரிக்க நாடுகளுக்கு பிரிட்டன் வலியுறுத்து

திரிபோலி, ஒக்.19

தலைமறைவாகியுள்ள லிபியத் தலைவர் மும்மர் கடாபிக்கு ஆபிரிக்க நாடுகள் புகலிடம் வழங்கக் கூடாதென பிரிட்டன் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ள கடாபிக்கு எதிரான போரில் லிபியாவின் அயல் நாடுகளுக்கும் பொறுப்பு உள்ளதாக பிரிட்டன் பாதுகாப்புச் செயலாளர் வில்லியம் ஹேக் கூறியுள் ளார்.

தமது நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கடாபி இருப்பதைக் கண்டறிந்தால் அந்த நாட்டு மக்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் அவரை ஒப் படைக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி தலை மறைவாகியுள்ள கடாபியை கண்டறிவதற்குத் தேவையான உதவிகளைத் தொடர்ந் தும் தமது நாடு வழங்கும் எனவும் லிபிய தலைநகர் திபோலியில் வைத்து வில்லியம் ஹேக் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# எவருக்கும் பெரும்பான்மை இல்லை லைபீரியாவில் மீண்டும் தேர்தல்

மான்ரோவியா, ஒக்.19

மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரிய அதிபர் தேர்தலில் வேட்பாளர் எவருக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் 2 ஆம் சுற்றுத் தேர்தலை நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

லைபீரிய அதிபர் தேர்தல் ஒக்ரோபர் 11ஆம் திகதி நடைபெற்றது. இதில் தற்போதைய அதிபரும், ஐக்கிய கட்சியைச் சேர்ந்தவருமான எலென் ஜான்சன் சர்லீப்பும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டியூப் மேனும் போட்டியிடுகின்றனர்.

நடந்து முடித்த தேர்தலில் பதிவான வாக்குகள் ஞாயிற்றுக்கிழமை எண்ணப்பட்டு, முடிவு அறிவிக் கப்பட்டது. இதில் எலென் ஜான்சன் சர்லீப் 44 சதவீத வாக்குகளும், வின்சென்ட் டியூப் மேன் 31 சதவீத வாக்குகளையும் பெற்றனர். தேர்தல் விதிப்படி இந்தத் தேர்தலில் எவருக்கும் 50 சதவீதத்துக்கு மேல் பெரும்பான்மை வாக்கு கிடைக்காததால் 2ஆம் சுற்றுத் தேர்தலை நடத்த லைபீரியா திட்டமிடப்பட்டுள்ளது. (ந)

# தள்ளாத வயதிலும் மரதன் ஓடி தாத்தா சாதனை




பிரிட்டனில் 100 வயதுத் தாத்தா மரதன் ஓடி சாதனை படைத்துள்ளதுடன், உலகின் பழைமையான மரதன் ஓட்ட வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

1911 ஆம் ஆண்டு பிறந்த 100 வயதை அடைந்த பஜாசிக் என்பவரே இந்தப் பெருமையைப் பெற்றுள்ளார்.

கிழக்கு லண்டனைச் சேர்ந்த குறித்த நபர் 100 ஆவது வயதிலும் மரதன் ஓட்டம் ஓடி நிறைவு செய்ததன் மூலம் அவர் உலகின் பழைமையான மரதன் ஓட்ட வீரராக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

எப்போதும் சந்தோசமாக இருப்பது தான் தனது வெற்றிக்கு காரணம் என அவர் கூறுகிறார். (ந)

# முக்கிய ஆவணங்களை குப்பையில் வீசிய அமைச்சர்

## பிரிட்டனில் பரபரப்புச் சம்பவம்

லண்டன்,ஒக்.19

அல்குவைதா தீவிரவாதிகள் மற்றும் உளவுத்துறைத் தகவல்கள் அடங்கிய ரகசிய ஆவணங்களைப் பிரிட்டன் அமைச்சர் குப்பைத் தொட்டியில் வீசிய சம்பவம் பிரிட்டனில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கேபனட்டில் அமைச்சராக இருக்கும் ஒலிவர் லெட்வின் பாகிஸ்தானுடன் அல்குவைதா தீவிரவாதிகளின் தொடர்பு, பிரிட்டன் உள்நாட்டுப் பாதுகாப்புத் தொடர்பான பிரதமர் தலைமையிலான முக்கிய ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து கொள்வதுடன் உளவுத்துறை ரகசியங்கள் அடங்கிய முக்கிய ஆவணங்களையும் எடுத்துச் செல்வார்.

அவ்வாதே கடந்த மாதம் 7ஆம் திகதியும் முக்கிய கூட்டம் ஒன்று பிரதமர் அலுவலகத்தில் நடந்தது. அதில் கலந்து கொண்ட ஒலிவர் கூட்டம் முடிந்ததும் எடுத்துச் சென்ற ஆவணங் களை லண்டன் செயின்ட் ஜேம்ஸ் பூங்கா அருகே உள்ள குப்பைத் தொட்டியில் வீசி யுள்ளார்.

இது கண்காணிப் புக் கமராவில் பதிவானது. இது போன்று2010ஆம் ஆண்டு ஜூலை 27ஆம் திகதி முதல் கடந்த 30ஆம் திகதி வரையில் ஐந்துமுறை இவ்வாறு ரகசிய ஆவணங்களை அவர் அந்தக் குப்பைத் தொட்டியில் வீசி சென்றது அம்பலமானது.

இது பிரதமர் கமரூனுக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ள அதேவேளை நூற்றுக்கணக்கான ரகசிய ஆவணங்கள் குப்பையில் வீசப்பட்டதால் உள்நாட்டுப் பாதுகாப்பு கேள்விக் குறியாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. (ந)

# வெற்றிக் கிண்ணம் ஜெகமீட்பருக்கு
# போராடித் தோற்றது ஊரெழு றோயல்

யாழ்ப்பாணம், ஒக்.19

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் போட்டிக்கு உற்சாகத்துடன் களம் புகுந்தமையால் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

ஆட்ட முடிவில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் ஆட்ட நாயகனாக வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.ஜீவகுமார் தெரிவுசெய்யப்பட்டார்.


சிறந்த கோல் காப்பாளராக உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே.விமலேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர் ஆட்ட நாயகனாக யாழ்ப்பாணம் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தர்மகுலநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றி பெற்ற வலைப்பாடு ஜெகமீட்பர் அணிக்கு 10 ஆயிரம் ரூபாவும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டன.

இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கு 7 ஆயிரம் ரூபாவும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது.

இறுதியாட்டத்துக்குப் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ஜோய் பியசீலன், கரைச்சிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கே.குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-23)



முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் ஐ.நா.அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையுடன் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கும் இணைந்து முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடத்திய பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியகள், விளையாட் டுக் கழகங்களின் உதைபந்தாட்டப் பயிற்றுநர்கள் ஆகியோருக்கான பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்கள். (த-23)

# சதுரங்க இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்ப்பாணத்தில் டிசெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் சர்வதேச சதுரங்கப் போட்டியில் பங்கு கொள்வதற்கான வீரர்கள், வீராங்கனைகளைத் தெரிவு செய்வதற்காகச் சதுரங்கச் சங்கம் நடத்திய சதுரங்க இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள், வீராங்கனைகள் பெயர் விவரங்கள் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

நாகராசா வர்மன் - (யாழ். இந்துக்கல்லூரி), ராஜசேகர் மதுஷன் - (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ரகுநாதன் மகிந்தன் (மகாஜனக்கல்லூரி), சிவலிங்கம் அனந்தசயன் (யாழ். இந்துக்கல்லூரி), ஜெயராஜா கபிலானந் - (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), அலோசியஸ் ஜஸ்ரின் - யாழ். இந்துக் கல்லூரி)

**பெண்கள் பிரிவு**

பார்த்தீபன் பிரவினா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), தேவதாசன் உமையாழினி (அருணோதயக் கல்லூரி), மகா லிங்கம் கௌதமி ( வட இந்து மகளிர் கல்லூரி), கோவிந்த ராஜா தீபனா (வேம்படி மகளிர் கல்லூரி), சிறி உதயமோகன் வேதிகா (அருணோதயக் கல்லூரி), இராமச் சந் திரன் பிரபாலினி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி). (த-23)

# மன்னார் வீரர்கள் சாதனை

மன்னார், ஒக்.19

2011 ஆம் ஆண்டுக்கான வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டி கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்ட மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி மாணவர்களான எஸ்.சுலக்சன், எஸ்.அனுசன் ஆகியோர் இரு பதக்கங்களையும், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் எஸ்.சுயந் ஒரு பதக்கத்தையும், மன்னார் தோட்டவெளி யோசப்வாஸ் நகர் பாடசாலை மாணவன் எ.மைக்கல் ராஜ் ஒரு பதக்கத்தையும், தோட்டவெளி யோசப்வாஸ் நகர் முன்பள்ளி சிறுவன் போல் ஜெல்ரன் ராஜ் ஒரு பதக்கத்தையும் பெற்று மன்னார் மாவட்டத்துக்கு பெருமையை சேர்த்துள்ளனர்.

அத்துடன் 6 வயது முதல், முதல் கராத்தே போட்டியில் மாகாணத்தில் வெற்றி பெற்ற சிறுவன் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் ஜெ.கே.எம்.ஒ கழகத்தின் மன்னார் மாவட்ட தலைமை ஆசிரியர் சென்சி எம்.அன்ரனி இன்பராஜ் என்பவரின் மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-601)

# பச்சிலைப்பள்ளி, கிளிநொச்சி அணிகள் இறுதியாட்டத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக்.19

கிளிநொச்சி மாவட்ட செயலக நலன்புரி சங்கம் மாவட்ட செயலகம், மற்றும் பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதியாட்டத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக அணி, கிளி நொச்சி மாவட்ட செயலக அணி ஆகியவை வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றன.

முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணியை எதிர்த்துக் கண்டாவளைப் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற மற்றைய அரையிறுதியாட்டத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக அணியை எதிர்த்துக் கரைச்சிப் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# வென்றது வதிரி டயமன்ஸ்

யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குருநகர் சென் றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

பாசையூர் சென்.அன்ரனிஸ் வெள்ளை அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற வுள்ள ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மரூண் அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# கிளிநொச்சி மாவட்ட செயலகம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக்.19

கிளிநொச்சி மாவட்ட செயலக நலன்புரி சங்கம் நடத்தும் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணி சம்பியனானது.

பச்சிலைப்பள்ளி மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பூநகரிப் பிரதேச செயலக அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் கிளிநொச்சி மாவட்ட செயலக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.(த-23)



வடமாகாணத்தைச் சேர்ந்த 23 நவோதயப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் வெற்றியீட்டிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியினர்.

# சிம்பாப்வேயை சிதைத்தது நியூஸி.

சிம்பாப்வே அணிக்கு எதிரான இரண்டாவது 'ரி-20' ஆட்டத்தில் நியுஸிலாந்து அணி டக் வேர்த் லூயிஸ் முறைப்படி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் இரண்டு ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' தொடரை நியூஸிலாந்து அணி 2-0 என்ற ரீதியில் கைப்பற்றியது. சொந்த மண்ணில் சோபிக்கத் தவறிய சிம்பாப்வே அணி ஏமாற்றம் அடைந்தது.

சிம்பாப்வே சென்றுள்ள நியூஸிலாந்து அணி, இரண்டு ஆட்டங்கள் கொண்ட சர்வதேச 'ரி-20' தொடரில் பங்கேற்கிறது. முதல் ஆட்டத்தில் வெற்றி கண்ட நியூஸிலாந்து அணி 1-0 என்று முன்னிலை வகித்தது. இரண்டாவது ஆட்டம் ஹராரேயில் நேற்று முன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணித்தலைவர் பிரண்டன் ரெய்லர், களத்தடுப்பைத் தேர்வு செய்தார். மழை காரணமாக ஆட்டம் 18 பந்து பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு பிரண்டன் மக்கலம், மார்டின் குப்தில் ஜோடி சுப்பர் தொடக்கம் அளித்தது. சிம்பாப்வே பந்துவீச்சை பதம்பார்த்த பிரண்டன் மக்கலம் 31 ஆவது பந்தில் அரைச்சதம் அடித்தார். முதல் இலக்குக்கு 120 ஓட்டங்கள் சேர்த்த போது பிரண்டன் மக்கலம் ( 64 ஓட்டங்கள், 6 ஆறு ஓட்டங்கள், 2 நான்கு ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஜெசி ரைடருடன் இணைந்த மார்டின் குப்தில் அரைசதம் அடித்தார். இரண்டாவது இலக்குக்கு 52 ஓட்டங்கள் சேர்த்த போது மார்டின் குப்தில் (67 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அணித் தலைவர் ரோஸ் டெய்லர் (8) 'ரன்-அவுட்' ஆனார். நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப் பட்ட 18 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்கு நஷ்டத்துக்கு 187 ஓட்டங்கள் குவித்தது. ஜெசி ரைடர் (30 ஓட்டங்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தார். சிம்பாப்வே சார்பில் ஜார்விஸ் 2 இலக்கை கைப்பற்றினார்.

டக் வேர்த் லூயிஸ் முறைப்படி சிம்பாப்வே அணிக்கு 18 பந்து பரிமாற்றங்களில் 189 ஓட்டங்கள் வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. கடின இலக்கை துரத்திய சிம்பாப்வே அணிக்கு மசகட்சா (9 ஓட்டங்கள்) மோசமான தொடக்கம் அளித்தார். அடுத்து வந்த பிரண்டன் ரெய்லர் (1) ஏமாற்றினார். பின்னர் இணைந்த சிபண்டா, சிக்கும்புரா ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டது. மூன்றாவது இலக்குக்கு 57 ஓட்டங்கள் சேர்த்த போது சிக்கும்புரா (39) ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த கோவன்ட்ரி 'டக்-அவுட்' ஆனார். மறுமுனையில் பொறுப்பாக ஆடிய சிபண்டா, அரைசதம் அடித்தார். இவர், 39 பந்துகளில் 65 ஓட்டங்கள் (5 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள்) எடுத்து ஆட்டமிழந்தார். முடிஸ்வா (22), வாலர் (12) ஓரளவு ஆறுதல் அளித்தனர். சிம்பாப்வே அணி 16.5 பந்து பரிமாற்றங்களில் 154 ஓட்டங்களுக்கு சுருண்டது. நியூஸிலாந்து சார்பில் பிராஸ்வெல், நதன் மக்கலம் தலா 3 இலக்குகள் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருது நியுஸிலாந்தின் மார்டின் குப்திலுக்கு வழங்கப்பட்டது.

(15)



# பாய்ந்தன புலிகள்; பணிந்தது தீவுகள்

பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான ஒரு நாள் ஆட்டத்தில் வங்கப் புலிகள் என்று வர்ணிக்கப்படும் பங்களாதேஷ் அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தீவுகளுக்கு பாடம் படிப்பித்தது.

முன்னதாக மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி முதலிரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்றுத் தொடரை கைப்பற்றியிருந்தது. 'ரி-20' ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது. பின்னர் நடைபெற்ற இரண்டு ஒரு நாள் ஆட்டங்களின் தோல்வியால் துவண்டிருந்த வங்கப் புலிகள் பதுங்கியிருந்து தீவுகளை நேற்று மூர்க்கமாகத் தாக்கி அபார வெற்றியைப் பதிவு செய்தது.

மூன்றாவதும், இறுதியுமான ஆட்டம் பங்களாதேஷின் சிட்டஹொங் அரங்கில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் முஸ்பகுர் ரஹீம் மேற்கிந்தியத் தீவுகள் அணியை துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதனடிப்படையில் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, வங்கப் புலிகளின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறினார்கள். ஆரம்பம் முதலே தமது நிலைகளை இழந்து கொண்டிருந்தது தீவுகள். இறுதிவரை வங்கப் புலிகளின் தாக்குதலை தடுத்து நிறுத்த முடியவில்லை. தீவுகளின் இரண்டு வீரர்கள் மட்டும் புலிகளின் தாக்குதலை ஓரளவு சமாளித்தனர். கெரன் பவல் 25, பராத் வெயிட் 11 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தனர். ஏனைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேறி 22 பந்து பரிமாற்றங்களின் முடிவில் உதிரியாக கிடைத்த 8 ஓட்டங்கள் உட்பட, 61 ஓட்டங்களுக்கு அனைத்து நிலைகளையும் இழந்து வங்கப் புலிகளிடம் சரணடைந்தது தீவுகள். மேற்கிந்தியத் தீவுகள் அணி சர்வதேச ஒருநாள் ஆட்டத்தில் இரண்டாவது முறையாக மிகக் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டமாக இருந்தாலும் மேற்கிந்தியத் தீவுகள் 22 பந்து பரிமாற்றங்களுக்குள் சகல இலக்கையும் பறிகொடுத்தனர்.

பங்களாதேஷ் சார்பில் பந்து வீச்சில் ஷகிப் அல் ஹசன் மிகச் சிறப்பாக பந்து வீசி 5 பந்து பரிமாற்றங்களுக்கு 16 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 4 இலக்குகளை கைப்பற்றினார். மேலும் ஷபயுல் இஸ்லாம், நாசிர் ஹுசைன் (3 ஓட்டங்கள் மட்டும் விட்டுக்கொடுத்து) ஆகியோர் தலா 2 இலக்குகளையும், நஸ்முல் ஹுசைன், சுஹ்ராவடி சுவோ ஆகியோர் தலா 1 இலக்கினையும் வீழ்த்தினர்.

62 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்கோடு களமிறங்கிய வங்கப் புலிகள் அணி 20 பந்து பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மட்டும் இழந்து 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி இலக்கை எட்டியது.

20 பந்து பரிமாற்ற கிரிக்கெட் போட்டி போல மிக வேகமாக முடிந்த இந்த 50 பந்து பரிமாற்ற ஆட்டத்தின் நாயகனாக 4 இலக்குகளை வீழ்த்திய, பங்களாதேஷ் அணியைச் சேர்ந்த ஷகிப் அல் ஹசன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடரை 2-1 என்ற [illegible] கில் மேற்கிந்தியத் தீ[illegible]கள் அணி கைப்பற்றியது. இந்[illegible]ணி யின் சாமுவேல் தொட[illegible]ாயகனாக தேர்ந்[illegible]டுக்கப்பட்டார். (15)



# யுனைட்டின் வேகத்தில் மண்டியிட்டது இலங்கை

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாம் நாள் முடிவில் முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் அணி இலக்கு இழப்பின்றி 27 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. முன்னதாகத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 197 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் அபுதாபியில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஷ்பா உல் ஹக் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கடும் போராட்டத்தின் மூலம் 197 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மத்தியூஸ் மட்டும் தனித்து நின்று போராடியபோதும் வேறு எந்த வீரர்களும் ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை. அனுபவ வீரர்களான சங்ககார 2, மஹேல ஜெயவர்தன 28 ஓட்டங்களையும் மாத்திரமே பெற்றுக் கொடுத்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பரணவிதாரண 37, திரிமன்னே 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

மதியபோசன இடைவேளைக்கு ஆட்டம் இடைநிறுத்தப்படும்போது இலங்கை 50 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினை மாத்திரம் இழந்திருந்தது. தொடர்ந்து தேநீர் இடைவேளைக்கு ஆட்டம் இடைநிறுத்தப்படும் போது இலங்கை 115 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்திருந்தது. பிரசன்ன ஜெயவர்தன, ஹேரத் இருவரும் ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர்.

இலங்கை அணியின் இலக்குகள் சரிந்தபோதும் சளைக்காமல் நம்பிக்கையாக மத்தியூஸ் மட்டும் துடுப்பெடுத்தாடினார். மத்தியூஸுக்கு பின்வரிசை வீரர்களான லக்மால், வெலகெதர சிறப்பான ஒத்துழைப்பை வழங்கினர். இறுதியில் இலங்கை அணி 74.1 பந்து பரிமாற்றங்களில் 197 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் மித வேகப் பந்து வீச்சாளரான யுனைட் கான் 5 இலக்குகளைச் சரித்தார். உமர்குல், சயிட் அஜ்மல் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை பாகிஸ்தான் அணி தொடங்கியது. மொஹமட் ஹபீஸ், ரபீக் உமர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இருவரும் நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுக் கொண்டனர். ஹபீஸ் 17, உமர் 8 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

இதன்படி பாகிஸ்தான் அணி இலங்கை அணியை விட 170 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாளாகும்.

(15)



"மதியபோசன இடைவேளைக்கு ஆட்டம் இடைநிறுத்தப்படும்போது இலங்கை 50 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினை மாத்திரமே இழந்திருந்த இலங்கை அணி, தேநீர் இடைவேளைக்கு ஆட்டம் இடைநிறுத்தப்படும் போது 115 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்திருந்தது."

## பிறந்தநாள் வாழ்த்து

திரு. திருமதி றொபேட் ரவீந்திரநாத்-விநோதினி தம்பதியரின் செல்வப் புதல்வி



**றொம்சிகா**

அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (19.10.2011) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாட இருக்கின்றார்.
இவரை அப்பா (பிரான்ஸ்), அம்மா, அம்மப்பா, அம்மம்மா,மாமாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்:
நவரட்ணம் குடும்பம்,
ராஜா (மாமா)

## Computer Express
**Institute of Information Technology**

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

**Advances Courses**
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை நெறிகள்
University of Madras Bsc பட்டதாரியினால் விரிவுரைகள் வழங்கப்படும்

Batch I - 19.10.2011:- 9 am or 3Pm Batch II -22.10.2011:- 11am or 3Pm
Batch III - 21.10.2011:- 9 am or 3Pm Batch IV - 23.10.2011:- 11am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

## விற்பனைக்கு

ரவுண் ஏசி வான் விற்பனைக்குண்டு
51-X X X X என்னும் இலக்கமுடையது.
**T.P. 0778798596**

**சுயாதீன....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபரும் தமது பதவிகளை இராஜினாமா செய்யவேண்டும்.

- இவ்வாறு ஆசிய மனித உரிமை ஆணைக் குழு வலியுறுத்தியுள்ளது.

கொலைச் சம்பவத்தை மூடிமறைக்க எவரும் முயலக் கூடாது. கொலையாளிகளுக்கு தண்டனைவழங்கவேண்டும் என்பதே அடிப்படையான நெறிமுறையாகும்.

பாரத லக்ஷ்மன் உட்பட 4 பேரின் கொலையுடன் துமிந்த சில்வா நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளார் என்ற சாட்சியங்கள் இருக்கும் நிலையில், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும் என்றும், குற்றவாளிகளுக்கு தராதரம் பாராது, தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பது சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கையாகும்.

அரசும், அதன் உயர் அதிகாரிகளும் துமிந்த சில்வாவை பராமரிக்கும் விதம் மூலம் சமூகத்தின் நடுநிலை தன்மை நகைப்புக்குரியதாக மாறியுள்ளது - என்றும் ஆசிய மனித உரிமை ஆணைக் குழு தெரிவித்துள்ளது

## ஏலவிற்பனை அறிவித்தல்

### தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 30.09.2010 அன்று அல்லது அதற்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஏல விற்பனைத் திகதி:**
**05.11.2011 (சனிக்கிழமை) காலை 8.30 மணி.**

| கிளையின் பெயர்: | ஏல விற்பனை நடைபெறும் இடம்: |
|---|---|
| யாழ்ப்பாணம்,<br>யாழ்ப்பாணம், 2ஆம் கிளை,<br>சுன்னாகம்,<br>மானிப்பாய்,<br>காரைநகர்,<br>திருநெல்வேலி<br>சங்கானை,<br>ஊர்காவற்றுறை | யாழ்ப்பாண கிளை<br>இல. 496, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே.இல.: 021 222 2696 |

ஏல விற்பனையை இரத்துச் செய்யும் / ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

NSB National Savings Bank
உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம், கொழும்பு-03.

## தவறிவிட்டது

பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த உலகநாதன் லோகிதா என்பவரது தே.அ.அ. (768663904V) சந்நிதி கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.
தொடர்பு: 0774668433

## தவறிவிட்டது

இல. (731850399V) எனும் கனகரத்தினம் சசிக்குமார் ஆகிய எனது NIC, லைசன்ஸ், இன்சூரன்ஸ், Tax, ATM அடங்கிய ஆவணங்கள் யாழ். பேருந்து நிலையத்துக்கும் புதுக்காட்டு சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். ஒலிம்பியா ஸ்போட்ஸ், யாழ்ப்பாணம்.
T.P.: 0212223490, 0778060267

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கொழும்புக் கிளை பழைய மாணவர் சங்க தலைவரும் சங்கப்பணிப்பாளருமாகிய



**அமரர் பூதத்தம்பி யோகநாதன்**

அவர்கள் கொழும்பில் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னார் கொழும்பு பழைய மாணவர் சங்க தலைவராக ஆற்றிய பணியினை நினைவு கூர்ந்து அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள், பழைய மாணவர்கள்,பெற்றோர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய ஆசிரியரான



**செல்வி. வாசுகி சிவஞானசுந்தரம்**

அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தால் நல்லாசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு 06.10.2011 அன்று அலரிமாளிகையில் அதிமேதகு ஜனாதிபதியிடமிருந்து "பிரதீபா பிரபா" விருது பெற்றுக்கொண்டார்.

**திருமதி அன்னலட்சுமி ஸ்கந்தராசா**

ஆசிரியர் அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தால் சிறந்த ஆசிரியராகக் கௌரவிக்கப்பட்டார்.



அவர்களைப் பாராட்டுவதுடன் அவர்கள் மேலும் பல விருதுகள் பெற்றுக் கல்விப் புலத்துக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய பாடசாலை சமூகம்.

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை-மருதங்கேணி பிரதான வீதி 10 ஆவது கி.மீ குடத்தனையில் 100 பரப்பு காணியும், பருத்தித்துறை-கொடிகாமம் வீதியில் புலோலி மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் 8 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
K.சிவா
தொடர்பு:- 0771298201

## கடை வாடகைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் முதலாம் குறுக்குத்தெரு மீன் சந்தைக்கு முன்பாக கடை வாடகைக்குண்டு.
*தொடர்பு:* பா.முரளிதரன்,
செட்டித்தெரு, பருத்தித்துறை.
0212263015

## கடை வாடகைக்குண்டு

இல. 29, இராமநாதன் வீதியில் (நாச்சிமார் கோயில் வீதி) கே.கே.எஸ். வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் 27' x 12' விஸ்தீரணமுள்ள கடை உடன் வாடகைக்குண்டு.
*தொடர்பு:* 0779220735

## பெயர் மாற்றம்

தேவாலய ஒழுங்கை, மல்லாகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த மயில்வாகனம் துவாரகா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை மயில்வாகனம் அனோஜா எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
ம.துவாரகா, தேவாலய ஒழுங்கை, மல்லாகம்.

## வாகனங்கள் விற்பனைக்கு

LEYLAND - 10 WEEL கனரக வாகனம்
LEYLAND - 06 WEEL கனரக வாகனம்
பொருள் விநியோகத்தில் இருக்கும்
ISUZU கன்டர் ரக வாகனங்கள் இரண்டு
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 985 4886,
021-222 1252

## பதவி வெற்றிடம் - கணக்காளர்

எமது நிறுவனத்தில் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:**

- பட்டயக் கணக்காளர் (ACA) அல்லது சான்றிதழ் பெற்ற கணக்காளராக (ACCA) இருத்தல் அவசியம்.
- தனியார் துறை நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தவராக குறைந்தது 8 வருடங்களாவது பணி புரிந்திருத்தல் வேண்டும்.
- கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கியல் நடவடிக்கைகளை கையாளும் திறமையுடையவராக இருத்தல் வேண்டும்.
- ஆங்கிலம், தமிழ், மற்றும் சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை வாய்ந்தவராக இருக்க வேண்டும்.

தகைமையுடையோர் முழு விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 27.10.2011ஆம் திகதிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தாபனப்பிரிவு, யூரோவில்
45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
euroville@dialognet.lk

## 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி — 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**சற்குணம் சத்தியப்பிரியன்**



ஆண்டவன் படைப்பு:
15.05.1985

அநியாய அழிப்பு:
19.10.1987

**சற்குணம் அமலினி**

தோற்றம்:
04.11.1990

மறைவு:
01.01.1994



எம் செல்வங்களே!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை
உங்கள் துயரம். ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உம்மை மறவோம்.

அரியாலை. உங்கள் பிரிவால் தவிக்கும், அப்பா, அம்மா, சகோதரர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் கணித ஆசிரியையும், பகுதித் தலைவருமாகிய திருமதி விஸ்வநாதன் கலாரஜனி அவர்களின் பாசமிகு தாய்.

## சோமசுந்தரம் நீலம்மா

அவர்களின் மறைவினால் ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவர் தம் குடும்ப உறவுகளுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம், அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.



## யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீ செட்டியந்தாழ்வு ஞான வைரவர் தேவஸ்தானம் பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான ஸ்வஸ்திபதி கர வருஷம் ஐப்பசி மாதம் 2ஆம் நாள் இன்று [19.10.2011] புதன்கிழமை விருட்சிக லக்கினமும் புனர்பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 6.05 மணிமுதல் 8.00 மணிவரையுள்ள சுபநேரத்தில் வைரவப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபனம் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு வேத சிவகாம கிரியாமணி சிவப்பிரம்மஸ்ரீ நாகேந்திர பால சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

தர்மகர்த்தா- து.கோபாலசிங்கம்.

# கண்ணீர் அஞ்சலி



உடுவில் காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் வீரபத்திரர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட

## கந்தையா முத்தையா J.P

(ஆசிரியரும் சுழிபுரம் பத்திரகாளி கோயில் ஆலய முன்னாள் பொருளாளரும் எமது சமுகத் தின் சிறந்த செயல்வீரனும்) அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பத்திரகாளியை பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீகாளிகா சிற்பாலயம் கே.கே.எஸ்.றோட், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

ஸ்தபதிகள்:- செ.பாலசந்திரன் ம.விஜயரட்ணம்

# மரண அறிவித்தல்

## அருளானந்தம் செபரட்ணம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் செபரட்ணம் கடந்த 15.10.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம்- அன்னம்மாவின் அன்பு மகனும், புஸ்பலீலாவின் அன்புக் கணவரும், ஜொய்சன், குயின்டஸ், மிர்ஜானா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவிறெஜினா, ஜெயரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனும், நிஷோக், செரோன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.10.2011) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித மிக்கேல் ஆலயத்தில் திருப்பலி இடம்பெற்று சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.

# தரம் 6 அனுமதி -2011

எமது கல்லூரியில் 2012 ஆம் ஆண்டுக்குரிய தரம் 6 இற்கான தமிழ், ஆங்கில மொழி மூலமான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் 05.11.2011ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பாடசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர், யாழ் / மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை


# VACANCIES

VACANCIES

யாழ் முன்னணி கணினி நிறுவனத்தின் கிளைகளுக்கு யாழ்ப்பாணம், சுன்னாகம்,நெல்லியடி, சாவகச்சேரி, பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- கணினிப் போதனாசிரியர் - முழுநேரம் (பயில விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்)
- சந்தைப்படுத்தல் முகாமையாளர் Marketing Manager
- வரவேற்பாளர் (Receptionist)

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம். 4188
உதயன் பப்பிளிகேசன் No.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


பாது .... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- ஜனாதிபதி செயலகம் - 11,178,273,000
- பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சு - 1,773, 000,000
- நிதிதிட்டமிடல் அமைச்சு - 124,216,174,000
- பாதுகாப்பு நகர அபி விருத்தி அமைச்சு - 230,043, 000,000
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - 104,571,330,000
- அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - 1,419,000,000
- தபால் சேவைகள் அமைச்சு - 8,199,000,000
- நிதி அமைச்சு - 423, 398,000
- மின்வலு எரிசக்தி அமைச்சு - 33,583,340,000
- சிறுவர் அபிவிருத்தி மகளிர் அமைச்சு - 949,000,000
- பொது நிர்வாக, உள்விவகார அமைச்சு - 113,623,815,000
- பொதுசன ஊடக தகவல் அமைச்சு - 2,105,000,000
- நிர்மாண பொறியியல் மற்றும் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சு - 2,787,605,000
- சமூக சேவைகள் அமைச்சு - 1,118,000,000
- கல்வி அமைச்சு - 33,266,010,000
- சுகாதார அமைச்சு - 73,999,998,000
- வெளிவிவகார அமைச்சு -6,640,100,000
- போக்குவரத்து அமைச்சு - 53,540,000,000
- பெற்றோலிய வளத்துறை அமைச்சு - 108,450,000
- துறைமுக, பெருந்தெருக்கள் அமைச்சு -144,567,530,000
- கமத்தொழில் அமைச்சு - 6,188,767,000
- தொழிலாளர், தொழில் உறவுகள் அமைச்சு - 1,520,092,000
- பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத் தொழில் துறை அமைச்சு - 822,922,000
- உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு - 129,773,139,000
- தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சு - 3,176,000,000
- தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு - 426,000,000
- பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு - 3,075,887,000
- விளையாட்டுத்துறை அமைச்சு - 2,094,000,000
- சுதேச மருத்துவ அமைச்சு - 1,204,000,000
- கடற்றொழில் நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு - 3,069,155,000
- கால்நடை வளர்ப்பு கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு -2,688,381,000
- தேசிய மரபுரிமைகள் அமைச்சு - 1,576,000,000
- நாடாளுமன்ற அமைச்சு - 358,810,000
- மீள்குடியேற்ற அமைச்சு - 481,605,000
- கைத்தொழில் வணிக அமைச்சு - 2,000, 000,000
- நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சு - 35,835,460,000
- காணி, காணி அபிவிருத்தி அமைச்சு - 5,207,580,000
- இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு - 8,617,145,000
- சுற்றாடல் அமைச்சு - 3,917,300,000
- நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு - 33,156,525,000
- உயர் கல்வி அமைச்சு - 24,470,000,000
- சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு - 4,322,000,000
- அரச வளங்கள், தொழில் முயற்சி, அபிவிருத்தி அமைச்சு - 211,115,000
- சிவில், விமான போக்குவரத்து அமைச்சு - 12,087,265,000
- கலாசார மற்றும் கலை அமைச்சு - 1,513,000,000
- தெங்கு அபிவிருத்தி அமைச்சு - 1,763,790,000
- கமநல சேவைகள் மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சு - 38,977,585,000
- வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு - 364,000,000
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலனோம்பு அமைச்சு - 392,175,000
- பொதுமக்கள் உறவுகள் மற்றும் பொதுமக்கள் விவகார அமைச்சு - 159,000,000
- தனியார் போக்குவரத்து அமைச்சு - 708,000,000
- தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சு - 68,690,000
- அரசமுகாமைத்துவ அமைச்சு - 1,086,050,000
- சிறு ஏற்றுமதி மற்றும் வள பயிர் மேம்பாட்டு அமைச்சு - 723,820,000.

(ஓ-சி)

இல (731850399V) எனும் கனகரத்தினம் சசிக்குமார் ஆகிய எனது NIC லைசென்ஸ், இன்சுரன்ஸ் Tax, ATM அடங்கிய ஆவணங்கள் யாழ். பேருந்து நிலையத்துக்கும் புதுக் கோட்டைச் சந்திக்கும் இடையில் **தவறிவிட்டது**. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
ஒலிம்பியா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.
தொ.பே- 0212223490, 0778060267

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி த. குமாரதாஸ் அவர்களின் அன்பு மாமனார்

## வல்லிபுரம் தம்பிராசா

கடந்த (03.10.2011) காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி மீரா சந்திரகுமாரியின் அன்புத் தந்தை

## கந்தையா சத்தியமூர்த்தி

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், கல்வி சாரா ஊழியர்கள்

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் சிற்பி தெ.து.ஜயரத்தினத்தின் மகன்

## ஜெயகாந்தன் (கண்ணன்)

[18.10.2011] செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகியுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்பு- 0771546726 (மகன்)

கல்லூரி சமூகம், யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 * 05 * 1946

மறைவு 03 * 10 * 2007



திதி: ஸப்தமி

## கலைத்தென்றல் கந்தன் நல்லையா

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரும், இலங்கை சினிமா திரைப்பட நடிகரும், தாசன் எஞ்ஜினியரிங் சேவிஸ் அன்கோ உரிமையாளரும்)

ஊர் புகழும் உத்தமனாய் இருந்து
பாசமுள்ள வார்த்தைகளால் எங்களை
வாழவைத்த அன்புத் தெய்வமே!
அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் பொக்கிஷமாய்

திகழ்ந்த அன்புத் தந்தையே!
வருடங்கள் நான்கு நகர்ந்தாலும்
எம் மனங்களில் உங்கள் நினைவுகள்
நீங்காது தெய்வமே!

என்றும் நினைவுடன்: திருமதி நல்லையா.

# மரண அறிவித்தல்

## கந்தையா பொன்னம்பலம்

(ஓய்வுபெற்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்)



கலைமணி வீதி, கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், D8, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது சீரணி, சண்டிலிப்பாயில் வசித்தவருமான கந்தையா பொன்னம்பலம் (18.10.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கேமதர்சினி (இத்தாலி), கேமதரன் (சுவிஸ்), அயந்தினி (கலைப்பீட 3ஆம் வருட மாணவி-யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரணிதரன் (இத்தாலி), ஞானகௌரி, குமுதன் (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு மாமனும், இலக்கியா, மிதுண், அபிநயன், அற்புதன், ஆதித்தன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2011) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லீலா வெதுப்பகம் அருகாமை, சீரணி சந்தி, சண்டிலிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.

**அரசாங்க உத்தியோகம் பாரக்க விரும்புகின்றீர்களா?**
அப்படியாயின் நீங்கள் கட்டாயமாகப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.
அப்போட்டிப்பரீட்சை எல்லாவற்றுக்கும் உரிய கட்டாயமான பாடங்களான
**பொது உளச்சார்பு**
**மொழியறிவு**
இப்பாடங்கள் அனுபவம் மிக்க இலங்கை நிர்வாக சேவையின் SLAS மூத்த அதிகாரியினால் போதிக்கப்படுகின்றன.
**புதிய பிரிவுகள் ஆரம்பம்: சனி முற்பகல் 11 மணி.**
தற்போது அஞ்சல் சேவை, SLAS பரீட்சைகளுக்குரிய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.
திசைகாட்டி
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37,சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
**0214914527**
யாழ்.நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை

# போரில் சேதமுற்ற அம்பன் வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு வெள்ளியன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.19

யுத்தத்தினால் சேதமடைந்து தற்காலிகமாக வடமராட்சி கிழக்கு குடத்தனையில் இயங்கி வரும் அம்பன் பிரதேச வைத்தியசாலை 27 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

மலேஷிய அரசின் நிதி உதவியில் புனரமைக்கப்பட்ட இந்த வைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவு, மகப்பேற்று விடுதி, வைத்தியர் விடுதி, குடும்ப நல உத்தியோகத்தர் விடுதி என்பனவும் அமைக்கப்பட்டுள்ளது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலை குடத்தனையில் தற்காலிகமாக நான்கு வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகிறது. இங்கு வெளிநோயாளர் பிரிவு மாத்திரமே இயங்கிவந்தது. இந்நிகழ்வில் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, சிறப்பு மலேஷிய உயர் ஸ்தானிகர் அஸ்மி சைனுதீன் மேர்சி மலேஷியா நிறவன நிறைவேற்று சபை உறுப்பினர் கலாநிதி ஹெங் அய்க் ஷெங்க், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.இரவீந்திரன், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.ஆர்.யூட், மருதங்கேணி உதவி அரச அதிபர் என்.திருலிங்கநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-எ-4)

# மன்னார் பாலத்தில் நேற்று விபத்து வைத்தியர், இரு படையினர் காயம்

## அந்த இடத்திலேயே வைத்தியரை விட்டுச் சென்றனர்

மன்னார், ஒக்.19

மன்னார் பிரதான பாலத்தில் நேற்று மாலை 5.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் மன்னார் வைத்தியசாலை டாக்டர் ஒருவரும் இரு கடற்படையினரும் காயமடைந்தனர்.

கடமை முடிந்து வங்காலை நோக்கி வைத்தியர் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். அதேசமயம் மன்னார் நோக்கி அதிவேக மோட்டார் சைக்கிளில் இரு கடற்படையினர் வந்துள்ளனர். வாகனம் ஒன்றை முந்திக்கொண்டு செல்ல முயன்ற படையினர் வைத்தியரின் மோ.சைக்கிளுடன் மோதியுள்ளனர்.

படையினர் சிலர் அங்கு விரைந்து வந்து சேர்ந்தனர். அந்த வேளை மன்னார் நோக்கி வந்த பஸ்ஸை மறித்து பயணிகளை இறக்கிவிட்டு, காயப்பட்ட படையினரை ஏற்றிக் கொண்டு மன்னார் வைத்தியசாலை நோக்கி விரைந்தனர். ஆனால் வைத்தியரை அவர்கள் ஏற்றிச் செல்லவில்லை.

பின்னர் மன்னார் வைத்தியசாலைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அங்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து பின்னர் வைத்தியர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பதிரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். கடற்படையினர் இருவரும் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மனிதாபிமானம் மரணித்து விட்டது என்று மன்னார் வைத்தியசாலை டாக்டர்களும் ஊழியர்களும் கவலை தெரிவித்தனர். (ஒ-601)

இந்த விபத்தில் வைத்தியர் கால் முறிந்து காயமும் ஏற்பட்டன. கடற்படையினரும் காயமடைந்தனர். காயமடைந்த வைத்தியர் காச நோய்ப் பிரிவைச் சேர்ந்த யூட்ரவி பச்சைக் என்பவர் ஆவார்.

விபத்துக் குறித்து அறிந்து கொண்ட கடற்

# மரண அறிவித்தல்கள்

## சின்னன் சுப்பு



வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னன் சுப்பு நேற்று (18.10.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னன் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், சின்னையாவின் பாசமிகு தந்தையும், இராசம்மாவின் மாமனும், இராசரத்தினம் (ஆசிரியர், மு/குரவில் தமிழ் வித்தியாலயம்), அரியகுணசிங்கம் (சிங்கப்பூர்), சிவராசா (லண்டன்), ஜீவரட்ணம் (லண்டன்), கருணாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரணி, இயற்றாலை (அத்தாய்).*

*தகவல்:* **சின்னையா (மகன்).**

## அரியதாஸ் கிரிஷாந்தன்



இல. 17/32, பண்டாரிக்குளம் நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட அரியதாஸ் கிரிஷாந்தன் 17.10.2011 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அரியதாஸ் (அதி-சுவிஸ்) புனிதா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், சோபிகா, நிருபிகன், நிரூபிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலதாஸ் (பிரான்ஸ்), லோகதாஸ் (விஜயன் - மெக்கானிக்), யோகராணி (கனடா) ஆகியோரின் பெறாமகனும், சரோசா (இத்தாலி), தயாபரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும், செல்லத்துரை, பவளம், தவமணி, காலஞ்சென்ற பூபாலசிங்கம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2011) புதன்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.17/32, பண்டாரிக்குளம், நல்லூர்.*

*தகவல்:* **க.செல்லத்துரை (பேரன்)**

## சோமசுந்தரம் நீலம்மா



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும்,கோண்டாவில் மேற்கு யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் நீலம்மா கடந்த (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சோமசுந்தரத்தின் பாசமிகு மனைவியும். புவிராஜசிங்கம் (கனடா), காலஞ்சென்ற சிவபாலசிங்கம் மற்றும் பரராஜசிங்கம், (கனடா), புவனேஸ்வரன், கலாறஜனி(ஆசிரியை யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), உதயகுமார்(கனடா), சர்வமாலா (ஆசிரியை யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்). ஆகியோரின் அன்புத் தாயும், ஞானாம்பாள்(கனடா), சறோஜாதேவி, ஞானேஸ்வரி(கனடா), இந்துமதி, விஸ்வநாதன், குலேஸ்வரி (கனடா), தர்மபுத்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியும். உமாசங்கர், அபர்ணா, சுபர்ணா, கதிர்வதனி, ராம்ஜி, மைதிலி, சிவப்பிரியா, கிருஸ்ணானந், கௌரிசங்கர், முரளிதரன், சுகிர்தரன், துஸ்யந்தி, சிவானந்தி, கௌரிதரன், வினோதினி, பிரணவன், அஸ்வினி, பரிதி, சுந்தரேஸ்வரி, கணாதிபன், மாதங்கி. ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பதுமன், வீமன், பாவை, எழில் நிலவன், சுடர், குறிஞ்சி, நதி, சரண்யா, துர்க்கா, ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்துமயானத்துக்கு

பி.ப. ஒரு மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கோண்டாவில் மேற்கு, (உப்பர்மடம் சந்திக்கு அருகில்)*

*தகவல்:* **பிள்ளைகள், மருமக்கள்.**

அனைவரும் கற்கக்கூடிய கட்டணம் MCS இல்
MOBILE NET
MCS COMPUTER SERVICES
CIMA-UK நிறுவனத்தின் Approved Listed College
CIMA-UK
Batch i : Sat 7.30-2PM
Batch ii : Sun 2-5.30PM
Batch iii : Mon- Fri 8.30AM-2PM

Qualified Lectures panel
CIMA Passing Guarantee
12 Years Experience
MCS
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
பதிவுகளுக்கும் 21.10.2011 க்கு முன் நேரில்
Full Course fee Free All Computer Diploma courses, IELTS & Diploma in Business English,TOEFL
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
SMS Your name & Course to 772395895 & Get Schol.

**கட்டடவேலைகள் செய்து கொடுக்கப்படும்**
வீடுகள், மாடிவீடுகள், கட்டடங்கள் தரமான முறையில் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: KASTURI CONSTRUCTION
T.P: 0776004454

**தேவை**
எழுதுநர், விற்பனையாளர், கணக்கு பதியக் கூடியவர்கள் (ஆண், பெண்) தேவை.
தொடர்பு: **0772174751**
**வேலை இடம்:- யாழ்.நகர்**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**22.10.2011**
**24.10.2011**
காலை 10.00மணி
அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்கமான புதிய பிரிவுகள் எதிர்வரும் 22.10.2011,24.10.2011 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகவுள்ளது.
மாணவர்கள் பதிவினை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road,Jaffna
T.P :021 222 2831 Fax : 021 222 6933
E-Mail : iis@iis.edu.lk

**களஞ்சியப் படுத்தல் வசதி உண்டு**
யாழ்.நகருக்கு அண்மையில் களஞ்சியசாலையாக (Store) பயன்படுத்தக் கூடிய பாதுகாப்பான விசாலமான பழைய கட்டடம் பாரவூர்தி நிறுத்தும் வசதிகளுடன் உண்டு. முற்பணம் செலுத்தக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். **0777110383**

# மரண அறிவித்தல்

## அன்ரன் மரியதாஸ் (செட்டி)



கிளாலியைப் பிறப்பிடமாகவும், 24/1 அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் மரியதாஸ் (செட்டி) கடந்த (17.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கனகமணியின் (இராசாத்தி), அன்புக் கணவரும், வருண்யா, லக்ஷிகா (யா/ கனகரத்தினம் மகாவித்தியாலயம், A/L வர்த்தகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறி (லண்டன்), ராதா, ராஜினி, தர்சினி, நந்தினி (இத்தாலி), சத்தியா (சுவிஸ்), ஜெகம் (சுவிஸ்), பிரசன்னா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கலா (லண்டன்), ஜெசிலி, சிவா, யோகேஸ்வரன், கணேசமூர்த்தி (இத்தாலி), கனகரத்தினம் (சுவிஸ்), தாஸன் (இத்தாலி), வசந்தி, கனகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.10.2011) புதன்கிழமை பி.ப.3 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*24/1, அத்தியடி புது வீதி,யாழ்ப்பாணம்.*

*தகவல்:* குடும்பத்தினர். (ஜெகசேனன் லோகேஸ்வரி (வசந்தா)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.